June 1934 No. 6

27 JUL 1934

# செங்குந்த மித்திரன்

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே
ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்கும் தாழ்வே




...வரும் ஒன்று யிருந்தால்............

... ச. மாணிக்கவாசக முதலியார்.
... கா. சபாபதி முதலியார்.

N34.8.6
208446

# செங்குந்த மித்திரன்

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அநுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரு. 1—8—0 வெளிநாடு ரு. 2—0—0

சந்தாதாரர்களுக்கு

1. செங்குந்த மித்திரனுக்கு ஜனவரி மாதமே (தைமீ) வருட ஆரம்பமாதலால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

2. புதிதாகச் சந்தாதாரராய்ச் சேர்வோர் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

3. சந்தாதாரர் விலாசம் மாறினல் சந்தா நெம்பரைக் குறித்து இவ்விஷ மாதம் 10-ந் தேதிக்குள் தெரிவித்து விட வேண்டும்.

4. கடிதம் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தவறாமல் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும். பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள விலாசத்திற்கு முன் குறிக்கப்பெற்றிருப்பதே சந்தா நெம்பராகும்.

## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினங்கு, தென்னாப்பிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 10

அரைப்பக்கம் ரூ. 5 கால்பக்கம் ரூ. 3

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

ஆசிரியர்: பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

| | | |
|---|---|---|
| தொகுதி—௮ | பவ௵ ஆனி௴ | பகுதி ௬ |

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | ... 302 |
| நினைவுக் குறிப்புகள் | .... 310 |
| மதிப்புரை | ... 314 |
| சின்னஞ் சிறு பாப்பாவுக்கு | ... 316 |
| சாரதாம்பாள் அல்லது கக்ஷிப் பேயின் கோளாறு | ... 317 |
| சோமுவின் காதல் | ... 321 |
| சிவகாமி—சிதம்பரனார் | ... 325 |
| பண்டைத் தமிழ்ப் பெண்கள் | ... 328 |
| விகடத் துணுக்குகள் | ... 329 |
| செங்குந்த யாத்திரைவாசி | .... 332 |
| குப்பை உயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது | ... 335 |
| இன்பத்திற்கும் வெற்றிக்கும் வழி | .... 337 |
| ரகுபதி | ... 340 |
| தமிழின் பெருமை | .... 343 |
| சமூக சீர்திருத்தமும் தொழில் தேர்ச்சியும் | ... 346 |
| வைத்தியப் பகுதி | ... 348 |
| காஞ்சிபுரம் முத்துசாமி முதலியார் | ... 350 |
| அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்! | ... 351 |
| கதம்ப வி[illegible]போகம் | ... 353 |
| நாயனுப்பிள்ளையின் சரிதக் குறிப்பு | ... 354 |
| வர்த்தமானம் | ... 355 |
| [illegible] | ... 361 |

258446

உ

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

| | |
|---|---|
| வசனமொத் தபதக் | குருநாதா |
| மலைமடப் பிடியுத் | தமிபாலா |
| அனகதத் துவமெய்ப் | பொருளானே |
| அடியனுக் குனபொற் | கழல்தாராய் |
| எனதுயிர்க் குயிரொத் | தவநீதா |
| இபமுகப் பரமற் | கினியோனே |
| தினைவனத் தெரிவைக் | குரியோனே |
| திருமலைக் குமரப் | பெருமாளே. |

—ஸ்ரீ அருணகிரிநாதர்

## சுயநலமா ? பொதுநலமா ?

"வெல், மிஸ்டர். ஜஸ்டிஸ். இது என்ன கோலம்; இப்படி தலைகீழாய் ஓடுகிறீர். உலகமே உம்மைப் பார்த்துச் சிரிப்பாய்ச் சிரிக்கிறதே. உமது அவசரத்தில் தலைகால் கூடத் தெரியவில்லையா?"

"ஹும்; நான் மட்டுமா? மிஸ்டர். காங்கிரஸ், மிஸ்டர் முஸ்லிம் லீக், மிஸ்டர் ஐக்கிய தேசியக் கட்சி முதலிய மற்றவர்களைப் பாரும். எல்லா[illegible]களும் இப்போது தலையால்தான் நடந்து தீரவேண்டும். கால[illegible] கலிகால மல்லவா! காலால் நடப்பவர்களை யார் சட்டை செய்கிறார்கள். காலால் நடப்பதைத் தலையால் நடக்கவேண்டும். தலைக்குப்போடுவதை காலுக்குப்போட வேண்டும். இப்படித் தலைப்பா மாற்றிக்கொண்டே இருந்தால் தான் ஏதாவது காரியம் பலிக்கக்கூடும். அவ்வாறின்றி நியாயம், நேர்மை, கேலி, அவமானம், கொள்கை என்று அதிலேயே ஒரு இஞ்சிகூட நகராமல் அழுத்தமா யிருந்தால் நாம் கிரேதா யுகத்துக்குத்தான் திரும்பிப் போகவேண்டும். உங்களைப்போன்ற சாதாரணப் பேர்வழிகள் எப்படி யிருந்தாலும் கேள்வி யில்லை. நாங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் பல்டி யடிக்காவிட்டால்—கரணம் போடாவிட்டால் காரியம் பலிக்கிறதில்லை. சரி; போய்வாருங்கள். ஞாபக மிருக்கட்டும். இன்னும் நான்கு மாதங்களே இருக்கின்றன."



"நான்கு மாதமா? நீர் புதுமாப்பிள்ளை யல்லவே. உமக்குக் கல்யாணம், சோப......மெல்லாம் முடிந்து அநேக வருஷங்களாச்சே. இப்போது தீபாவளியைப் பற்றி உமக்கென்ன கவலை!"

"என்னுங்காணும். கர்நாடகமா யிருக்கிறீர். நீர் இந்த உலகத்தில் இல்லையோ! கல்யாணமாவது, வைபோகமாவது. இந்தியாவின் கொந்தளிப்பு உமக்குத் தெரியாதா?"

"என்ன! என்ன! மறுபடியும் ஏதேனும் பெரிய பூகம்பம் உண்டா?"

"இல்லைங்காணும். எல்லாம் உங்கள்போன்ற பாமர மக்களின் நன்மைக்காகத்தான், தேர்தல் அமளியில் நாங்கள் தலையிட்டுக் கஷ்டப்பட வேண்டி யிருக்கிறது."

"ஓ, ஹோ! அந்தச் சனியனா. என்னிடம் சொல்லாதே. தேர்தலைக் கேட்டாலே என் தலை கிறுகிறுத்துச் சுழலும். எத்தனை பேருக்கு ஒரு மனிதன் பதில் சொல்லித் தொலைப்பது!"

இவ்வாறு வெகு நேரம் பேச்சு நடந்தது. இது முற்றும் உண்மையே. இந்தியாவிலுள்ள கட்சிகளெல்லாம் தலைகீழாய் நடக்கத் தொடங்கிவிட்டதை நாம் கண்ணால் பார்க்கிறோம்.

சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம், பகிஷ்காரம் என்று ஆரம்பித்த தேசிய மகாசபை எல்லாவற்றையும் கைவிட்டு, அரசாங்கத்துடன் தோள்கோத்து, 'பிரிட்டிஷ் மன்னர் ஆளுகைக்கு உட்பட்ட நான், ராஜ விஸ்வாசத்துடன் நடந்து கொள்ளுவதாக உறுதி கூறுகிறேன்" என மார் தட்டிப் பிரமாணஞ் செய்யப் புறப்பட்டுவிட்டது.

"வெள்ளை அறிக்கையைக் கிழித் தெறியுங்கள். அதில் கூறப்பட்டுள்ள சமூகத் தீர்ப்பு மிகவும் அநீதி வாய்ந்ததாகும்' என வறட்டுக் கூச்சலிட்டுத் திரிந்த முஸ்லீம் லீக் இன்று 'ததாஸ்து' பாடத் தொடங்கிவிட்டது.

பார்ப்பனர் என்றால் உறுமிக் கொண்டிருந்த ஜஸ்டிஸ் கட்சி இன்று தோளோடு தோள் உராய அவர்கள் க்ஷேமலாபங்களை விசாரிக்கத் துவங்கிவிட்டது.

"வாங்க அண்ணே. நெடுநாளாக எண்ணந்தான். அந்த நாயரும்,—செட்டியாரும் நம்மைப் பிரித்து வீண் கலாட்டா செய்து விட்டார்கள். இனி நாம் பிரிந்திருப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நாங்கள் இப்போது முன்போல் இல்லை, கொஞ்சம் பருத்துக் கொழுத்து இருக்கிறோம். ஆனால், அதோ பார்,

அந்தக் காங்கிரஸ் இருக்கிறதே, அதைப் பார்த்தால் இன்னும் கொஞ்சம் நடுக்கமாய்த்தான் இருக்கிறது. உமது ஒத்தாசையிருந்தால் எப்படியாவது தந்திரத்தினால் வென்றுவிடலாம். நீங்களும் பழைய முரட்டுத்தனத்தைவிட்டு சாந்தமாய்விட்டீர்கள். இனி எங்களுக்குக் கெடுதி செய்யமாட்டீர்களென்று நினைக்கிறேன். உங்களுக்கும் நாங்கள் வேண்டிய ஒத்தாசை செய்கிறோம். நாம் இருவரும் ஒன்றாயிருந்தால், ஆஹா! அந்த காங்கிரஸ் இங்கே தலை காட்டுமா?'' என்று பிராம்மணரிடம் ஜஸ்டிஸ் கட்சி கூறுகிறது. அவர்களுக்கும் கொஞ்சந்தானே வேண்டும். 'தயார்' என்று கூறுகிறார்கள்.


பார்ப்பனரல்லாதார் கட்சி—இல்லை—இப்போது ஜஸ்டிஸ் கட்சி (பழைய ஞாபகம் வந்துவிட்டது) பார்ப்பனர்களுடன் உறவு கொண்டாட ஏழெட்டு வருஷமாகவே சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தது. எட்டு வருஷங்களுக்கு முன் கோவையில் கூடிய ஜஸ்டிஸ் மகாநாட்டில் (அப்போது பார்ப்பனரல்லாதார் மகாநாடு) இந்த விஷயம் அநேகருடைய மனதைத் துளைத்துக் கொண்டிருந்தது. ஆனால், அப்போது பொதுநல வாதிகள் கட்சியில் அதிகமாக இருந்ததால் எதிர்ப்பு பலமாய் ஏற்பட்டு அந்த விஷயம் அங்கு பேச்சு மூச்சற்றுப் போய்விட்டது.

காலம் அப்படியே போகுமா? சுயநல மோகம் ஒவ்வொருவரது தலையையும் பிடித்து ஆட்டுகிற இந்தக் காலத்தில் அது முடியுமா? சிற்சில சிறிய அலைகள் இப்போதும் இந்த விஷயத்தை எதிர்த்து மோதினவாயினும், கட்சியின் தலைவர் பொப்பிலி அரசர் அதற்கு இளைக்கவில்லை? அந்த அலைகளைக்கொண்டே அவ் விஷயத்தை எப்படியோ கரை சேர்த்துவிட்டார்.

7-4-34. மாலை 3-30-மணி. பொப்பிலி ராஜாவின் பங்களாவில் ஜஸ்டிஸ் கட்சியார் கூடினர். டாக்டர் நடேச முதலியார், கி. ஆ. பே. விஸ்வநாதம், டி. வி. சுப்பிரமணியம் முதலியோர் பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்க்கக் கூடாதென்றும், அதனால் கட்சிக் கொள்கையே அழிந்துவிடுமென்றும் வாதாடினார்களாம். ஆனால் 8-ந் தேதி பகல் தியாகராயர் ஞாபகச் சின்ன கட்டடத்தில் கூடிய தென்னிந்திய நலவுரிமைச் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில், முதல் நாள் எதிர்த்தவர்களாகிய நடேச முதலியார், கி. ஆ. பே. விஸ்வநாதம் இவர்களாலேயே பிரேரேபிக்கப்பட்டும், ஆமோதிக்கப்பட்டும் பார்ப்பனரல்லாதார் கட்சியில் பார்ப்பனரை சேர்த்துக்கொள்ளும் தீர்மானம் யாதொரு விவாதமுமின்றி நிறைவேறிவிட்டதாம். ஐயோ! இது என்ன விந்தை. பார்ப்பனரல்லாதார் கட்சியில் பார்ப்பனரை எப்படி



சேர்க்க முடியும், அவர்கள்தான் எப்படி சேர்ந்தார்கள் என்று கேட்கிறீர்கள். நல்ல கேள்விதான். ஆனால், இதற்குக் காரணமில்லாமற்போகவில்லை. பார்ப்பனரல்லாதார் இப்போது அந்




—நாம் இருவரும் ஒன்றாயிருந்தால்............

தஸ்து, ஆசாரம், அறிவு எல்லாவற்றிலும் கொஞ்சம் உயர்ந்து பாதி பார்ப்பனராக, இந்தப் பார்ப்பனர்களும் எல்லாவற்றிலும் படிப்படியாய் இறங்கி வந்து பாதி பார்ப்பனரல்லாதார்களாய் விட்டார்களாம். எனவே இருவரும் இப்போது சம நிலையில் இருக்கிறார்களல்லவா? சம நிலையில் உள்ளவர்களை சேர்த்துக் கொள்ளாவிட்டால் நியாயக் கட்சிக்கு (ஜஸ்டிஸ்=நியாயம்) என்ன பெருமை இருக்கிறது?

பார்ப்பனரைச் சேர்க்கும் விஷயத்தில் பரம விரோதிகளாயிருந்த ஈ. வே. ராமசாமியும், ஊ. பு. அ. சௌந்தர பாண்டியனுமே "இதன் அனுபவமானது பின்னால் நமக்கு ஒரு நல்ல படிப்பினையையும், நன்மையையும் உண்டாக்கினாலும் உண்டாக்கலாம். எனவே, கட்சிக்காக முன்னணியில் நிற்கும் தலைவர்கள், கட்சி நன்மையை உத்தேசித்துச் செய்யும் காரியத்தில் ஆட்சேபணை செய்துகொண்டிருக்க நாங்கள் விரும்பவில்லை'' எனக் கூறினார்களென்றால் வேறு என்ன வேண்டும். இதைக்கேட்டு அநேகர் அச்சரியப்படுவார்கள்.

ஆனால் நம்மைப் பொருத்த வரையில் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை; 'இந்தே பெரிய மனிதன் கையைப் பிடித்தால்..................' என்பது இந்தியப் பழமொழி யல்லவா?

தமிழ் நாட்டிலுள்ள அனைவரும் சகோதரர்களாகையால் பிராம்மணர்களை கட்சியில் சேர்த்துக்கொள்வது மிகவும் நல்லதே. அதை ஆட்சேபிப்பவர்க ளில்லை. என்றாலும், பொது ஜனங்களின்—யாருடைய தயவினால் கட்சியின் தலைவர்களாக இவர்கள் வந்தார்களோ அந்தப் பாமர மக்களின் நன்மையைக் கருதி பிராம்மணர்கள் சேர்க்கப்படுகிறார்களா? அல்லது, தலைவர்களின் நன்மையை மட்டும் உத்தேசித்துச் சேர்க்கப்படுகிறார்களா என்பதே கவனிக்கத்தக்கது.

“சமூக இயக்கமா யிருப்பதால் பிராம்மணர்களுக்கு நமது கட்சியி லிருக்கும் தடையை நீக்கிவிட்டால் காங்கிரசுடன் தேர்தலில் போராட சிறந்த அரசியல் கட்சியாகிவிடும்” என்று கட்சியின் தலைவர் கூறுவதி லிருந்து, தேர்தலில் கட்சியின் வெற்றியொன்றைமட்டும் உத்தேசித்து பிராம்மணர்கள் சேர்க்கப் படுகிறார்க ளென்றும், ஏழை வாக்காளர்கள் தற்போது அடைந்து வரும் கஷ்ட நிலையைப்பற்றி சிறிதேனும் இவர்கள் சிந்திக்கவில்லையென்றும் வெளிச்சமாகத் தெரிகிறது. அப்படியாயின் தேர்தலில் கண்டிப்பாய் இக்கட்சியார் தோல்வியே அடைய நேரிடு மென்பதையும், செல்வத்தையும் செல்வாக்கையும் கண்டு வாக்காளர்கள் இனி ஏமாற மாட்டார்க ளென்பதையும் முன்னதாக எச்சரிக்கிறோம்.

“ஜஸ்டிஸ் கட்சி என்றால் மாதம் 4000 ரூபா சம்பளத்துக்கும், மந்திரி பதவிகளுக்கும் ஊர் சிரிக்கச் சண்டை போட்டிருக்கும் கூட்டம் என்றும், முதலாளிமார்கள் கட்சியே ஒழிய பொதுமக்கள் கட்சி அல்ல வென்றும் சொல்லப்படுவது மிகமிக சகஜ மாகிவிட்டது. இதை பொய்யாக்கிக் காட்டாவிட்டால் உண்மை உழைப்பாளிகளுக்கு இதைவிட அவமானம் வேறு வேண்டியதில்லை. ஆதலால், தகுந்த வேலைத் திட்ட முறைகளை ஏற்படுத்தி ஏழைப் பொது மக்களுக்குப் பயன்படத் தக்க முறையில் உழைத்தாகவேண்டும்” என்று ஈ. வே. ரா. கூறிய பொன்மொழியை ஏற்றுக்கொண்டு, ஏழை மக்களின் கஷ்ட நிவாரணத்திற்குத் திட்டம் போட்டு உழைக்க ஜஸ்டிஸ் கட்சியார் முன் வருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.


பார்ப்பன ரல்லாதார்களுக் குள்ளேயே தேர்தல் போட்டியினாலும், உத்தியோகப் போட்டியினாலும் அவ்வப்போது சச்



சரவுக ளேற்பட்டு கட்சியில் பிளவுகள் பல தோன்றுவதுண்டு. இனி பார்ப்பனர் போட்டியும் சேர்ந்தபின் ஏழை மக்களைப் பற்றி நினைப்பதற்கும் காலம் இருக்குமா, அவர்களுக்காக உழைப்பார்களா என்பது பொறுத்துப் பார்த்தால்தான் தெரியும்.

## அந்தோ! பிரிந்தனரே

குடியேற்றம் ஸ்ரீ. மா. ஆ. வேலாயுத முதலியாரவர்கள் நீர்வியாதி சம்பந்தமாக வலது கையில் ஏற்பட்ட ரணத்திற்காக, சென்னையில் டாக்டர் பாண்டலேவிடம் எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் குணமடையாமல், 18-5-34ந் தேதி இரவு இவ் வுலகம் நீத்தமை கேட்டு மிகவும் வருந்துகின்றோம். நமது சமூக இயக்கத்தில் மிகவும் அபிமானமும் ஆர்வமும் காட்டி வந்தவர்களுள் ஸ்ரீ முதலியாரும் ஒருவர். நமது ஐந்தாவது மகா நாட்டைக் குடியேற்றத்தில் மிக்க சிறப்பாக விரைவிலேயே நடத்திப் பார்க்கவேண்டுமென மிகுதியும் ஆவல்கொண்டிருந்தார்கள்.



காலஞ்சென்ற ஸ்ரீ மா. ஆ. வேலாயுத முதலியாரவர்கள்

செல்வமும் செல்வாக்கும் நிரம்பப்பெற்ற இவர், ஆடம்பர மென்பதைச் சிறிதும் அறியாதவராய் நடத்திய தூய எளிய

வாழ்க்கை இன்றும் எமது கண்களின் முன் காட்சி தருகின்றது. மிகச் சாந்தமாகவும், இனிமையாகவும், ஆணித்தரமாகவும் இவர் பேசுவதைக் கேட்கும் எவரது உள்ளமும் இவரிடம் ஐக்கியப் பட்டுவிடும். இவரது பெருமையினைப்பற்றி தமிழ்நாடு ஆசிரியர் எழுதியுள்ளதைக் கீழே தருகிறோம்.

"குடியாத்தம் ஸ்ரீ மா. ஆ. வேலாயுத முதலியாரவர்கள் காலஞ் சென்றதைக் கேட்டு மிகவும் துக்கப்படுகிறோம். குடியாத்தம் முனிசிபல் சேர்மனாகவும், தாலூக்கா போர்டு தலைவராகவும் இருந்து இவர் செய்துள்ள நல்ல காரியங்களை வடார்க்காடு ஜில்லா மகாஜனங்கள் ஒரு நாளும் மறக்க முடியாது. மிகவும் எளிய நிலைமையி லிருந்து தம்முடைய முயற்சியாலும், ஒழுக்கத்தாலும் உயர் நிலை யடைந்த ஸ்ரீ முதலியார் இறந்துபோனது யாவருக்கும் துக்கத்தை விளைவிக்கு மென்பதில் சந்தேக மில்லை. ஜனங்களுக்கு இவர் செய்துள்ள சேவைகளுக்கு நன்றியாக ஸ்ரீ முதலியாரின் திருவுருவப் படத்தை, குடியாத்தம் முனிசிபல் சபையிலும், தாலூக்கா போர்டு ஆபீசிலும் முறையே டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவும், சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியாரும் பிரதிஷ்டை செய்து வைத்த வைபவம் சமீபத்தில்தான் நடைபெற்ற தாகையால், காலஞ்சென்ற பெரியாரின் பெருமைகள் யாவருக்கும் ஞாபக மிருக்கலாம். நமது துக்கத்தை அவருடைய குடும்பத்தார்க்கும், அவரது மைத்துனர் ஸ்ரீ கா. அ. சண்முக முதலியாருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்."

இவ்வாறு மற்றவர்களெல்லாம் புகழும்படி வாழ்ந்த ஸ்ரீ முதலியாரது பிரிவு, செங்குந்த உலகத்திற்கோர் பெரு நஷ்டமே யாகும். நமது அனுதாபத்தை அவரது புதல்வர்களாகிய துரைசாமி முதலியார், சாமிநாத முதலியார் முதலியவர்களுக்கும், அவரது குடும்பத்தைச் சார்ந்த மற்றவர்களுக்கும், உறவினர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## இந்த வேலை எதற்கு ?

கோயமுத்தூர் ஜில்லாவில் செங்குந்த மகாஜன மகாநாடு என்ற பெயருடன் ஆண்டுதோறும் ஒரு மகாநாடு கூட்டப் பெறுகிற தென்பதும், அந்த மகாநாட்டைச் சேர்ந்தவர்களும், உண்மைச் செங்குந்தர்களும் தனித்தனி வெவ்வேறு சமூகத்தைச் சார்ந்தவர்களென்பதும் யாவரும் அறிந்ததே. எவர், எந்தப் பெயரில், எந்த மகாநாட்டைக் கூட்டினாலும் கூட்டட்டும். ஆனால், மகாநாட்டைக் கூட்டுவோர் பொறுப்பும், கண்



ணியமும் வாய்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

சென்ற மாதத்தில் கூட்டப்பெற்ற இவர்களது மகாநாட்டின் வசூலுக்காகச் சென்ற சிலர் நடந்துகொண்ட தன்மையானது, நியாய புத்தி உடையவர் பலராலும் அருவருக்கத்தக்கதாக இருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் உளுந்தூர் பேட்டை, கொணலவாடி முதலிய அநேக ஊர்களுக்கு இவர்கள் சென்றபோது சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமும், கோவை சங்கமும் ஒன்றென்றும், செங்குந்த மித்திரனை வெளியிடுவோர் தாங்களே என்றும், மித்திரனுக்குச் சந்தாதார் இப்போது மிகவும் குறைந்துவிட்டதால் சந்தாத் தொகை ஒரு ரூபாயாகக் குறைக்கப்பட்டதென்றும் அறிவித்து, பழைய சந்தாதார்களின் விலாசத்தை எவ்வாறோ அறிந்துகொண்டு சந்தா பாக்கி தரும்படி அவர்களைக் கேட்டதோடு, புதிய சந்தாதாரர்களாகச் சிலரைப் பதிவு செய்துகொண்டு ஒரு ரூபாய் வீதம் சந்தா வசூலித்துச் சென்றதாகவும், இந்த யோக்கியமற்ற செயலுக்கு ரத்தினம் என்ற ஒருவர் முதன்மை வகித்ததாகவும் தெரிகின்றது. ஒரு சமூகத்தைச் சீர்திருத்துவதற்கென்று புறப்பட்டு மகாநாட்டை நடத்துகின்ற மகாநாட்டுப் பொருப்பாளிகளே இவ்வாறு பொருப்பற்ற முறையில் நடந்து கொள்ளுவதைப் பார்த்து நாம் வருத்தப்படுவதோடு, அவர்களை அழுத்தமாய் கண்டிக்காமலிருக்கவும் முடியவில்லை. இனியேனும் இத்தகைய செய்கை நடவாதென்று நம்புகிறோம்.

ஒன்றுந் தெரியாத பாமர ஜனங்கள் ரசீது வாங்காமலே பணம் செலுத்தி யிருக்கிறார்கள். சந்தாதாரர்கள் இவ் விஷயத்தில் இனி ஜாக்கிரதையா யிருக்குமாறு எச்சரிக்கிறோம்.

நமது சங்கப் பிரசாரகர்களாகத் தற்போதுள்ளவர்கள் திருவாளர்கள் சென்னை தி. அ. சண்முக முதலியார், கல்லாலம் பூண்டி ச. நா. குமரகுரு முதலியார், மாணம்பதி சு. திருநாவுக்கரசு முதலியார் ஆகிய மூவருமேயாவர். இவர்கள் வெளி ஜில்லாக்களில் பிரசாரத்திற்காகச் சுற்றுப் பிரயாணஞ் செய்யும்போது சந்தா வசூலும் செய்வதுண்டு. எனவே, இவர்களைத் தவிர புதிதாய் வருகின்ற எவரிடமும் சந்தா செலுத்தக் கூடாதென்றும், மித்திரன் காரியாலயத்து அச்சிட்ட ரசீது பெறாமல் ஒருவரிடமும் சந்தாத் தொகை தரக்கூடாதென்றும் சந்தாதார்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

# நினைவுக் குறிப்புகள்

## ஹிட்லரின் போட்டிப் பரிசு.

'உங்கள் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பாருங்கள்; ரொக்கப் பரிசு ரூபா 2500', 'மிகச் சுலபமான மாற்றெழுத்துப் போட்டி ரூபா 3000' என்ற கொட்டை எழுத்துக்கள் எந்தப் பத்திரிகையை எடுத்தாலும் அதன் முகப்பில் கண்களைப் பறித்துக்கொண்டு நிற்கிறது. ஆனால் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பார்த்து புளித்துப்போய் 'இந்த அதிர்ஷ்டம் நமக்கு வேண்டாம்' என அநேகர் பல்லைக் காட்டுகிறார்கள். இந்த அதிர்ஷ்டப் போட்டி இப்பொழுதேற்பட்டதாயினும், பொதுவாகப் பரிசு தரும் வழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஒரு தொழிலில் அல்லது கல்வியில், அல்லது தேக பலத்தில் உற்சாகம் ஏற்படுவதற்காகப் பரிசு வழங்குவது பண்டைய நாள் முதல் இன்றுவரை வருகின்ற வழக்கமாம். ஆனால், ஜெர்மனியில் ஒரு நூதன போட்டிப் பரிசு இன்று ஏற்பட்டிருக்கிறது.

ஜெர்மன் சான்சலர் ஹிட்லர் ஏற்படுத்தியிருக்கும் போட்டிப் பரிசு உலகத்திலேயே இதுவரை நாம் கேள்விப்படாத ஒன்று. இந்தியர் கொள்கைக்கும் சாஸ்திரத்திற்கும் முற்றும் முரணுடையது. 'ஐந்துக்குமேல் அரசனும் ஆண்டி' என்பது நமது பழமொழி. ஐந்துக்குக் குறைவாகவே பிள்ளைகளைப் பெறவேண்டுமென்பதும், அதற்கு மேற்படின் தரித்திரம் தலைகாட்டுமென்பதும் இந்தியர் கருத்து. ஆனால், ஜெர்மனியில் அதிக குழந்தைகள் பெற்றவர்களுக்கெல்லாம் ஹிட்லர் பரிசு வழங்கத் தீர்மானித்திருக்கிறார். பெர்லினில் மட்டும் இதுவரை 2000 பேர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. நாலுக்கு மேற்பட்டு குழந்தைகள் பெறுகின்றவர்களுக்கெல்லாம் பரிசு தரப்படுமாம். இதற்கு ஹிட்லர் கூறும் காரணம் விநோதமாகவே இருக்கிறது.

"குழந்தைகள் அதிகமுள்ள குடும்பங்களில் பிறந்த பிள்ளைகளே அதிகம் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் பிறக்கும் முதல் மூன்று பிள்ளைகளைக் காட்டிலும் நான்காவதும் அதற்குப் பிறகும் பிறக்கும் குழந்தைகளே அதிக அறிவும் நுட்பமும் வாய்ந்திருக்கின்றன. ஜெர்மனி சம்பந்தப்பட்டவரையில் கிரேட் பிரடரிக், பிஸ்மார்க், காண்ட் முதலியவர்கள் அவர்களது பெற்றோர்களுக்கு நான்காவது புத்திரர்கள். பேர்பெற்ற மேதாவிகளான சூமான், ரெம்பிராண்ட் 5வது குழந்தைகள்.



சிறந்த சங்கீத நிபுணரான மெஜார்ட், புலூச்சார் 7 வது பிறந்தவர்கள். பாச் எட்டாவது பிறந்தவர். வாக்னர் 9 வதுபிறந்தவர். சூபெர்ட்கார் 12-வது குழந்தை."

இதுபோன்ற இன்னும் பல மேதாவிகளின் நிலையை ஆதாரமாகக் கொண்டே ஜெர்மனியில் சகலரும் அதிக புத்திரர்களைப் பெறவேண்டுமென ஹிட்லர் விரும்புகிறார்.

பிள்ளை பெறுவதற்கும் போட்டிப் பரிசா!

## புகைப்படம் கொண்டுவா

கொஞ்சமா! எத்தனை புதிய சட்டங்கள்! எவ்வளவு புதிய உத்தரவுகள்! எல்லாவற்றையும் சேர்த்து அளந்தால் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் சரியாகப் போகும். இவ்வளவு அடக்குமுறைச் சட்டங்களுக்கிடையே புரட்சி இயக்கமானது பலமாக வேரூன்றி வருவது ஆச்சரியமாகவே இருக்கின்றது. புரட்சி இயக்கத்தால் இந்தியாவுக்கு ஒருநாளும் விமோசனம் ஏற்படப் போவதில்லை. அவ்வியக்கம் இந்தியாவினின்றும் வேரறக் களைந்தெறியப்பட வேண்டியது மிக அவசியமேயாகும். மகாத்மா முதல் பெரிய தேசியத் தலைவர்களெல்லாம் இதே கருத்தை வெளியிட்டு வருகிறார்கள்.

புரட்சிக்காரர் மொத்தத்தில் பார்ப்போமானால் வடநாட்டில் இலட்சத்திற்கு ஒருவர் இருக்கலாம். இந்த அற்ப தொகையினருக்காக அங்குள்ள இந்து வாலிபர்களனைவரும் அவ்வப்போது துன்பம் அனுபவிக்க நேர்கிறதென்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். சிட்டகாங் இந்துக்கள் எவ்வளவோ துன்பத்தை அடைந்து வருகிறார்கள். இப்போது டார்ஜீலிங்கிலுள்ள இந்துக்களும் அதே கஷ்டத்தை அனுபவிக்க நேர்ந்திருக்கிறது.

4-6-34க்குப் பின் 14 வயதுக்குமேல் 24 வயதுக்குட்பட்ட இந்து வாலிபர்களனைவரும் தங்கள் புகைப்படங்களுடனும், அவர்களுக்குத் தெரிந்த இரண்டு உத்தியோகஸ்தர்களின் கையெழுத்துக்களுடனும் வந்தால்தான் டார்ஜீலிங்குக்குள் அனுமதிக்கப் படுவார்களென்றும், அவர்கள் தங்களுடன் அனுமதிச் சீட்டை கொண்டுபோக வேண்டுமென்றும் டார்ஜீலிங் டிப்டி கமிஷனர் ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். இந்த உத்தரவினால் இந்து வாலிபர்கள் பலவித சங்கடங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கலாம். சில சமயங்களில் அவர்களின் வயதை நிர்ணயித்துக் கூறுவது முடியாமற் போகலாம். 12 வயதுடைய இளைஞர்கள் செல்வாக்கான போஷணையினால் 15 வயதாகத் தோன்றலாம். 26 வயதுடையார் வளர்ச்சிக் குறைவினால் 20 வயதாகத் தோன்றலாம். இத்தகையவர்கள் நிரபராதிகளா

யிருப்பினும் வீணாகத் தொந்தரவுகள் அனுபவிக்க நேருமென்பதில் சந்தேகமில்லை. எனவே இந்த வீண் தொல்லைகள் ஏற்படாத வகையில் புரட்சி இயக்கத்தை அடக்க அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களென எதிர்பார்க்கிறோம்.

## ஜாக்கிரதை! மோட்ச வீடு நிறைந்துவிடப்போகிறது!

என்ன ஐயா சொல்லுகிறீர். இப்பொழுதுதான் உமது மனைவி கர்ப்பமா யிருக்கிறாளென்று சொல்லுகிறீரா! இருந்தாலென்ன? அந்தப் பிண்டத்திற்கு திருமணச் சடங்கை உடனே நிறைவேற்றி வைத்துவிடும். இது என்ன அசம்பாவிதம் என்கிறீர். என்ன செய்வது. உமது குழந்தையின் திருமணத்தைப் பார்க்க விருப்ப மிருந்தால் அப்படித்தான் செய்ய வேண்டும். உமது மனைவிக்கும் எதாவது ஏற்பாடு செய்து வைத்துவிடும். இந்த உலகத்தில் இனி எவரும் நெடுநாள் வசிக்கப் போவதாக நினைக்க இடமில்லை, நான் சொல்லுவது ஒன்றும் உமக்கு விளங்கவில்லையா?

கும்பகோண புண்ணிய க்ஷேத்திரத்தில் சில தினங்களுக்கு முன் ஒரு புனித காரியம் நடந்ததே உங்களுக்குத் தெரியுமா? ஆமாம். 23 ஆடுகள் மோட்சத்திற்கு அனுப்பப் பட்டனவென்று சொல்லுகிறீர்கள். அந்த 23 அற்பப் பிராணிகளை மட்டும் முத்திக்கு அனுப்பவா புரோகிதர்கள் இவ்வளவு கஷ்டப்பட்டார்கள்! இல்லவே இல்லை. அதன் உறவின ஆடுகளையெல்லாம் சேர்த்தே அனுப்பியிருக்கிறார்கள். ஒரு வைதீகர் சொல்லுவதைப் பாருங்கள். "யாகத்தில் பலியாகும் மிருகம் சம்சார சாகரத்தினின்றும் விடுபட்டு, கர்மாவின் தொந்தங்களினின்றும் நீங்கி மோட்சமடைவது உறுதி. அதுமட்டுமன்று. அதன் உறவுள்ள மிருகங்களும் அப்பதவியை அடையும். ஆகவே புரோகிதர்கள் காருண்ய மூர்த்திகள்; பரந்த நோக்கமுடையவர்கள்"

இதுவே வைதீகர் வாக்கு. முத்தியைப் பெறுதற்குத் தமது உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்யத் தயாராயிருப்போர் இனி ஏன் தயங்கவேண்டும். இந்தப் பரந்த நோக்கமுடைய காருண்ய மூர்த்திகளாகிய புரோகிதர்களிடம் செல்லுங்கள். ஒருவரது பீஜ மர்த்தனத்தால் உறவினரனைவரையும் சேர்த்து முத்திக்கு அனுப்பிவிடுவார்கள். ஆனால் ஒன்று ஞாபகமிருக்கட்டும். நீங்கள் முத்திக்குப்போக விரும்பினால் உங்கள் உறவினரெல்லாம் தங்கள் கடைகளைக் கட்டிவிட்டு மோட்சத்திற்குத் தயாராக இருக்குமாறு முன்னதாக எச்சரிக்கை செய்துவிடுங்கள்.



இவ்வளவு கஷ்டப்பட்டு எத்தனையோ உயிர்களை பீஜ மர்த்தனம் செய்து மோட்சத்திற்கு அனுப்பும் புரோகிதர்களுக்குக் கிடைப்பது என்ன தெரியுமா? ஒவ்வொரு புரோகிதரும் யாக சேஷத்தில் ஒரு கழக்கோடிப் பிரமாண மாமிசந்தான் நெய்யில் போட்டு விழுங்கினார்களாம். பண்டித வைத்தியநாத சாஸ்திரிகள் இதைப்பற்றி கூறும்போது "பிராம்மணர்களுக்கு மாமிசம் சாப்பிட விருப்பமில்லை. இருந்தால் நாலாயிரம் - ஐயாயிரம் செலவு செய்து ஒரு கழக்கோடிப் பிரமாணம் சாப்பிட்டுத் திருப்தி யடையமாட்டார்கள்" என்று தெரிவித்தாராம்.

சுவாமிகளே! மாமிசம் சாப்பிட உங்களுக்குப் பிரியமிருப்பினும் சரி, இல்லாவிடினும் சரி. அதைப்பற்றிய கவலை எமக்கில்லை. ஆனால், ஆடுகளின் விருப்ப மின்றியே தாங்கள் அவைகளை வலிய மோட்சத்திற்கு அனுப்பி மோட்ச லோகத்தை நிரப்பிவிடாதீர்கள். பிறகு உங்களுக்கு இடமில்லாமல் போய் விடப்போகிறது.


## தெய்வீக ஜோதிஷம்

உங்கள் ஜனன கால விவரம் அல்லது ஜாதக நகல் எதாவதொன்றை குறிப்பிடவும்; அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரமும், சுமார் வயதும் தெரிவித்தால் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் பலன்களை சாஸ்திரீயமாக எழுதி அனுப்புகிறோம்.

| | | |
|---|---|---|
| ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத | ... ரூ. | 2-0-0 |
| 5-வருஷங்களுக்கு மாதவாரி | ... ரூ. | 7-8-0 |
| ஒரு வருஷம் வாராந்திர பலன் | ... ரூ. | 10-0-0 |
| எதிர்கால சம்பந்தமான 5-கேள்விகளுக்கு பதில் எழுத | ... ரூ. | 1-0-0 |
| மேல் ஒவ்வொரு கேள்விக்கும் | ... ரூ. | 0-4-0 |
| வி. பி. செலவு | ... ரூ. | 0-4-0 |

சென்னை ஆந்திர பத்திரிகை எழுதுவதாவது :—"இவரது ஜோதிஷத் திறமையை நாம் மனப்பூர்வமாக விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம்."

சென்னை சுதேசமித்திரனில் ஸ்ரீமான் மணி எழுதுவது:— "எதிர்காலத்தை அறிந்து சொன்ன இந்த ஜோதிஷருக்கு வந்தனம் செலுத்தவேண்டும்."

வெளி நாடுகளுக்கு முன் பணம் அனுப்பிப் பெறவும்.

ஹனுமத் உபாசி வி. கே. சடகோபாச்சாரியார்.

ஹனுமான் ஜோதிஷ ஆபீஸ், திருத்தணி, S. இந்தியா

# மதிப்புரை

## அரங்கநாயகி

இலங்கையில், நீர்ப்பாசனக் கண்காணிப்பாளர், (Irrigation Superintendent) ஸ்ரீ வே. ஏரம்ப முதலியார் அவர்களால் தாம் இளமையில் பாடசாலையில் பயின்ற 'கெனில்வொர்த்' என்னும் ஆங்கிலக் கதையொன்றினைத் தழுவி, தமிழ் நாட்டு முறைக்கேற்ப இது எழுதப்பட்டதாகும். கெனில்வொர்த் என்னுங் கதை, இங்கிலாந்தில் எலிஸபெத் மகாராணியாரின் காலத்தில் நடந்த உண்மைச் சம்பவங்களைக் கொண்டு ஸர். வால்டர் ஸ்காட் என்னும் ஆங்கில கவிஞரால் கவி உருவில் ஆக்கப்பெற்றதாகும்.

இந்த ஆங்கிலக் கதையினைத் தழுவி 'அரங்கநாயகி' எழுதப்பட்டதாக அதன் ஆசிரியர் கூறுவதைத் தவிர, அதனை முற்றும் வாசிப்போர் அது ஒரு புத்தம்புதிய புனை கதையே எனக்கூறுமாறு கதையின் அமைப்பு விளங்குகின்றது. ஆங்காங்கு காணப்படும் கற்பனைகளின் சிறப்பு ஆசிரியரின் நுண்ணிய அறிவினை விளக்கப் போதிய சான்றாயுள்ளன.

இந்நூலில் அநேக நீதிகள் விளக்கப்பெற்றுள்ளன. நட்பின் மேன்மை, தீய நட்பின் தீமை, வீரத்தின் வெற்றி, பெண்களின் கற்பு மேம்பாடு, கடவுளை நம்பினோ ரெய்துஞ் சிறப்பு, பொய் புதைக்கும் மெய் மேன்மை தரும் என்பது, வாழ்க்கைத் தூய்மையின் அவசியம் ஆகிய பல நீதிகள் புகட்டப் பெற்றுள்ளன. மிக்க எளிய நடையில் விளங்கும் இந்நூல் சிறிது கல்வி பயின்றோரும் கற்பதற்கு மிக்க ஏற்றதாகும்.

இதன் ஆசிரியர் உத்தியோக காலம் போக மிகுதிப் பொழுதை வீண் விஷயங்களில் போக்காமல் இத்தகைய நீதிகளைப் புகட்டும் உயரிய தமிழ் நாவலை எழுதி வெளியிட்டது அவரது தமிழ்ப் பற்றினையும் உழைப்பு, சுறுசுறுப்பு ஆகிய அவரது அரிய குணங்களையும் வெளிப்படுத்துவதாயுள்ளது. முதன்முதலாக அவரால் எழுதப் பெற்ற இந்நாவலைப் பலரும் ஆதரித்து மேன்மேலும் பல நூல்கள் அவரால் வெளிவர உதவி புரியுமாறு பொது மக்களை வேண்டுகிறோம். அடுத்த பதிப்பு இதிலுள்ள எழுத்துப்பிழைகள் களையப்பட்டு, நல்ல அழகுடன் வெளிவருமென எதிர்பார்க்கிறோம்.

புத்தகம் கிடைக்குமிடம் :—

வே. ஏரம்ப முதலியார்,
நீர்ப்பாசன ஸூபெரின்டென்டேண்ட்,
மூதூர், ஸிலோன்.

—



## ஹாஸ்யன்

தோழர் வி. கே. வேணுகோபாலன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'ஹாஸ்யன்' என்ற மாதப் பத்திரிகையின் இதழ்கள் கிடைக்கப் பெற்றோம். பெயருக்கேற்ப அநேக ஹாஸ்யக் கட்டுரைகள் இதில் வெளிவருகின்றன. முதல் இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகளில் ரேஸ் பைத்தியம், போட்டிப் பந்தயத்தின் போட்டி, இன்ஷியூரன்ஸ் தொல்லை முதலிய கட்டுரைகள் பெரிதும் பயனுடையவைகள். பல விகடப் பத்திரிகைகள் தோன்றியுள்ள இக்காலத்தில் 'ஹாஸ்யன்' யாதொரு இடைஞ்சலுமின்றி முன்னேறிச் சென்று தேச மக்களுக்கு நல்ல விஷய உணர்ச்சியை ஊட்டுவானென்று எதிர்பார்க்கிறோம். வருட சந்தா உள்நாடு ரூபா 1-0-0. வெளிநாடு ரூபா 2-0-0.

கிடைக்குமிடம் :—
'ஹாஸ்யன்' ஆபீஸ்,
17-A, கிடங்குத் தெரு, சென்னை.

—

## ஜ்யோதிஷ போதினீ

இதன் முதல் இரண்டாவது இதழ்கள் நமது பார்வைக்கு அனுப்பப் பெற்றுள்ளன. ஜோதிஷ சம்பந்தமான எல்லா விஷயங்களும் இதில் வெளிவருகின்றன. சோதிட பாடம் மாதந்தோறும் தொடர்ச்சியாக இதில் எழுதப்பட்டு வருவது அனைவரும் சுலபமாக சோதிடம் பயில வசதியாக இருக்கும். இதன் ஆசிரியர் பலாசூர் பண்டித நா. ராமநாத சாஸ்திரியாவர். வருடசந்தா ரூபா 1-8-0. தனிப்பிரதி அணா 2. 'ஜோதிஷ போதினீ' ஆபீஸ், மைலாப்பூர், சென்னை என்ற இடத்தில் கிடைக்கும்.

—

தென்னிந்திய மகாஜன புத்தகசாலை
எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்
வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்
செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு சென்னை.

# சின்னஞ் சிறு பாப்பாவுக்கு

## கடவுளுக்கு யார்மேல் அன்பு

[திருக்கழுக்குன்றம், R. T. வேதாசலம்]

நாகப்பன் ஓர் கருணை நிறைந்த மனிதன். அன்னிய ஜீவன்களுக்குத் துன்பம் உண்டானால் தனக்குற்றதாக எண்ணுவான். ஏழைகளிடமும் திக்கற்றவர்களிடமும் மிக அனுதாபங் காட்டுவான். ஏழை, எளியவர்கட்கு உபகாரம் செய்வதுதான் கடவுள் பூசை, அவர்கட்கு அன்னம் வழங்குவதே சுவாமிக்கு நிவேதனம், அவர்கட்குக் குடியிருக்க இடந்தருவதே ஆலயத் திருப்பணி என்று அவன் எண்ணுவான். மேற்கண்ட செய்கையை விட பெரிய தருமம் உலகிலேயே வேறு கிடையாது என்கிற எண்ணந்தான் நாகப்பனுக்கு.

கடவுளைப்பற்றி அவன் சிந்திப்பதில்லை. இவ்வாறே அநேக ஆண்டுகள் கடந்தன. ஓர் நாள் இரவு தூக்கத்தில் ஓர் கனவு கண்டான். நாரதர் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்.

நாகப்பன்:—"என்ன எழுதுகிறீர்?"

நாரதர்:—"கடவுள்மேல் பக்தியா யிருப்பவர்களின் பெயர்களைக் குறிக்கிறேன்."

நாகப்பன்:—"அதில் என் பெயர் இருக்கிறதா?."

நாரதர்:—"இல்லவே இல்லை." இதற்குள் நாகப்பன் விழித்துக்கொண்டான். அன்றைய பொழுது கழிந்தது. மறுநாள் இரவும் நாரதர் தோன்றினர்.

நாகப்பன்:—"இன்று என்ன எழுதுகிறீர்.?"

நாரதர்:—"கடவுள் யார் யாரிடம் ஆசையா யிருக்கிறாரோ அவர்களின் பெயர்களைக் குறிக்கிறேன்."

நாகப்பன்:—"அதில் என் பெயர் வருகிறதா?"

நாரதர்:—"உன் பெயர்தான் முதலில் இருக்கிறது." நாகப்பன் ஆச்சரியப்பட்டான். "கடவுளிடம் சிறிதும் பக்தி யில்லாத என்னிடம் கடவுள் எப்படி ஆசையாயிருப்பார்?" என்று கேட்டான்.

நாரதர்:—"நாகப்பா! நீ கடவுளிடம் பக்தி செலுத்தாவிட்டாலும், ஏழை அநாதைகளிடம் மிக்க அன்பாயிருக்கிறாய். அதுவே ஆண்டவனை உன் வழிப்படுத்தியது. இரங்கும் உள்ளத்தினரை இறைவன் என்றும் கைவிடான்" என்று கூறிவிட்டு மறைந்துவிட்டனர்.

ஆகையால் குழந்தைகளே! நாம் அனைவரும் அன்னிய ஜீவன்கள்பால் கருணை காட்டவேண்டும். ஏழை அநாதைகட்குக் கூடியமட்டில் உதவி செய்யவேண்டும். அப்போதுதான் கடவுள் நம்மிடம் கருணையா யிருப்பார்.

# * சாரதாம்பாள் அல்லது கக்ஷிப்பேயின் கோளாறு

(சேலம் A. N. ஸ்வாமி)

மாலை சுமார் ஐந்து மணி யிருக்கலாம். அஸ்தமிக்கும் சூரியனது மஞ்சள் கிரணங்கள் உலகத்திலுள்ள பொருள்கள் யாவற்றையும் பொன்னிறமாக்கி யிருந்தது கண்கொள்ளா காக்ஷியாகக் காணப்பட்டது. கோபாலசாமி முதலியாரது அழகிய நந்தவனத்தின் நடுவே நீரோடைக் கருகே அமைக்கப்பட்டிருந்த மேடைமீது, சாரதாம்பாள் உட்கார்ந்துகொண்டு எதையோ யோசித்தவண்ண மிருந்தாள். சற்று நேரத்தில் ஒரு யௌவன வாலிபன் புல் தரையின் மீது மெதுவாக நடந்துவந்து தனது கைகளால் அவளது கண்களை மூடினான். சாரதாம்பாள் மிக்க சந்தோஷத்துடன் "சங்கர், உம்மை நான் வெகு நன்றாயறிவேன்" என்றாள். சிரித்துக்கொண்டே அவ்வாலிபனும் அவளருகாமையில் வந்தமர்ந்தான். சற்று நேரம் அமைதியுடன் அவனைப் பார்த்துவிட்டு "சங்கர், என்ன என்னை யடியோடு மறந்துவிட்டீர் போலிருக்கிறதே?" என்றாள் சாரதாம்பாள்.

சங்கர நாராயணன்.—"அப்படிக் கொன்றுமில்லை. பிறன் மனைவியாகப் போகும் உன்னை அடிக்கடி வந்து பார்ப்பது தோஷமென்றுதான் நான் வருவதில்லை.

சாரதா.—(கோபத்துட னெழுந்து) என்ன, சங்கர், நீருமா என்னை யிப்படி கைவிட்டுவிட்டீர்?

சங்கர.—அப்படிப்பட்ட பழியைமட்டும் என் தலையில் சுமத்தாதே. நான் என்றும் உனக்கு உதவியாக நிற்பேன்.

சாரதா.—அப்படியானால் 'பிறன் மனைவியாகப் போகும் உன்னை' என்று ஏன் குறித்தீர் 'சங்கரனுக்கே சாரதாவை. மணஞ்செய்துவைப்பேன்' என்று செய்த வாக்குறுதியை என் தந்தை, கக்ஷிப்பேயின் கைவசப்பட்டு நிறைவேற்ற மறுக்கிறார் எனினும், உம்மையே மணப்பதாகச் செய்துகொண்ட மன உறுதியை நான் மட்டும் தளரவிடமாட்டேன்.

சங்கர.—நானும் என் தந்தையும் உன் தகப்பனார் ஏற்படுத்திக்கொண்ட புதிய கக்ஷியில் சேரவில்லையே என்ற கோபத்தினால் அவர் உன்னை எனக்கு மணஞ்செய்ய மறுப்பதோடு தன் கக்ஷியில் சேர்ந்துகொண்ட நடராஜனுக்கு உன்னைக் கலியாணம் செய்துகொடுக்க யத்தனிக்கிறார். ஆனால் சாரதா! உன் அன்பு ஒன்றிருந்தாலே யெனக்குப் போதும்.

சாரதா.—அன்பு மிக்க காதல! என் தந்தையைப் பிடித்திருக்கும் கக்ஷிப் பேயினுக்கு என் இன்ப வாழ்வினை பலி கொடுத்துவிட

---

* பரிசு பெற்றது. பரிசுத்தொகை 20-6-31-ல் அனுப்பப்படும்.

நான் சம்மதிப்பேனே? மணந்தால் உம்மையே மணப்பேன், இல்லையேல் கன்னியாகவே யிருப்பேன்

இந்த விதமாகக் காதல ரிருவரும் நெடுநேரம் உரையாடிக்கொண்டிருந்த பின்னர், தங்கள் தங்களுக்கென உரிய வஸ்துக்களாகச் சில செய்துகொள்வதுபோல, ஒருவரை யொருவர் மாறி மாறி முத்தமிட்டுக்கொண்டு பிரிந்து போயினர்.

*　　　*　　　*

மேற்கூறிய விஷயம் நடந்து சுமார் ஒரு மாதம் கழிந்தது. ஒரு நாள் மாலை எட்டு மணிக்குச் சாரதாம்பாள் தன்னறையில் தனியே உட்கார்ந்து கொண்டிருந்தாள். பற்பலவான விஷயங்கள் அவள் மனதில் ஓடிக்கொண்டிருந்தன. "நாளை சென்று மறுநாள் நான் நடராஜனை மணக்கவேண்டுமோம்! என் இன்ப வாழ்வினையழிக்க வென் தந்தை யல்லவோ கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்! சங்கரனை நான் பார்த்தலும் கூடாதாமே! என்ன அநியாயமிது!" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். அச்சமயம் வேலைக்காரி யொருவள் மெதுவாக உள் நுழைந்து ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டு வெளியே போய்விட்டாள். சாரதாம்பாள் கடிதத்தைப் பிரித்துப் பின்வருமாறு வாசித்தாள்.

அன்பு மிக்க சாரதா!

மிகுந்த துயரத்துடன் இக்கடிதத்தை யெழுதி உனக்கு அனுப்பி வைக்கிறேன். நாளை சென்று மறுநாள் உனக்கும் நடராஜனுக்கும் விவாகமெனக் கேள்வியுற்று மாளாத் துயர் கொண்டேன். உன்னை மணக்கக் கொடுத்துவைக்காத நான் பாபியே! என் செய்வது? கக்ஷிப் பைத்தியங்கொண்ட உன் தகப்பனார் உன் வார்த்தைக்கேனும் என் வார்த்தைக்கேனும் செவி சாய்க்கப் போகிறாரில்லை. ஆதலின் உன்னைக் கலியாணம் செய்துகொள்ள நான் முயல்வது பயனற்றதேயாகும் என்பதை யுணர்ந்து இப்படியே எங்காகிலும் சந்யாசியாகப் போய்விடத் தீர்மானித்துவிட்டேன். இருந்தாலும், இந்த இரண்டு நாளும் யார் கண்களிலு மகப்படாம லிங்கேயே தங்கியிருந்து, மணக்கோலத்துடன் பவனிவரும் நின் திருமுகத்தை ஒரு முறையாகிலும் பார்த்துவிட்டுப் போய்விடலாமென் றிருக்கிறேன். நற்குணவதியான நின் வயிற்றில் வீரப் புதல்வர் பலர் தோன்றி நம் குலத்தில் வேரூன்றிக் கிளை கிளைத்து வளர்ந்திருக்கும் கக்ஷிப்பேயினை வெட்டி வீழ்த்துவாராக. சாரதா! என்னைப் பற்றி நீ வீண் கவலை கொள்ளாதே. வந்தனம்

இப்படிக்கு,

விலையற்ற மாணிக்கமாகிய உன்னைக் காதலித்தும்
கொள்ளக் கொடுத்து வைக்காத பாபி,
சங்கர நாராயணன்.

இக்கடிதத்தைப் படித்ததும், சாரதா சோர்ந்து அப்படியே கீழே சாய்ந்துவிட்டாள். சிறிது நேரம் சென்ற பிறகு மயக்கந் தெளிந்து யெழுந்தாள். தாங்க முடியாத துக்கத்துட னழுதாள். பின்பு ஒருவாறு மனந்தேறி யிருந்தாள்.



மறுநாள் கோபாலசாமி முதலியார் வீட்டில் அவரது மகளின் விவாகத்தை முன்னிட்டு மேள வாத்தியங்கள் பலமாக முழங்கிக் கொண்டிருந்தன. கலியாணம் வெகு ஆடம்பரமாக நடைபெறத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தன. முகூர்த்த தினத்தன்று விடியற்காலையில் நலங்கிடப் பெண்ணை அழைத்து வர அவளது அறைக்குச் சென்றார்கள். அவள் அங்கு காணப்படவில்லை. வீடெங்கும் தேடியாய்விட்டது. அவள் எங்கு மகப்படவில்லை. கலியாண வீட்டில் பெண் காணமற் போய்விட்ட செய்தி ஊரில் ஒரு நொடியில் பரவிவிட்டது. துக்கமும் வெட்கமு மடைந்த கோபாலசாமி முதலியார் சோர்ந்து உட்கார்ந்துவிட்டார்.

கோபாலசாமி முதலியார் வீட்டில் மணப்பெண் காணமற் போனவன்று காலை சுமார் 5 மணிக்கு அவ்வூருக்குக் கிழக்கேயுள்ள ஒரு பாழ் மண்டபத்தில் சங்கர நாராயணன் பெருந் துக்கத்துடன் உட்கார்ந்துகொண் டிருந்தான். சற்று நேரத்தில் பெருந் தலைப்பாகை யணிந்த ஒரு வழிப் பிரயாணி அம்மண்டபத்தில் வந்து உட்கார்த்தான், சிறிது நேரத்தில் அவன் களைப்பால் கீழே விழுந்துவிட்டான். அவனது தலைப்பாகையும் அவிழ்ந்துவிட்டது. இதைக் கண்ட சங்கரன் அவனிடம் ஓடி, அவனைப் புரட்டி அவனது முகத்தைப் பார்த்தான். சற்று நேரம் உற்றுப் பார்த்ததும் சங்கரன் "ஆ! என் கண்ணே! சாரதா! இதுவென்ன கோலம்" என்றரற்றினன். பின் பற்பல உபசாரங்களைச் செய்யவே சாரதாம்பாள் களை தெளிந்தெழுந்தாள். சங்கர நாராயணனை அருகில் கண்டதும் அவனைக் கட்டியணைத்துக்கொண்டு விம்மி விம்மி யழுதாள். சங்கரன் கண்ணே! நீ இங்கு வந்தவித மென்னை? என்று வினவினன். "நடராஜனுக்கு என்னை மணம் புரிவிக்கயிருந்த என் தந்தையை ஏமாற்றிவிட்டு, இன்று காலை என் தந்தையி னுடையிலேயே வீட்டைவிட்டு வெளியேறிவிட்டேன். ஆனல் உம்மை இங்கு சந்திக்க முடியுமென்று நான் கனவிலும் கருதவில்லை, இது முற்றும் தெய்வச் செயலாலேயே நிகழ்ந்திருக்கின்றது" என்று கூறினள் சாரதாம்பாள்.

பிறகு சிறிது நேரம் பிரிந்திருந்த காதல ரிருவரும் மட்டுக்கடங்காக் களிப்புடன் உரையாடிக்கொண் டிருந்தனர். பின்பு அவர்கள் தங்களுக்கு ஐம்பது மைல் கிழக்கே யுள்ள சேலம் பட்டணம் சென்று தங்களிடமிருந்த சிறு தொகையைக் கொண்டு வாணிபம் செய்து வாழலாமெனத் தீர்மானித்தவர்களாய் அம்மண்டபத்தை விட்டகன்றனர்.

நான்கு வருடங்கள் சென்றபின், சங்கரன்-சாரதாம்பாளின் வாழ்க்கை, சேலத்தில் மிக்க இன்பமாய் நடந்துவந்தது. அவர்களின் விவாகத்தின் பயனா யுதித்த செல்வக்குமாரன் 'வடிவேலன்' துள்ளித் துள்ளி விளையாடி வீட்டை அலங்கரித்து நின்றான். அவர்களின் வாழ்க்கை அமைதியும் சந்தோஷமும் பெற்றிருந்தது.

பல நாட்களுக்குப் பின்னர் ஓர் தினம் சங்கரநாராயணனது வீட்டில் நடந்த விருந்திற்குப் பல சந்யாசிகள் வந்திருந்தனர். அவர்களினிடையே நீண்ட தாடியும், சடைமுடியும், சிவந்த கண்களும், தடித்த சரீரமும் உடைய ஒரு சந்யாசி யிருந்தார். யாவரும் உட்கார்ந்த

பின்னர் இலை போடப்பட்டது. அன்னம் பரிமாற வெளியே வந்த சாரதாம்பாள் அந்தத் தடித்த மனிதரை உற்றுப் பார்த்துவிட்டு, "ஆ! தந்தையே! உமக்கும் இக்கதியாயிற்றே?" என்று கதறினாள். அந்தச் சப்தத்தைக் கேட்ட சங்கரனும் வெளியே ஓடிவந்து பார்க்க, அந்தத் தடித்த சந்யாசி தனது மாமனாராகிய கோபாலசாமி முதலியாரென்று தெரிந்து கொண்டான்.

கோபாலசாமி முதலியாரும் அழுதுகொண்டே "ஆம்! என் கதி யிப்படித்தா னாய்விட்டது. கக்ஷித் தகராறுகளில் தலையிட்டு இரண்டே வருஷத்தில் என் இரண்டு லக்ஷ ரூபாய்களையும் தொலைத்துவிட்டு இந்நிலைமைக்கு வந்துவிட்டேன். இப்பொழுதே கக்ஷித் தீமையினை யுணர்ந்துகொண்டேன். "இக்கக்ஷித் தகராறுகள் என்று ஒழியுமோ அன்றுதான் நமது குலமும் முன்னேறும்" என்று சொன்னார். இதற்குள் அங்குவந்து சேர்ந்த குழந்தை வடிவேலனை சாரதாம்பாள் தூக்கி, "தந்தாய்! எங்கள் காதற் கலியாணத்தின் பயனாய்த் தோன்றிய இவ்வரப்பிரசாதத்தை அங்கீகரிப்பீராக" என்றாள். கோபாலசாமி முதலியாரும் அவளது புதல்வனை வாங்கி மார்போடணைத்துக்கொண்டார்.

---

இனாம்! இனாம்!

ஒரு வருட சந்தா இனாம்.

ஒரு வருட முன் பணத்துடன்

ஐந்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து

அனுப்புவோர்க்கு

ஒரு வருட செங்குந்த மித்திரன்

இனாமாக அனுப்பப்படும்

எங்கே! மித்திரன் வளர்ச்சியில்

உங்களுக்குள்ள அபிமானத்தைக் காட்டுங்கள்

# சோமுவின் காதல்

[பால்யன்]

மதராஸ் கடற்கரை. மாலை ஏழு மணி. பாஸ்கரன் இவ்வுலகின்கண் நடக்கும் அநியாய அட்டூழியங்களைக் காண மனந்தாளாது அஸ்தமித்தான். நிலவு தனது தண் கிரணங்களை மெதுவாகப் பரப்ப ஆரம்பிக்கிறது. உலாவ வந்த சீமான்களும் சீமாட்டிகளும் தங்கள் தங்கள் கார்களில் ஏறி வீடு நோக்கிச் செல்கின்றனர்.

காதலர் பலர் கோர்த்த கையுடனும், நகைத்த முகத்துடனும் இப்பக்கமும் அப்பக்கமும் அடிக்கடி உலாவுகிறார்கள்.

சோமு ஏதோ மிக ஆழ்ந்தயோசனையி லிருந்தான். அன்று அவன் முகவிலாசம் மங்கிக் கிடந்தது. நகைத்த முகமும், தமாஷ் பேச்சும் உடையவனாக இருப்பவன் இவ்வாறு இருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படாம லிருக்கமுடியுமா?

"என்ன சோமு! உன்முகம் வாடி இருப்பதற்குக் காரணம் என்ன? அந்தக் காதலர்களைப் பார்! எவ்வளவு உல்லாசத்துடன் இருக்கின்றனர்," என்று, அப்பக்கமும் இப்பக்கமும் தோளுடன் தோள் உராய, கன்னத்தில் முத்தம் மலர சென்றுகொண்டிருந்த இரு காதலர்களை சுட்டிக்காட்டிக் கேட்டேன்.

நண்பன் பெருமூச்செறிந்தான். "ஆமாம். உனக்கு இன்னும் மணம் ஆகவில்லையா?" என்றேன்.

சோமு பேசஆரம்பித்தான். "நானும் ஒருவரிடம் அதைச்சொல்லி மன பாரத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் இருந்தேன். அதற்கு நீதான் சரியான ஆசாமி" என்று சிகரெட் ஒன்றை பற்றவைத்து 'கப்' 'கப்' என்று புகைவிட்டு விட்டு, "அன்றொருநாள் இங்குதான் அவளைச் சந்தித்தேன்," என்று தன்னுடைய 'வெயிஸ்ட்' கோட் பாக்கட்டி லிருந்து ஒரு தந்தப் பெட்டியை எடுத்துக் கொடுத்தான்.

அதைத் திறந்தேன். ஒருபடம் 'வெல்வெட்' டால் மூடப்பட்டு இருந்தது. அந்த 'வெல்வெட்' கவரை எடுத்தேன்.

ஆ! என்ன தேஜஸ்! என்ன அழகு!! என்ன வசீகரம்!!! அகன்று விரிந்து பரந்த கண்கள்; சுருண்டு சுருண்டு ஆங்கிலோ இந்தியர் 'பேஷனில்' கிராப் கத்தரித்து விடப்பட்ட கூந்தல்! தனது வெண்சிலை போன்ற கழுத்தும், கால்பாக நெஞ்சும், கரங்கள் முழுமையும், கால்களில் முழங்கால்கள் வரையிலும் தெரியும் வண்ணம் அணிந்த கவுன்! ஆம், அவள் ஒரு அழகியே! அழகிய ஆங்கிலோ இந்திய மாதே!

நண்பன் மேலே சொல்ல ஆரம்பித்தான். "ஆம்! இந்த இடத்தில் தான் நான் முதலில் அவளைச் சந்தித்தது. நான்கு வருடத்திற்குமுன்பு

நான் மதராசுக்கு வேலைக்காக வந்தேன். ஒருநாள் சாயந்திரம் உலாவ வந்தபோது அவளைக் கண்டேன்; தினந்தோறும் அவளை வந்து காண்பதே எனது தேவலோக வாழ்வாயிற்று.

ஒரு நாள்—அதுதான்—அந்நன்னாளைத்தான்—நான் அப்போது எனது வாழ்வில் அதிர்ஷ்ட நாளாகக் கருதியது—, அவளை யணுகி, 'நான் உன்னை நேசிக்கிறேன்,' என்றுசொல்ல வாயெடுத்தவன் என்னென்னமோ பிதற்றினேன். ஆனால், என் கண்கள் என் காதலை அவளுக்கு உணர்த்திவிட்டது. அதுபோன்றே, அவள் கண்களும் அவள் மனதை எனக்குக் காட்டிக்கொடுத்துவிட்டன. ஆ! என்ன ஆனந்தம்!! 'க்ளோரியா' என்ன அழகான பெயர்!

* * *

இரண்டு மாதங்கள் கடற்கரை சந்திப்போடு நின்றது. வரவரக் காதல் முற்றியது. எனது ரூமுக்கு சிநேகிதி என்ற முறையில் அவள் அடிக்கடி வருவாள். இருவரும 'செஸ்' (chess) விளையாடுவோம். ஒரு கவலையுமின்றி மாதங்கள் பறந்துகொண்டிருந்தன. நாங்கள் இருவரும் மாலை மணி நான்கிற்கு 'ராம்மோகனில்' 'லஞ்ச்' (Lunch) செய்துவிட்டு பீச்சுக்குப் போவோம். வெகு தமாஷாகவும், உல்லாசமாகவும் இருப்போம். வாழ்வு என்பது எங்களுக்கு மேற்சொன்ன இரண்டைத் தவிர வேறொன்றுமாகத் தோன்றவில்லை.

என்னோடு அவள் இரவு ஒன்பதுமணிவரை இருப்பாள். நாங்கள் அடிக்கடி சினிமாவிற்குப் போவதுண்டு. அவள் அதிகச் செலவாளி. முன்போல் நான் வீட்டுக்குக் கடிதம் எழுதுவதில்லை. மாதம் மாதம் பணம் அனுப்பு என்று மாத்திரம் எழுதுவேன்; பணம் வந்துவிடும். பிறகு கவலையற்று செலவுசெய்ய வேண்டியதுதான். இவ்வாறாக ஆறு மாதங்கள் கடந்தன.

ஒருமாதம் பணம் அனுப்புமாறு எழுதி பத்து நாட்களாகியும் பதில்வரவில்லை. மறுமுறையும் எழுதினேன்; அதற்கும் பதில் இல்லை. எனக்கோ செலவுக்குப் பணம் இல்லை. கைகடிகாரம் சேர் முதலியவைகளை விற்றுச் சிலநாட்களைக் கழித்தேன்.

எனது கடைசி கடிதத்தின் மூன்றாம் நாள் இரவு மணி எட்டிருக்கும். நானும் எனது காதலியும் 'செஸ்' (chess) விளையாடிக்கொண்டிருந்தோம். யாரோ கதவைத் தட்டுவது போலிருந்தது. என்றுமில்லாது இன்று யார் புதிதாகத் தட்டுகிறார்கள் என்ற ஆச்சரியத்துடன் கதவைத் திறந்தேன். யாரைக் கண்டேன் என்று நினைக்கின்றாய்? ஆ! எனது தாயாரை! முன்னே கட்டுடைத் தேக முடையவளாக இருந்தவள் இப்போது மிகவும் கேவல நிலையில் இருந்தாள்.

எனது தாயார், "விஷயம் தெரிந்தது, பரவாயில்லை; வா, நமது வீட்டுக்குப் போகலாம்," என்றாள். நான் பணம் இல்லாது எவ்வளவு கஷ்டப்பட்டேன்! அவர்கள் கொஞ்சங்கூடத் தெரியாது அனுப்பாமலிருந்தார்களே! அவர்கள் முகத்தில் விழிப்பதா? என்ற நினைப்பே எனது மனதில் இருந்தது. திரும்பி என் காதலியை நோக்கினேன். புன்னகை புரிந்தாள். இவளை நமது தாயார் என்று சொல்லிக்கொள்



வதா என்ற வெட்கம் ஒருபக்கம், கோபம் ஒரு பக்கம். தாயாரை வெளியிலேயே விட்டுக் கதவைத் 'தடார்' என்று சாத்திக் கொண்டேன். ஆனால் கடைசியில், நான் செய்த கொடூரத்திற்கு எவ்வளவு வருந்தினேன் என்பது உனக்குத் தெரியுமா, பால்யா?

எனக்கு வேலை ஒன்றுமின்றி மதராசில் இருக்க முடியவும் இல்லை, பிரியமும் இல்லை. பாம்பே சென்றாவது எனது அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்து விடுவது என்ற தீர்மானத்துடன் என் காதலிக்கு விஷயத்தை அறிவித்தேன். அவள் "ஆ! டார்லிங்! என்னை பிரிவுக்கு ஆட்படுத்துகிறாயா? நான் எங்ஙனம் பொறுப்பேன்!"என்று அதிக வருத்தத்துடன் மொழிந்தாள். மனம் மிகவும் வருந்தி வாட்டமுற்றாள். மதராசுக்கு மறுபடி வர ஆறு மாதமாவது பிடிக்கும் என்றேன். எனக்கு ஒரு வருடத்திற்குவேண்டிய ஆலிங்கனங்களும் முத்தங்களும் கிடைத்தன.

மறுநாள் நாங்கள் இருவரும் வெளியே பீச்சுக்குப் போகவில்லை. பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்தோம். மணி ஆனது. ஸ்டேஷனை அடைந்தோம். டிக்கட் வாங்கிக் கொண்டேன். இருவரும் 'ப்ளாட்பாரத்தில்' உலாத்திக்கொண்டு இருந்தோம். ரயில் புறப்படும் நேரம் ஆயிற்று. ரயிலில் ஏறி உட்கார்ந்தேன். கார்டும் 'விஸில்' கொடுத்தார். ரயிலும் 'ஜிகுபுகு' என்று புறப்பட்டது. க்ளோரியாவின் கைகுட்டை காற்றில் பறந்தது.

* * *

இரண்டு மாதங்கள் பம்பாயில் பலவிடங்களில் வேலைக்காக அலைந்து அலைந்து அவயவங்கள் அலுத்தன. முடிவில் ஒரு கம்பெனியில் ஒரு 'பெட்டி' (Petty) க்ளார்க் ஆக இருந்துவந்தேன். அப்போதுதான் அதிர்ஷ்டம் என்பது என்வாழ்வை எட்டிப் பார்த்தது; அந்தக் கம்பெனி மானேஜர் வேறூருக்கு மாற்றப்பட்டதால் எனக்கு 'ஆக்டிங்' மானேஜர் வேலை கிடைத்தது. மூன்று மாதம் அவ்வேலையில் இருந்தேன். பிறகு மதராஸ் பிரான்சுக்கு மாற்றிக்கொண்டு வந்துவிட்டேன்.

க்ளோரியாவைத் தேடாத இடமில்லை; பீச்சுக்குச் சென்று பார்க்காத நாளில்லை. அவளை இரண்டு வருடமாகக் கண்டுபிடிக்க முடியவே இல்லை.

எனக்குக் கொஞ்சம் புத்தி வந்தது. எங்கள் சொந்த ஊருக்குச் சென்று, வீடு தோட்டம் எல்லாம் விற்று படிக்கவைத்த தாய்தந்தையரைக் காண ஆவல்கொண்டு புறப்பட்டேன். நான் இத்தனை நாட்களாக அவர்களை எனது மனதினின்றும் புறக்கணித்து விட்டதற்காக மிகவும் வருந்தி என்னையே நொந்துகொண்டேன்.

எங்கள் வீட்டுக்கு உடனே புறப்பட்டுச் சென்றேன். வீட்டின் முன்பு வண்டி நின்றது. வீட்டுக்குமுன் இருந்த 'பிரண்ட்கார்டனை' (Front Garden) காணோம்; லட்சுமீகரம் எங்கோ ஓடி ஒளித்தது. எனக்கு மனம் பகீர் என்றது.

கதவைத் தட்டினேன். கிழிந்த புடவை யணிந்த ஒரு அம்மாள் வந்து கதவைத் திறந்தார்கள். ஆ! அவர்களே எனது தாயார்! என்

னால் அடையாளம் கண்டுபிடிக்கவே முடியவில்லை. ஆ! என்னகொடுமை!! என்ன கொடூரம்!!! "என்னால் அல்லவா—ஏன்—மேல் நாட்டு நாகரீகமாம் பேயினால் அல்லவா—அநாகரீகப் படிப்பினால் அல்லவா எனது தாய் தந்தையரை புறக்கணிக்க நேர்ந்தது! மேல் நாட்டுப் படிப்பு இத்தகைய மனப் பான்மையைத்தான் தற்கால மாணவர்களுக்குக் கொடுக்கிறது"—என்று எண்ணி வருந்தினேன். இந்த எண்ணம் எனது மூளையை—மனதை, மின்சாரம்போல் தாக்கியது. எனது தாயார் கால்களில் வீழ்ந்தேன், "வேண்டாமடா அப்பா! இந்தக் கடிதத்தைப்பார். இப்போதுதான் தபால்கார முத்து கொடுத்துச் சென்றான்" என்று ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தார்கள். கடிதத்தைப் பிரித்தேன்:—

டார்லிங் சோமு! மதராஸ், 14-6-34.

நான் தற்போது சுகமே இருக்கிறேன். நான் உனக்கு ஒரு சந்தோஷசெய்தி தெரிவிக்கப் போகிறேன். நான் மேஜர் ராபர்ட்டை மணந்துகொண்டேன். அவர் ஒரு 'பெர்பெக்ட் டார்லிங் அல்லவா? (What a perfect darling he is!) எனது அன்பு உனக்கு.

இப்படிக்கு,
க்ளோரியா.

* * *

எனது ஆருயிர் அன்னைக்கு விஷயம் பூராவும் தெரிவித்தேன். அவர்கள், "ஆ! எனக்குத் தெரியும் இப்படி முடியும் என்று! இருந்தாலும் பரவாயில்லை. உனக்கோ சென்னையில் நல்ல வேலை ஒன்று கிடைத்துவிட்டது. நாம் இந்த வீட்டை விற்றுவிட்டு மதராசுக்கே போய் விடலாம். உனது தந்தையோ இறந்துவிட்டார். அதற்குத்தான் நான் மதராசுக்கு உன்னை ......?" என்று என்னமோ சொன்னார்கள். உலகமே இருண்டது போலிருந்தது. 'தடார்' என்று மூர்ச்சித்து விழுந்தேன்," என்று சொல்லிவிட்டு 'ஐயோ' என்று கத்தினான்.

"என்னடா முடிவில் 'ஐயோவில்' முடிக்கிறாய் சோமு?" என்றேன்.


பற்றவைத்த சிகரெட் அவன் விரலைச் சுட்டுவிட்டது. சந்திர ஒளியில் 'தக தக' வென்று மின்னிக் கொண்டிருந்த கடல் தளத்தின் மேல் அதை வீசி எறிந்துவிட்டு "வாடா பால்யா, நேரமாயிற்று; எனது கதையும் முடிந்தது," என்றான்.

நேரமாகிவிட்டதால் எழுந்து சென்றோம்.

* * *

இந்தக் கதை நிஜமா என்றறிய நேயர்கள் ஆவல் கொண்டால் இந்தக் கஷ்ட காலத்திய ஒரு நாள் வருமானத்தைச் செலவுசெய்து பாருங்கள்.

---



ஒருவாரம் ஒருமாதம் ஒருவருட காலம்
ஓயாமல் உன்னியழிந்தேன் உருவங்காணேன்......"

## சிவகாமி—சிதம்பரனார்

(முன் 256-ம் பக்கத் தொடர்ச்சி)

[அசனம்மாபேட்டை சா. சுந்தரன்]

இவ்வாறு வெட்டவெளிச்சமாகத் தன் மெய் விளங்க நின்ற மகவானவள் எழுந்து அம்முனிவனை வணங்கி, முனிவ! சிறியேன் செய்த வினையையெல்லாம் பொறுத்தருள வேண்டுமென்று சொல்லலுற்றாள்.

"முனிவ! காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்வாள் வணிககுல திலகம் போன்ற மங்கையொருத்தி நற்குணம் பலவும் வாய்ந்தவள். இவள் வயிற்றிற் பிறந்தோர் இருமகளிர், ஒரு புருடர் ஆக மூவர். இம்மூவரில் புருடர்க்கு ஓர் புதல்வர் பிறந்தார். மற்றைய மகளிர் இருவருள் ஒருத்தியினுடைய மகள் யான்; மற்றொருத்தி மலடி. அம்மலடி அளவற்ற செல்வமுடையவள். இவ்வுலக முழுவதுமே அவள் செல்வமென்று சொல்லலாம்.

முன்சொன்ன புதல்வரும் யானும் "ஆவியொன்றே யுடலிரண்டெனுமாறு இளமை தொட்டு எந்நேரமும் பிரியாது உடலைவிட்டுப் பிரியாத நிழல் போல ஒன்றாக விருந்து வளர்ந்து வந்தோம். அடல் பெரியர். அருள் உருவினர். அள்ளிக்கொளும் பேரழகினர். அவருடைய அருமைத் திருநாமத்தை, ஆ! எவ்வாறு அறைவேன்" என்றுரைத்த மொழியினைக் கேட்ட இருடியின் உடலம் புளகித்தது. உள்ளம் உருகிற்று. விழிகளில் நீர் ஊறி முகத்தில் ஒழுகிற்று. அதனை மறைப்பதற்காக எரிக்க விறகெடுப்பவனைப் போல சிறிது தூரம் எழுந்து சென்று வந்தமர்ந்தான். அந்நங்கையும் மீட்டும் தன் கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

வாழி முனிவ! அம்மலடியாகிய சிறிய தாயார் பெற்றிருந்த அளவிடற்கரிய செல்வ மனைத்தையும் என்மீதிருந்த விருப்பத்தால்

எனக்கே அளித்து விட்டாள். அக் கழிபெருஞ் செல்வக் களிப்பினு ளாழ்ந்து தலைதடுமாறிப் பேதையாகிய எனது நிலைமையையும், எம் பெருமானாகிய அவர் எனது தலைவரென்னும் நிலைமையையும் மறந்து விட்டேன். அவரது காதல் வலியை யளந்தறிபவள் போன்று இறு மாந்திருந்தேன்.

இந்நிலைமையைக் கண்ட எந்தலைவர் பலமுறை இது தகாதென்று குறிப்பாக வுணர்த்தியும் அதனை யேற்றுக் கொள்ளாமல் குறும்பு மதியால் எனது குடிமுழுவதையும் கெடுத்தேன்.

சிலநாளிருந்து பார்த்தார். நான் செம்மாப்பினின்றும் திருந்துவதாகத் தோன்றாமையால், சீ, வெறும் வஞ்சம் இவள் நெஞ்சமென என்னை வெறுத்து மனவேதனையுடன் என் தொடர்பை விட்டு விலகிச் சென்று விட்டார்.

"பொருளிருந்து மெழிலிருந்தும் புகவிருந்து மருந்தும்
போக்கியமும் பாக்கியமும் நீக்கமற விருந்தும்
அருளரும்பு மதிபரென தகமகன்று மறைந்த
அன்றுமுத லிலக்கமிலா வலக்கணுளநிறைந்த"

இம்மையிற் செம்மையாய் வாழ்தற்கு வேண்டிய பொருள் நிறைந்திருந்தும், கண்டோர் வியக்கும் பொன்றாத பொற்பிருந்தும், உண்ணுதற்கு வேண்டிய உயர்ந்த பொருள்களெல்லாம் நிறைந்திருந்தும், மற்ற எல்லாமிருந்தும் அருள் கனிந்து என்னையாளும் எனது தலைவர் பிரிந்த அன்றுமுதல் என்னுள்ளத்தில் துன்பமே நிறைந்தது. பொருளை விரும்பியும், குலத்தை விரும்பியும் பொய்க்காதல் சொல்லி மணம்பேச வந்தோர்க்கோ ரளவில்லை. ஆயினும் என் பயன். அருள் கனிந்து எனை விரும்பி ஆளும் அதிபராகிய அவரை யொழித்து வேறொருவர் மேலும் என் மனஞ் செல்லுமோ?

"ஒருவாரம் ஒருமாதம் ஒருவருட காலம்
ஓயாமல் உன்னியழிந் தேன்உருவங் காணேன்"

ஒரு வார மிருந்தேன்; ஒரு மாத மிருந்தேன்; ஒருவருட மிருந்தேன். ஓயாமல் மனதால் எண்ணியெண்ணிப் பார்த்தேன்; அவர் உருவத்தைக் காணேன். சேடியரிடம் செப்பினேன். அவர்கள் "உனது தலைவர் சென்ற திசை, தேயம் எவரறிந்து சொல்வார் எனக்கூறிச் சிரித்தனர்,

ஆயத்தார் (மகளிர் கூட்டம்) கூடி, நான் தனியே யிருந்து ஆராயவும் விடுவதில்லை. அலைகடலோ இரவு பகல் ஓயாமல் இரைந்து கொண்டே யிருந்தது. விண்ணி லெழுந் தொளிரும் வெண்ணிலாவும் நெருப்பைக் கக்கியது. திரிந்துலவும் தென்றலோ வென்றால் உயிர் தின்னும் நமன் போன்றது.

எனது தலைவரைக் கண்டவர் அல்லது கேட்டவர் என்பாரை நான் காண்பதற்காகச் சென்றலைந்ததனா லுண்டாகிய துன்பத்தை எவ்வளவென்று சொல்லுவேன். உண்டு என்று தமது ஊகத்தால் உரைப்பவர்களை யன்றி, உள்ளபடி யெனது காதலரைக் கண்டவர் ஒருவரையும் யான் கண்டிலேன்.



உண்டென்றால் கண்டிடுவேன், இல்லையென்றால் உடனே உயிர்விடுவேன் என்பதாக உளந்துணிந்து, நித்திரை செய்திருந்த வீட்டில் நெருப்புப் பிடித்துக் கொள்ள உடனே அவ்வீட்டை விட்டு வெளியேறி விடுபவர்களைப்போன்று யானும் இவ்வேடங் கொண்டு வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டு விட்டேன்.

"தீர்த்தகுல மூர்த்திதலம் பார்த்துடலஞ் சலித்தேன்
திருக்கறுபற் குருக்கள்மடந் திரிந்துடலம் இளைத்தேன்

மூர்த்தி, தலம், தீர்த்த மெலாம் முறையாய்ச் சென்று தேடினேன், காணவில்லை. பலமடங்களுக்கும் சென்று பார்த்தேன், அங்குமில்லை!

மான்களே! மடப்பிடியொடு மருவி வாழும் மதயானைகளே! மயில்களே! குயில்களே! என்னுள்ளங் கவர் கள்வனை யெங்கேனுங் கண்டீர்களோ வென்று அவற்றின் பின்னர் சென்று அளவிறந்த நாட்களைக் கழித்தேன். தேடிப்பார்க்க வேண்டிய இடமனைத்தும் தேடிப் பார்த்தாய்விட்டது. இனி எவ்விடத்தைத் தேடுவது.

உருக்கமான உள்ள நினைப்பை, நினைக்கப்படுபவரின் உள்ளம் உணருமென் றுரைப்பார்கள். இத்துணை நாளாக நினைந்தும் என்னுள்ள நிலையை யின்னும் அவர் அறிந்திலரோ? இதுவரை நான் ஆசை கொண்டு அலைந்த தத்துணையும் வீண்தானோ? நல்லர், அருளுடையவர் என நம்பி, இது வரையும் நான் உழைப்பதை அறிவாரெனில் ஏனோ எதிரே வந்திலர். அவர் இல்லை யென்றால் இவ்வுலகம் எனக்குச் சுடுகாடேயாகும்.

தவமுனிவ! என்னுடைய ஆருயிர்க் காதலரது அளவிறந்த குணங்களுள் ஏதோ சிற்சில சாயை யுன்னிடத் திருத்தல் கண்டு என் மனத்துயரத்தை யுன்பால் உரைத்துச் சிறிது ஆற்றினேன். இனியிருந்து யான் பெறக்கூடிய பயன் என்ன? "இவ்வழலே கதி" யென்று நெருப்பெதிரே நின்று சொல்லிய மொழி முழுவதும் செவியிற் புகு முன்னமே, முனிவன் தனது பழைய வடிவத்தை விளக்கி, முக மலர்ந்து, மொழி குளறி,

"சிவகாமி யானுனது சிதம்பரனே யென்னச்
செப்பு முனம் இருவரும் மற் றோருருவ மானார்?
எவர்தாமுன் அணைந்தனரென் றிதுகாறும் அறியோம்
இருவரும் ஒன்றாயினர்."

என்னே? காதலின் வலிமை.

---

மித்திரன் வளர்ச்சியுற விரும்பினால்
உங்கள் சந்தாவை
இன்றே அனுப்பி வையுங்கள்

# பண்டைத் தமிழ்ப் பெண்கள்

(K. கோவிந்தன், மாணவன், திருவத்திபுரம்.)

ஒரு நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு அந் நாட்டுப் பெண்டிரின் அறிவே கருவியாம் என்ற உண்மையை நன்கறிந்து ஆடவர் பெண்டிர் என்ற இருபாலர்க்கும் விழுமிய கல்வி யறிவை வேற்றுமையின்றிக் கொடுத்துவந்ததும், "பிற்றைநிலை முனியாது கற்றல்வேண்டும்" என்ற சீரிய கொள்கையை உட்கொண்டு கடைக் குலத்தோராயினும் கற்றறிந்தவரைப் போற்றிப் புகழ்ந்து வந்ததும், வடக்கே திருவேங்கடத்தையும் தெற்கே குமரியையும் எல்லையாக உடையதுமான நம் தமிழ்நாடு, பல்வேறு குலத்தினுள்ளும் பல பெண்டிர் மணிகளைத் தோற்றுவித்து என்றும் பொன்றாத புகழை நல்கி வந்தது.

இயற்கை யறிவோடு கூடிய கல்வி யறிவும், கணவர்மாட்டு கொண்டுள்ள அன்பும், நாட்டின்மாட்டு கொண்டுள்ள பற்றும், மாதவர் நோன்பும் மடவார் கற்பும் நிலைபெறுமாறு புரக்கும் தம் அரசர்மாட்டு கொண்டுள்ள இராசபக்தியும், கடவுள்மாட்டு கொண்டுள்ள உண்மை யன்பும் நம் தமிழ்நாட்டுப் பெண்களுக்குச் சிறப்பியல்களாம்.

இத்தகைய சீரும் சிறப்பும் பொருந்திய பண்டைத் தமிழ்ப் பெண்களுள் ஔவையார், காவற்பெண்டு, பாரிமகளிர், பொன்முடியார், வெண்ணிக்குயத்தி, ஆதி மந்தியார், நப்பசலையார், நக்கண்ணையார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க் கரசியார், பூதப்பாண்டியன் தேவியார், கண்ணகி தேவியார் முதலியோர் தலைசிறந்தவராவர்.

இவர்கள் கூறிப்போந்த பொன்மொழிகளும், இவர்களுடைய சீரிய கொள்கைகளும், அதற்கேற்ற செய்கைகளும் என்றும் யாவராலும் போற்றத் தகுந்தனவா யிருக்கின்றன. "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பதற் கேற்ப சீரிய எண்ணங்களை யுடைய இவர்களது கொள்கைகள் பலவற்றுள் 'ஒருபானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்' என்ற முதுமொழிக் கிணங்க ஒன்றைக் குறிப்பிடுகின்றேன்.

அளக்க லாகா செல்வமும் செல்வாக்குமுடைய ஓர் உயர் குடியிற் பிறந்த பெண் ஒருத்தி, தன் கணவன் மனையில் பசிப்பிணியும், உடற்பிணியும் துன்புறுத்த, மாற்றுடையற்று நடத்தும் ஏழ்மை வாழ்க்கையைக் கண்ட அவள்தோழி "சிறுமதிநுதலே! அளப்பரும் செல்வமும், செல்வாக்கு முடைய உயர்குலத்தில் பிறந்த நீ வறுமை வாய்ப்பட்டு, உடல் நலம் குன்ற நின்கணவன் இல்லத்தில் வாழ்வதினும், நின்கணவனுடன் நின் பெற்றோர் மனையில் வாழ்வது சிறப்புடைத் தன்றோ?" என்று கேட்டாள். அதுகேட்ட அவள்

"இராமழைபெய்த ஈர வீரத்துள்
பனை நுகங் கொண்டு யானை ஏர்பூட்டி
வெள்ளி விரைத்துப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வே;
செங்கேழ் வரகுப் பசுங்கதிர் கொய்து
கன்று காத்துக் குன்றி லுணக்கி
ஊடுபெதர் போக்கிமுன் உதவினோர்க் குதவி
காடுகெழி இந்தனம் பாடுபார்த் தெடுத்து
குப்பைக் கீரை உப்பின்றி வெந்ததை
இரவற் றாலம் பரிவுடன் வாங்கி
சோறது கொண்டு பீற லடைத்தே
ஒன்றுவிட் டொருநாள் தின்று கிடப்பினும்
நன்றே தோழிநங் கணவன் வாழ்வே."

என்று கூறுவாளாயின் அவளுடைய சீரிய கொள்கைகளும், அவள் தன் கணவன்மாட்டு வைத்துள்ள பேரன்பும் எத்துணைச் சிறப்புற்றது என்பதை அறிந்து வியவாதார் எவரே!

# விகடத் துணுக்குகள்

புருஷன்.—ஏண்டி அழுதுகொண் டிருக்கே?

மனைவி.—ஐயோ! திருடர்கள் நமது இரும்புப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்களே.

புருஷன்.—அடி முண்டமே. அதன் சாவிதான் என்னிடம் இருக்கிறதே. சாவிக்காக திருடர்கள் என்னிடம் வந்துதானே ஆக வேண்டும். அப்போது சும்மா விட்டு விடுவேனா?

—G. கோவிந்தராஜன், முள்ளிப்பட்டு.

---

கும்பகர்ணப் பேர்வழி.—என் தலையணையும் பாயும் பார்த்தீர்களா?

வீட்டுக்காரன்.—உன் தலையணையும் பாயுமா? அப்படியானால் யாராவது அதை வேட்டையாடிக்கொண்டு போயிருக்கலாம். உடனே போய்ப் பாருங்கள்.

—ச. துப்புசாமி முதலியார், செங்குந்தபுரம்.

---

கிழவர்.—அப்படியானால் நீ என் மருமகனாக விரும்புகிறாயா?

இளைஞன்.—உமது மருமகனாக விருப்பமில்லை. பெண்ணை மட்டும் கொடுத்தால் போதுமானது.

—'பேனா', சென்னை.

---

வக்கீல்.—ஏன் ஐயா! ராஜியாய் விட்டீர்?

வழக்காளி.—தங்கள் தொந்தரவிலிருந்து தப்புவதற்காகத் தான்

—ச. நா. தமாதரு, கல்லாலம்பூண்டி.

உபாத்தியாயர்.—கந்தா! இன்று சம்பளம் கொடுக்காவிட்டால் உன் பெயரை அடித்துவிடுவார்கள்.

கந்தன்.—என்னை அடிக்காம விருந்தால் போதும் சார்.

—T. M. செங்கோடன், திருச்செங்கோடு.

---

தந்தை.—டேய்! பரீட்சையில் எவ்வளவு மார்க்கு வாங்கினாய்?

மகன்.—'500' மார்க்கு, அப்பா.

தந்தை.—எல்லா பரீட்சையிலும் சேர்த்தாலும் 500 வராதே.

மகன்.—இல்லே அப்பா. தமிழில் 5 மார்க்கு. கணக்கு இங்கிலீஷ் இரண்டிலும் சுன்னம். எல்லாம் சேர்த்தால் 500 ஆக வில்லையா?

—'பால்யன்.'

---

ஒருவன்.—என் இப்பொழுதும் குடையைச் சுமக்கிறீர்?

மற்றவன்.—அதற்கு நடக்கும் சக்தி யில்லாதபடியால் தான்.

—த. வேலுப் பிள்ளை, கொளும்பு.

---

சோதிடர்.—உங்கள் கஷ்டம் தொலைந்தது. ஏழரை கழியப் போகிறது.

வந்தவர்.—(தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த 8 ரூபாவை குளித்த இடத்தில் மறதியாக வைத்துவிட்டு வந்தபடியால்) "ஐயையோ! எத்தனை நாள் கஷ்டப்பட்டுத் தேடினேன். ஏழரை கழிந்துவிட்டால் என்ன செய்வேன்" என்று கதறிக்கொண்டே ஓடினார்.

—K. S. மார்க்கண்டு, காவெட்டி.

---

வைத்தியர்.—ஐயா! இந்த மருந்தை வெள்ளாட்டுப் பாலில் குழைத்துச் சாப்பிடுங்கள்.

நோயாளி.—சுத்த வெள்ளாடு கிடைப்பது கஷ்டங்கோ. கருப்பும் வெள்ளையும் கலந்த ஆடு பரவா இல்லேங்களா?

—R. முருகேச முதலியார், சின்னதச்சூர்.

---

வங்கன்.—டே, என்ன ஆச்சரியம்!

கொங்கன்.—என்னடா?

வ.—பொழக்கடைலே ஒரு குழி தோண்டினேன், அங்கே கம்பி கெடந்துதுன்னு?

கொ.—அதனாலே?

வ.—தெரியவில்லேயா? நம்ம பெரியவங்க காலத்திலேயே இந்தத் தந்தி இருந்து துண்ணு அது காட்டுதே.

கொ.—அடே, இது என்ன? எங்க பொழக்கடைலே நான் தோண்டிப் பாத்தே, ஒரு கம்பிகூடக்காணோ.

வ.—அதனாலே?



கொ.—தெரியல்லேயா ஒனக்கு, நம்ப பெரியவங்க காலத்திலேயே கம்பியில்லாத தந்தி இருந்துதுண்ணுதா அர்த்தம்.

'வசந்தா', சென்னை.

---

சுப்பையர்.—அடே பூசாரி! அந்த ஆட்டைக் கொல்லாதே. அடுத்த ஜென்மத்தில் அது உன்னைக்கொல்லும்.

பூசாரி.—அந்த ஆடு முன் ஜென்மத்தில் என்னைக் கொன்றிருக்கிறது சாமி. அந்தப் பழிக்குப்பழி வாங்க நான் அதை இப்போது வெட்டுகிறேன்.

—கே. வி. ஆர். திருமுடி, பழநி.

---

தந்தை.—இங்கே யிருந்த நாவல் எங்கே?

பையன்.—சர்க்கரை டப்பாவில் போட்டிருக்கிறேன்.

தந்தை.—ஏன்?

பையன்.—நீங்கள்தான் அந்த நாவல் இனிமையா யில்லே என்று கூறினீர்களே. சர்க்கரையில் கிடந்தால் இனிமையா யிருக்குமென்று தான்,

—கோவிந்தராஜன், துறையூர்.

---

புருஷன்.—என் கண்ணே! உன்னைவிட மேலான பொருள் உலகத்தில் எனக்கு என்ன இருக்கிறது. சகல சம்பத்தும் எனக்கு நீ தான்.

மனைவி.—ஓ ஹோ! இந்த சம்பத்து போது மென்றுதான் குந்த குடிசையு மில்லாமல் எல்லாவற்றையும் விற்று சீட்டாட்டத்தில் தொலைத்துவிட்டீர் போலும்.

—*ஏ. முனுசாமி, கலவை.

---

புருஷன்.—அடி சக்கே! ரசம் நன்னா யிருக்கே.

மனைவி.—அடி சக்கை ரசத்தை ஊற்றினேள்.

புருஷன்.—என்னடீ! தடிக்கழுதை யிது?

மனைவி.—ஏன்! நீங்கதானே அடிச்சக்கை ரசம் நன்னா இருக்குதின்னீங்கோ.

—எம். அரிபுத்திர முதலியார், கடலாடி.

---

மீனாக்ஷி.—இன்னும் 5, 6 தினத்தில் அப்பா இறந்துவிடுவாரென்று சோதிடன் சொல்லுகிறானே! என்ன அம்மா செய்வது?

தாயார்.—நாளைக்கே உன் அப்பாவை மரண பண்டு கட்டச் சொன்னால் போச்சுது.

—என். கிருஷ்ணசாமி, கடலாடி.

---

* பரிசு பெற்ற விகடம். பரிசுத்தொகை 20-6-34.ல் அனுப்பப்படும்.

# செங்குந்த யாத்திரைவாசி

(சென்ற இதழ் 286-ம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தம்பாடி தேசிகர் எப்படி ஏமாற்ற முயற்சித்துப் பயன்படாது அவமானத்துடன் திரும்பிச் சென்றார் என்பதைப் பற்றி கூட்டத்திலிருந்த ஒருவர் கூறி முடித்ததும் கொத்தச்சேரி ஊர்த்தாண்டவ முதலியார் என்பவர் பேச ஆரம்பித்து "எங்களூரில் ஒரு வேடிக்கை நடந்தது, கேளுங்கள். பத்தாட்டு வீரபத்திர முதலியார் வீட்டிற்குச் சென்ற வருஷம் ஒரு குருக்கள் வந்து 'நான் உங்களுடைய குருக்கள். எனக்குப் படி தக்ஷிணை தரவேண்டும்' என்றார். இவர் தங்களுடைய ஆசாரியரா இல்லையா என்பதை ஷை வீரபத்திர முதலியாரும் அறியார். அவர் பிள்ளைகளும் அறியார். வீரபத்திர முதலியாருக்கு இப்போது வயது 55. மூத்த குமாரனுக்கு 27. இவர் சென்ற 20 வருஷங்களாகப் போதாத காலமானபடியால், நிலையின்றி ஊரை விட்டு ஊர் சென்று ஆங்காங்கு கஷ்ட ஜீவனம் செய்து கொண்டு வந்தார். கடைசியாகச் சென்ற 5 வருஷங்களாகத் தான் கொத்தச்சேரியில் நிலைத்து பிள்ளைகளும் வேலை செய்யத் தலைப்பட்டபடியால் ஒருவாறு கஷ்ட நிவர்த்தி யடைந்திருக்கிறார். இதுவரையில் இவரிருந்த இடத்தை குருக்களு மறியார். இவரும் அல்லாட்டப் பிழைப்பி லிருந்தபடியால் குருக்களைத் தேடினா ரில்லை.

ஆனால், கொஞ்ச காலமாக ஊரிலுள்ள மற்ற உறவின் முறையார் தங்கள் குருக்களுக்குத் தக்ஷிணை படி கொடுத்துக் குருப் பிரசாதம் பெற்று கௌரவ மடைந்து வருவதைக் கண்டு தாமும் அவ்வாறு தமது குருக்களுக்குக் கொடுத்து திருப்தி யடைவதற்கில்லையே என்று எண்ணி எண்ணி ஏக்கமுற் றிருந்தார். ஆனால், தமது குருக்கள் ஊரையும் பெயரையும் கூட இன்னதென்று அறியாத மேதாவியாவர் நமது வீரபத்திர முதலியார். ஆகவே 'நான் உங்களுடைய குருக்கள், நீங்கள் என்னுடைய சிஷர்கள்' என்று சொல்லிக்கொண்டுவந்த பண்டாரத்தையாவுக்குக் கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டதென்று எண்ணி சந்தோஷப்பட்டு நிரம்ப உபசரித்து எல்லா சப்ளையும் செய்தார். மூத்த குமாரனைக் கலந்து தோன்றிய அளவு தக்ஷிணை கொடுத்து பிரசாதம் பெற்று ஒருவாறு திருப்தி யடைந்தார். குருக்களும் போய் விட்டார்.

அடுத்த மாதம் வேறொரு பண்டாரத்தார் அதே வீரபத்திர முதலியார் வீட்டிற்கு வந்து 'நான் உங்களுடைய குருக்கள்; நீங்கள் என்னுடைய சிஷர்கள் தெரியுமா' என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்தார். வீரபத்திர முதலியாருக்கு ஒன்றும் தோன்றவில்லை. வாய் குளறினார். பக்கத்தி லிருந்த அவரது மூத்த குமாரன் வந்த பண்டாரத்தையாவைப் பார்த்து 'ஐயா, போன மாதந்தான் குருக்கள் வந்து படி தக்ஷிணை பெற்றுக்கொண்டு போனாரே. நீங்கள் யார்? நீங்



களுமா எங்கள் குருக்கள்' என்று கேட்டான். உடனே வந்த பண்டாரத்தையா கட்டை அவிழ்த்து அவர்கள் வம்சாவளியைப் படித்துக் காட்டி, இம்மாதிரியான ரிகார்டுகள் போன மாதம் வந்தவரிடம் இருந்ததா பார்த்தீர்களா? நீங்கள் ஏமாந்து போனீர்கள். உங்கள் முட்டாள்தனத்திற்காக நானு கஷ்டப்படுகிறது. சென்ற 20 வருஷங்களாக நீங்க ளிருந்த இடமே தெரியாம லிருந்தது. நாலு நாளைக்கு முன்னே தான் இவ்வூரி லிருப்பதாகக் கேள்விப்பட்டேன். 20 வருஷத்திய பாக்கியிருக்கிறது' என்று பதிலிறுத்தார். தந்தை பிள்ளை முகத்தைப் பார்த்தார். பிள்ளை தந்தை முகத்தைப் பார்த்தான். இன்னது செய்வதென்று அவர்களுக்குத் தோன்றவில்லை.

நடராஜன் தந்தையைக் கோபத்தோடு நோக்கி, 'முன்னே வந்தவரை நீர் தானே நமது குருக்கள் என்று சொன்னீர். அறியாதவன் எனக்கென்ன தெரியும். இவருக்கு என்ன சொல்லுகிறது. இப்படியே ஒவ்வொரு மாதமும் ஒவ்வொருவர் வந்துகொண்டிருந்தால் என்ன செய்கிறது? சரி இப்போது இவர் நம்முடைய குருக்களா, அவர் நம்முடைய குருக்களா?' என்று கேட்டான்.

ஒன்றுந் தோன்றாத வீரபத்திர முதலியார் 'அப்போது பார்த்தால் அவர் தான் நம் குருக்கள் போலிருந்தது. இப்போது பார்த்தால் இவர்தான் குருக்கள் போலிருக்கிறது' என விடை யளித்தார். நடராஜன் வந்தவரைப் பார்த்து 'சுவாமி! போன மாதம் வந்தவர் யாரா யிருக்கலாம்? உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டான். பண்டாரத்தார் அடையாளங்களை விசாரித்தறிந்து 'ஓஹோ! அப்படிச் சொல்லுங்கள். அவர் என்னுடைய மாமாவின் புத்திரர். வீரபத்திர முதலியாரே! 20 வருஷங்களுக்கு முன் உங்களூரில் தீக்ஷை செய்தேனே, அப்போது என்னோடு எனக்கு ஒத்தாசையாக வந்திருந்தாரே, ஞாபகமிருக்கிறதா? அவர்தா னிவர்.'

வீரபத்திர முதலியார்.—நடராஜா! ஆஹா! இப்போது ஞாபகம் வருகிறது. இவரே நம்முடைய குருக்கள். அவர் எங்களுக்கு தீக்ஷை செய்தபோது உதவிக்கு வந்திருந்தவர் தான். அவர் நம்முடைய குருக்களல்ல. அவரென்றும் இவரென்றும் புரியவில்லை.

பண்டாரத்தையா.—சரிதான். சென்ற மாதம் அவர் இந்த ஊர்ப் பக்கம் வந்ததாகத்தான் கேள்வி. இவ்வூரில் தங்கிய சமயம் உம்மைக் கண்டு பழைய ஞாபகத்தால் க்ஷேமம் விசாரித்திருப்பார். நீங்களும் மரியாதைக்காக அவருக்கு வேண்டிய சப்ளை செய்திருக்கலாம். அதைப்பற்றி எனக்கென்ன? சரி, நேரமாகிறது. பூஜைக்குத் தயார் செய்ய என்ன சொல்லுகிறீர்கள்.

வீரபத்திர முதலியார் இவருக்கும் சப்ளை செய்து தக்ஷிணை கொடுக்கச் சம்மதித்தார்.

நடராஜன்.—அது கூடாது. நான் ஒப்பமாட்டேன். உங்கள் பேச்சை நம்பி போன மாதம் வந்தவரை என் குருக்களாக எண்ணி தக்ஷிணை முதலியவை கொடுத்து சேவித்துக்கொண்டு பிரசாதம் பெற்றேன். இனி யான் மற்றொருவரைக் குருவாகப் பாவிக்கமாட்டேன்.

*வீரபத்திர முதலியார்.*—நடராஜா! அப்படி முரட்டுத் தனமாய்ப் பேசாதே. நம்முடைய குருக்கள் இவர் தான். குருத்துரோகம் செய்ய லாகாது. இதைப்பற்றி குருக்களையா பட்டயத்தில் என்னென்ன எழுதி யிருக்கிறது பார். நாம் ஏன் அந்த பாவத்திற்காளாக வேண்டும். நாமெல்லோரும் ஒற்றுமையாக விருந்து ஐயாவுக்குக் காணிக்கை கொடுப்பதே நல்லது.

இவ்வாறு பலவிதமாய் வீரபத்திர முதலியார் சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தார். இதனிடையே அங்கு பெருங் கூட்டம் கூடி விட்டது.

*நடராஜன்.*—நான் பிடித்த பிடியே பிடிதான். அதை யாராலும் மாற்ற முடியாது. எனக்குக் குரு அவர் தான். உமக்கு வேண்டுமானால் இவரை வைத்துக் கொள்ளுங்கள். அதில் எனக்கொன்றும் ஆக்ஷேபனை யில்லை.

இந்நிகழ்ச்சியினைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் 'பாமர மக்களுக்கு ஞானோபதேசம் செய்து சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவிகளை அவர்களுக்குத் தேடி வைப்பதாகச் சொல்லிக்கொண்டு சாதாரண லௌகீக ஒழுக்கமும் இல்லாதவர்களாய்த் திரியும் அபிஷேகஸ்தர்களது பித்தலாட்டத்தையும் பிறவற்றையும் கண்டு குலுங்க குலுங்க நகைத்து வயிற்றையும் புண்ணாக்கிக் கொண்டார்கள்' என்று சொல்லி முடித்தார்.

(தொடரும்)

---

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கட்டுரைகள் வரிக்கு வரி இடம் விட்டு, தெளிவான எழுத்தில், காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2. வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்ட வல்லதும், மன உற்சாகத்தை எழுப்ப வல்லதும், சிரிப்பை ஊட்டத் தக்கதுமாய் மித்திரனில் 2 அல்லது 3 பக்கத்துக்கு மேற்படாமல் இருக்கக்கூடிய கட்டுரைகளுக்கே பிரசுரிப்பதில் முதன்மை தரப்படும்.

3. கட்டுரையோடு தனிக் கடிதங்கள் எழுத வேண்டியதில்லை, எழுதுபவரின் பெயரும் விலாசமு மட்டும் கட்டுரையின் முகப்பில் குறிப்பிடுதல் போதுமானது.

4. கட்டுரைகளெல்லாம் 'ஆசிரியர்' விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

# குப்பை உயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது.

(ரவூல் இலேர், புதுவை.)

புதுச்சேரியிலே, ஒரு நாள் மாலைப்பொழுதில், ஒரு மாடியின் மீது சந்தானம் சச்சிதானந்தம் என்ற பெயர்கொண்ட இருவர் உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். ஒருவரோடொருவர் அளவளாவி க்ஷேம லாபங்களைப்பற்றி விசாரித்த பிறகு ஒருவர் மற்றொருவரை நோக்கி "பையன் எவ்வளவில் இருக்கிறான்" என்று வினவினார்.

*சச்சிதானந்தம்.*—அது கிடக்குது கழுதை.

பிள்ளையின் க்ஷேமத்தை விசாரிக்கப் போய் அவனை கழுதையாக்கி விடுவாரென்று சந்தானம் எதிர்பார்க்க வில்லை; சில விநாடிகள் இருவரும் மௌனமா யிருந்தனர். மீண்டும் சச்சிதானந்தம் "மூளைத்து நாலிலை கூட விடவில்லை" என்றார்.

தன் மகன் கழுதையானதால் அவனைப்பற்றி மேலும் பேசுவதைத் தவிர்த்து ஏதோ தன் பயிர் பச்சைகளைப்பற்றி பேசுகிறார் என்று சந்தானம் இப்பொழுது நினைத்தார். ஆனால் சச்சிதானந்தம் மறுபடியும் "தலை கிறு கிறுத்துத் திரிகிறது" என்றார்.

*சந்தானம்.*—சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே.

*சச்சிதானந்தம்.*—பையன் பெரியவனாய் விட்டான்.

*சந்தானம்.*—பெரியவனாய் விட்டால் கல்யாணம் பண்ணிவைத்து விடுகிறதுதானே?

*சச்சிதானந்தம்.*—என்ன சார்! கல்யாணம் கிள்ளுக்கீரையா? இந்தக் காலத்திலே ஒருவரை நெருங்கிப் பெண் கேட்டால், பி. ஏ. வுக்குமேல் என்னென்ன (Qualifications) யோக்யதைகள் உண்டு என்று கேட்கிறார்கள். நம்ப பையனுக்கு ஆங்கிலத்தில் எழுத்துக்களையாவது (Alphabet) தலை கீழாய் சொல்லத் தெரியுமோ என்னமோ! என்று சருக்கமாய் பதிலளித்தார்.

சச்சிதானந்தம் தான் அதி பால்யத்திலேயே கல்யாணம் செய்து கொண்டதால் தன் மகனுக்கும் அப்படியே சீக்கிரம் முடித்துவிட வேண்டுமென்பது கோரிக்கை. ஆனால் பிள்ளையின் நிலைமையை வருத்தத்துடன் சிந்தித்தே தன் நண்பர் கேட்டதற்கு அவ்வளவு இழுத்தாற் போல் பதில் கூறினார்.

அவர் மகன் சில கல்யாண குணங்களுடையவன். அவனுக்குச் சந்தோஷம் வந்துவிட்டால் இன்னது செய்வதென்று தெரியாது. கிடீரென்று வீட்டின் கூரைமேல் ஏறிக்கொண்டு, "அப்பா என்னைப் பாத்தியா' என்பான். தெருவில் போகும் சில்லரை வியாபாரிகளையெல்லாம் கூப்பிட்டுவிட்டு ஓடிப்போய் ஒளிந்துகொள்வான்.

எப்பொழுதாவது கடைக்குப் போனால் ஒரு பொருளின் விலை ஓரணா என்றால் தனக்கு நிரம்ப ஆங்கிலம் தெரியுமென்றும், தன்னை நிரம்ப பெரிய மனித னென்றும் கடைக்காரர் நினைத்துக்கொள்ள வேண்டு மென்று டேக் டூ அணாஸ் (Take two annas) என்று இரண்டணா கொடுத்துவிட்டு ஒரணா பொருளைப் பெற்றுவருவான். தன் தந்தை யின் கோட் முதலியதுகளை ஒளித்துவிட்டு அவரை வெகு நேரம் தேட வைத்துப் பிறகு புன்முறுவலுடன் கொண்டுவந்து கொடுப்பான். இவன் துடுக்கை வீட்டினுள்மட்டும் வைத்துக்கொண்டால் எவ் வளவோ தாவலை என்று சச்சிதானந்தம் சிந்திப்பார்.

மகத்தான பூஜா பலங்களால் பெற்ற பிள்ளை அருமருந்தன்ன பிள்ளையா யில்லாமல் அருமந்த பிள்ளையாக இருப்பது கண்டு பெற் றோர் சிற்சில சமயம் வருந்துவ துண்டு. படிப்பை எடுத்துக்கொண் டாலோ புஸ்தகம் பிதற்றுகிற தென்பான். ஒரு வருஷம் வகுப்பு மாறிவிட்டால் புதிய புஸ்தகங்களுக்கோ, அழகழகான பைண்டு நோட்புக்குகளுக்கோ, விதவிதமான பேனா பென்சல்களுக்கோ பிள்ளைக்குக் குறைவில்லை.

ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு வருஷங்களுக்குக் குறையாமல் இருந்துவிட்டு எப்படியோ ஆறாவது பாரத்தை எட்டிப் பார்த்தான். இதற்குமேல் அவனுக்கு இங்கிலாந்து செல்லவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அங்கு போய்ப் படித்தால் எவரும் வகிக்கக்கூடாத உயர் பதவியை யடையலாமென்பது அவன் நம்பிக்கை. அவன் தந் தையும் எதையும் பாஸ் பண்ணாவிட்டாலும் எ.பி. லிடி. (லண்டன்) என்றாவது ஒரு பட்டம் வாங்கி வரமாட்டானா என்றும், அது கூட இல்லா விட்டாலும் இங்கிலாந்து சென்று திரும்பியவர், ஐரோப்பியர் பழக்க வழக்கங்களைத் தழுவியவர் (Europeanised) என்ற ஒரு காரணத்தினா லாவது மேல் விழுந்து பெண்கொடுக்கமாட்டார்களா என்றும் எண்ணி அவனை இங்கிலாந்து அனுப்பிவைத்தார். பிள்ளை அங்கு சென்றதும் ஆரம்பித்தது ஆடம்பர வாழ்க்கை. அவனுக்கு ஓயாமல் பணம் அனுப்பி அவன் தந்தையும் குசேலரானார்.

தந்தையினிட மிருந்து முன்போல் பணம் கிடைப்பதில்லை. எனவே பிள்ளையின் டாம்பீக வாழ்க்கை இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. கஞ்சிக்குக் காற்றாய்ப் பறந்து பல தேசங்களிலும் பிழைப்புக்காகச் சுற்ற ஆரம்பித்தான். தரித்திரம் மேலிடவே பிள் ளைக்குக் கருத்து ஏற்பட்டது. தான் செல்லும் ஊர்களின் பாஷை களையெல்லாம் சிரத்தையோடு நன்றாய்ப் பேசக் கற்றுக்கொண்டான். இந்த யோக்கியதையால் இங்கிலாந்திலேயே ஒரு பெரிய கம்பெனி யில் உத்தியோகம் கிடைத்தது. சில நாட்களில் தன் அதிகாரிகளுக்கு அவன் தன் வேலையில் திருப்தியைத் தந்தான். நீண்ட லீவு பெற் றுக்கொண்டு வீடு திரும்பினான். தாய் தந்தையரின் தரித்திர நிலை அன்றோடு ஒழிந்தது.

சச்சிதானந்தம் எளியவராய் இருந்தபோது அவரைத் திரும்பிப் பார்த்தவர்கள் ஒருவரும் கிடையாது. இப்பொழுதோ வெனில் அவர் அண்ணன் மகனுக்கு என் மாமன் மச்சினியைக் கொடுத்திருக்கிறது

# இன்பத்திற்கும் வெற்றிக்கும் வழி

(R. இலக்ஷ்மணன், முனிசிபல் லைப்ரேரியன், கோவை)

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவதென்ப திழுக்கு” என்பது ஆன்றோர் வாக்கு. நாம் ஓர் காரியத்தைச் செய்து முடிக்க விரும்பினால், அக்காரியத்தின் ஆதி என்னவென் பதை முதலில் ஆராய்ந்து அறியவேண்டும். அப்படியில்லாமல் அக் காரியத்தின் மத்தியிலோ, அல்லது கடைசியிலோ இருந்து ஆரம்பித்தால் நாம் நினைத்த காரியம் கைகூடாமல் சிதறிப் போய்விடும். பள்ளிக்கூட மாணவர்கள் ஆரம்பத்திலேயே கணித சாஸ்திரத்தையோ அல்லது விஞ்ஞான சாஸ்திரத்தையோ கற்ப தில்லை. ஆனால் முதலில் உயிர், மெய் எழுத்துக்களைத்தான் படிக்கி றார்கள். இப்பொழுது உலகத்திலேயே பெரிய மேதாவிகளாக விளங்கும் அறிவாளிகள் யாவரும், ஒரு சிறிய காரியத்தையுங் கூட அலக்ஷியம் செய்யாமல் கவனிக்கிறார்கள். ஆகையால் எந்தவிதமான காரியமா யிருந்தாலும், அதைச் செய்துமுடிக்க, முதலில் நாம் கையாளவேண்டிய சரியான முறைகளைக் கண்டு பிடிக்கவேண்டும். சரியான வழிகளைக் கண்டுபிடிக்காமல் அக்காரி

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்பது போன்ற உறவு காட்டி பலர் குலவி மருவினர். சச்சிதானந் தம் ஆழ்ந்து யோசித்து குண நலமும், குல நலமும் பொருந்திய சிறிது எளிய குடும்பத்தில் நத்தையில் நல்ல முத்து முளைத்தது போல் உதித்திருந்த ஒரு பெண்ணை தன் மகனுக்கு மணம்செய்து வைத்தார்.

விவாக முடிந்து சில தினங்களுக்குப் பிறகு சதிபதிகள் ஒரு மாலைப்பொழுதில் ஒரு சோபாவில் அமர்ந்திருந்தனர். தென்றல் இவர்களுக்கு உற்சாக மளித்தது. மாப்பிள்ளை “சரசராணி கல் யாணி” என்று பாடிக் கொண்டிருந்தான். மெல்லியலும் கீழ்நோக்கிய வண்ணமாய்த் தன் கணவன் அன்பைப் பருகிக் கொண்டிருந்தாள்.

இதனைப் பார்த்து அவனைவிட அதிகமாய்ப் படித்து வேலையில் லாத் திண்டாட்டத்தில் சிக்கி அலையும் சில வாலிபர்கள் “குப்பை உயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது” எனக்கூறி பெருமூச்சு விட்டார்கள்.

யத்தை ஆரம்பித்தால் அதனால் நாம் யாதொரு பயனும் அடையாமல் போவதுமல்லாமல், துன்பத்தையும் அடைய நேரிடும்.

மனித வாழ்க்கையின் இலட்சியம் ஒழுக்கத்திலிருந்து துவங்குகின்றது. நமது உடல், உயிர் மேம்பாட்டிற்காக சில ஒழுக்க நெறிகள் வகுக்கப்பட்டுள்ளன. அந் நெறிகளை ஒவ்வொருவனும் பின்பற்ற வேண்டுமெனச் சொல்லுவது மிகவும் சுலபம். ஆனால் அதன்படி நடப்பவர் ஒரு சிலரே. மனித சமூகத்திலேயே நாள் தோறும் உபயோகப் படுத்தப்படுவதும், மனிதன் கண்டிப்பாய் தெரிந்துகொள்ள வேண்டியதுமான சில கொள்கைகளிருக்கின்றன. இக் கொள்கைகளை எவனொருவன் தன் வாழ்க்கையில் சரியாக உபயோகப் படுத்துகிறானோ அவன் யாதொரு கஷ்டமும், நஷ்டமும் அடையாமல் வெற்றி அடைவானென்பது திண்ணம். இக் கொள்கைகள் 5 வகைப்படும். இவ் வைந்துகொள்கைகளும் அநுஷ்டானத்தில் மனிதனுடைய புத்திக்கும், வெற்றிக்கும் வாழ்க்கை நோக்கத்தைப் பூர்த்தி செய்யும்படியான ஐந்து வழிகளெனச் சொல்லலாம். ஆகையால் இக்கொள்கைகளை வாய்மட்டும் பேசி அதோடு விட்டுவிடாமல் ஹிருதயத்தில் நன்றாக பதியவைத்துக்கொள்வதோடு, பழக்கத்திற்கும் கொண்டு வந்தால்தான் அதன்பயனை அடையமுடியும். இவ்வைந்து கொள்கைகளாவன:—

1. கடமை மனிதர் தத்தம் கடமையைச் செய்து உயிர்வாழ வேண்டும். ஒவ்வொரு மனிதனுடைய கடமை ஒவ்வொருவிதமாக இருந்தாலும் அவைகளுடைய கொள்கைகள் யாவும் ஒன்றே. தான் தன்னுடைய வேலையிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பதோடுகூட, பிறருடைய வேலைகளில் தலையிடாமலிருப்பதே கடமை என்னும் அப் பதத்திற்கு அர்த்தம். தான் செய்துகொண்டிருக்கும் வேலைகளை கவனத்தோடு செய்தலும், இனிமேல் செய்யவேண்டிய வேலைகளில் கருத்தோ டிருப்பதும் கடமையாகும். ஆகையால் நாம் நமது கடமையில் தவறாது உலக வாழ்க்கை நடத்தவேண்டும்.

2. உண்மை. இதற்குப் பொய்சொல்லாமை என்பதே விளக்கமான பொருள். உண்மையுடைய ஒருவன் பிறரை ஏமாற்றவோ, அல்லது பிறர்மேல் குற்றம் சுமத்தவோ மாட்டான்.

தான் சொல்லும் சொற்கள் இன்னவை என்று அறிந்து உண்மையாகப் பேசி பிறருடைய நன் மதிப்பை சம்பாதிப்பான். உண்மை யுடையவன் எல்லாத் துறைகளிலும் இன்பத்தையும் சுகத்தையும் அடைவான் என்பதில் என்ன ஐயம்?



3. சிக்கனம்:—யாரே சிக்கனத்தின் ஆற்றலை அறிந்துளார்? சிக்கனத்தை அறிந்தவன் மிகவும் சாமர்த்திய சாலியாகும். அவன் கூர்மையான புத்தியும், பொறுமையும், எடுத்த காரியத்தை நிறைவேற்றும் ஆற்றலுமுடையவனாக இருப்பான். சிக்கனமுடையவன் தேக பலத்தையும், மனோ பலத்தையும் அடக்கி ஆளுவான். வரவுக்குத் தக்க செலவு செய்பவன் வாழ்நாளில் துன்ப மென்பதே தலைகாட்ட முடியாது.

4. உதாரகுணம். மனிதனுக்கு சிக்கனத்துடன் உதாரகுணமும் இருக்கவேண்டும். உண்மையில் சிக்கன முள்ள மனிதனே உதாரகுண முடையவனாக இருப்பான். உதாரகுண முடையவன் பிறருக்குப் பணஉதவி செய்வதோடு, தன்னுடைய கருத்துக்களையும், செய்கைகளையும் சொல்லுவான். எதிரிகளோடும், சிநேகிதர்களோடும் அன்பு, இரக்கம் முதலிய நல்ல எண்ணங்களோடு இருப்பான். உதாரகுணமே மனிதனுக்கு நல்ல சிநேகிதர்களையும், ஜன சமூகத்திலே கூடியிருக்கும்படியான குணத்தையும், உண்டாக்கும். ஆகையால் நாம் நம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அற்ப சுகத்தில் செலவிடாமல், பிறருக்குச் சிறிதாவது பயன்படும்படி உபயோகப் படுத்தவேண்டும்.

5. தன்னடக்கம். கடைசியானதும், மிகவும் முக்கியமானதுமான கொள்கை தன்னடக்கமே. தன்னடக்கம் உள்ளவன் பொறுமை, சாந்தம், அன்பு, உறுதி முதலிய நற்குணமுள்ளவனாக இருப்பான், கோப மென்னும் கொடிய பேய் தன்னடக்கமுள்ளவனிடம் தலை காட்டாது. கோபமுடைய எந்த மனிதனுடைய குடும்பத்தை எடுத்துக் கொண்டாலும், அக் குடும்பம் சீர்குலைந்தே இருப்பதைக் காணலாம். மனிதன் அடையும் மனக்கஷ்டத்திற்கும், துன்பத்திற்கும், எடுத்த காரியத்தில் தோல்வியடைவதற்கும் காரணம் தன்னடக்க மின்மையே. தன்னடக்க முடையவனை வீரனென்றும் சொல்லலாம்.

இவ்வைந்து தூயகொள்கைகளையும் அனுஷ்டித்தால் நாம் வாழ்க்கையில் இன்பத்தையும் வெற்றியையும் அடைவோம் என்பது திண்ணம்.

---

**சுருக்கமா யில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்)**

---

# ரகுபதி

[எம். கிருஷ்ணசாமி எம். ஏ., துறையூர்]

ரகுபதி 1928 ஆம் வருஷம் பி. ஏ. பரீக்ஷையில் முதலாவதாகத் தேறினான். எந்த வகுப்பில் பாஸ் செய்தால்தானென்ன? பத்து வருஷங்களுக்கு முன்பாக அவன் பிறந்திருந்து பி. ஏ. பரீக்ஷையையும் பத்து வருஷத்திற்கு முன் கடந்திருந்தால் அவன் கட்டாயம் டெபுடி கலெக்டர் வேலைக்கு வந்திருப்பான். பத்து வருஷத்திற்குப் பிறகு அவன் வாழ்க்கையை ஆரம்பித்ததால் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற சுழலில் ரகுபதி அகப்படவேண்டி யிருந்தது.

என்ன இருந்தாலும் ரகுபதி கொஞ்சம் அதிர்ஷ்ட சாலி. அவனுடைய ஒன்று விட்ட சித்தப்பா செக்ரடேரியட்டில் ஒரு பெரிய உத்தியோகத்தில் இருந்தார். அவர் ஒரு ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்கு சிபார்சு செய்து, வெகு சிரமப்பட்டு ரகுபதியை சிறுகமணி என்ற ஊரில் ஒரு ஆரம்ப ஆசிரியராக நியமித்தார். வேலையே யில்லாது தவிக்கும் தன் நண்பர்களைப் பார்த்தபொழுது தனக்கு இந்தவேலை கிடைத்தது பெரும் பாக்கியம் என்று ரகுபதி சந்தோஷப் பட்டான்.

அந்த பள்ளிக் கூடத்தில் மூன்று வகுப்புக ளிருந்தன. அதற்கு ரகுபதிதான் தலைமை ஆசிரியர். அவனே உதவி ஆசிரியராகவும், பியூனாகவும், ரைட்டராகவும் நடிக்கவேண்டி யிருந்தது.

அவனுக்கு சம்பளம் ஒரு டஜன் ரூபாய்கள். ஜனவரிமாத சம்பளம் அடுத்த அக்டோபர் மாதத்திற்குள் கட்டாயம் கொடுத்து விடுவார்கள். சம்பளத்தில் 25 பெர்சண்டு ஜில்லா போர்டு கல்வி இலாகா குமாஸ்தாவிற்குக் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் ரகுபதி ஜில்லாவின் அடுத்த கோடியிலுள்ள ஒரு தண்ணீரில்லாத காட்டிற்கு மாற்றப்பட்டு விடுவான்.

வருஷத்திற்கு ஒருதரம் பள்ளிக்கூட இன்ஸ்பெக்சன் நடக்கும். டிபுடி இன்ஸ்பெக்டருக்கு ரகுபதி தன்னுடைய வருஷ சம்பளத்தில் மற்றொரு 25 பெர்சண்டு கொடுத்துவிடவேண்டும். இல்லாவிட்டால் இன்ஸ்பெக்டர் ரகுபதியின் பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தி சரியா யில்லையென்றும், ஆகவே அவனை வேறு ஊருக்கு மாற்றிவிடவேண்டுமென்றும் ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்கு சிபார்சு செய்துவிடுவார்.

ரகுபதியின் சாதாரண வேலை தன்னுடைய மூன்று வகுப்புக்கும் பாடம் சொல்லித்தருவது. ஆனால் அவசியமானபோது அவன் வேறு வேலைகளையும் செய்யவேண்டி யிருக்கும். ஜில்லா போர்டு எலக்ஷன் வந்தால் பழைய பிரசிடெண்டுக்காக ஓட்டு சம்பாதிக்கவேண்டும். பிரசிடெண்டு மகளுக்கு கலியாணம் வந்தால் எல்லோருக்கும் வெற்றிலைபாக்கு வைக்கவேண்டியது ரகுபதியின்வேலை. வேறு ஆரம்ப ஆசிரியர்கள் அந்த சமயத்தில் கலியாணத்திற்கு சமையல்வேலைகூட செய்வார்கள். ஆனால் ரகுபதி பட்டதாரி யானபடியால் அவனை அந்த வேலை செய்யும்படி கட்டாயப் படுத்துவதில்லை. மேலும் அவன் பிரசிடெண்டின் மோட்டார்ஓட்டி முதல் பிரசிடெண்டின் நாய்க் குட்டி வரை எல்லோருக்கும் சலாம் போடவேண்டும். இல்லாவிட்டால் வேலைக்கு ஆபத்து வந்துவிடும்.



ரகுபதி மிகவும் நல்ல பையன். இவ்வளவு சங்கடங்களுக்கும் மத்தியில் அவன் எப்பொழுதும் சந்தோஷமா யிருப்பான். கிராம நிர்மாண வேலைகளில் அவனுக்கு அதிக ஆவல் உண்டு. ஆகவே அவன் கிராமவாசிகளின் மனதை சீக்கிரம் கவர்ந்தான். அவன் வந்த பிறகு சிறுகமணியில் ஒவ்வொரு வீட்டிலும் ராட்டினம் சுழல ஆரம்பித்தது. கள்ளுக்கடைக்கு ஏராளமான நஷ்டம். அடுத்த வருஷத்திலிருந்து கள்ளுக்கடையே எடுக்கப்பட்டு விட்டது.

ஒழிந்த நேரங்களில் அவன் சில பிள்ளைகளுக்கு பிரைவேட் சொல்லிக் கொடுத்துக் கொண்டு வந்தான். ஆகவே அவனுக்கு வேண்டிய அரிசி காய்கறி விறகு முதலியவைகள் அவனுக்கு இனாமாகக் கிடைத்துவிடும். பள்ளிக்கூடத்தின் ஒரு பாகத்திலேயே அவன் வசித்து வந்ததால் வாடகைச் செலவும் இல்லை. ஆகவே மீதமிருந்த ஆறு ரூபாயையும் தந்தைக்கு அனுப்பிக்கொண்டு வந்தான்.

அதே ஊரில் ஒரு பெரிய மனிதர் தர்மத்தில் ஒரு பெண் பாடசாலை யிருந்தது. அதன் ஆசிரியையின் பெயர் விமலா. விமலா ஒரு விதவை. அவள் சிறு குழந்தையா யிருக்கும்போதே—அவளுக்கு விவாகமாகிய ஐந்தாம் வயதிலேயே—விதவையாய் விட்டாள். விமலாவுக்கு இப்போது வயது பதினைந்து. ஒப்பற்ற அழகும், அழகுக்கேற்ற புத்திசாலித் தனமும், குணமும் உடையவள். அவளுக்கு சங்கீதத்தில் நல்ல ஞானம் உண்டு. மிகவும் இனிமையான சாரீரம் உடையவள்.

ரகுபதி அடிக்கடி தன் பாடசாலைக் கருகிலுள்ள பெண்கள் பாடசாலைக்குச் செல்வான். அதனால் ரகுபதிக்கும் விமலாவுக்கும் நட்பு ஏற்பட்டது. இருவரும் அடிக்கடி சந்திக்க நேர்ந்ததால் அவர்களை யறியாமலேயே அவர்களுடைய சிநேகிதம் முற்றி காதலாக மாறியது. ரகுபதி சமூக சீர்திருத்தத்தில் அதிக வேட்கை யுடையவன். விதவை விமலாவை மணந்து தனது சமூகத்துக்கு நல்ல மார்க்கத்தைக் காட்ட வேண்டும் என்பது அவனுடைய அவா.

தன்னுடைய விருப்பத்தைத் தந்தை ஜம்புலிங்க அய்யருக்கு அறிவித்தான். அடுத்த தபாலில் அவனுக்குக் கீழ்க்கண்ட கடிதம் வந்தது.

மேனல்லபுறம்
16-6-34.

குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே!

உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? விதவையைக் காதலிக்கிறேன் 'என்று எழுதி யிருக்கிறாயே. விதவையை மணந்தால் நீ இந்து தர்மத்தையே கெடுத்தவன் ஆவாய். மேலும் நம்மை நமது சமூகத்திலிருந்து நீக்கிவிடுவார்கள்.

தவிர ஒரு டெபுடி கலெக்டர் தனது மகளை உனக்குக் கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார். வரதக்ஷிணை ஐயாயிர ரூபாய் கொடுப்பார். உனக்குத் தகுந்த உத்தியோகமும் வாங்கிக் கொடுப்பார்.

ஆகவே யோசித்துச் செய். எனது விருப்பத்திற்கு மாறாக நடந்தால் உன் முகத்தில் விழிக்கமாட்டேன். மரண பண்டுக்காக நான் போட்டிருக்கும் இரண்டாயிரம் ரூபாயையும் கும்பகோணம் சங்கராச்சாரியார் மடத்துக்கு எழுதி வைத்துவிடுவேன்.

இப்படிக்கு,
ஜம்புலிங்க அய்யர்.

ரகுபதி யோசிக்கலானான். தந்தையின் விருப்பப்படி செய்தால் உத்தியோகமும், வரதக்ஷிணையும் கிடைக்கும். டெபுடி கலெக்டரின் மருமகன் ஆகலாம். விமலாவை மணந்தால் தந்தையின் கோபமும், சமூக பகிஷ்காரமும் கிடைக்கும். ஆகவே தந்தை விருப்பப்படி செய்யலாமா என்று யோசித்தான். மறு நிமிடம் விமலாவின் தோற்றம் அவன் முன் தோன்றியது. "குற்றமற்ற ஒரு இள மங்கையின் வாழ்க்கை முழுவதையும் சந்தோஷமற்ற பாலைவன மாக்குவதா?" என்று அவன் மனச்சாக்ஷி அவனைக் கேட்டது. இந்த சமூகம் மிகவும் கொடியது என அவன் நினைத்தான்.

ஆகவே தந்தைக்குத் தனது நோக்கத்தை அறிவித்துவிட்டு அடுத்த வாரம் ஆடம்பரமற்ற முறையில் விமலாவை மணம் செய்துகொண்டான். அதற்குப் பிறகு அவனது தந்தை அவனுக்குக் கடிதம் எழுதுவதே கிடையாது.

*　　　*　　　*

ஜம்புலிங்க அய்யர் மூன்று வருஷம் சென்று ஒருநாள் ரகுபதியின் வீட்டிற்கு வந்தார். ரகுபதி மிகுந்த ஆச்சரியப்பட்டான். மகாத்மா காந்தி யங் இந்தியாவில் "இந்து மதத்தின் கறை" என்று எழுதியிருந்த வியாசத்தை ஜம்புலிங்க அய்யர் படிக்க நேர்ந்ததாகவும், அதனால் அவர்மனம் மாறியதாகவும் தெரிவித்தார்.

விமலாவைப் பார்த்தவுடன் ஜம்புலிங்க அய்யர் அழுது விட்டார். விமலா முகத்தைப் பார்த்ததும் அவள் தனது தங்கையின் புத்திரி என்று அவருக்குத் தெரியவந்தது

குடும்ப மனஸ்தாபத்தால் ஜம்புலிங்க அய்யர் தனது சகோதரியின் வீட்டுக்குப் பல வருஷங்களாகப் போவதேயில்லை. ஆகவே விமலாவின் பின்வாழ்வும் வரலாறும் அவருக்குத் தெரியாது. ரகுபதியும் சென்னையிலேயே படித்துக்கொண் டிருந்ததால் விமலாவை அவன் சிறு வயதில் பார்த்தது கிடையாது. விமலா தான் விதவையான பிறகு தனது தாய்தந்தையர்கள் அதே வருத்தத்தால் இறந்து விட்டதாகவும் தனது ஜீவனத்திற்காக உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டதாகவும் கூறினாள். தனது கடிதத்தின் பிரகாரம் ரகுபதி நடந்திருந்தால் தனது தங்கை புதல்வியின்கதி என்னவா யிருக்கும் என்று நினைத்த-

பொழுது ஜம்புலிங்க அய்யர் கண் முன்பாக காந்தி மகான் 'யங் இந்தியா'வில் எழுதியிருந்த எழுத்துக்கள் தங்கத்தால் எழுதியவைபோல் ஜொலித்தன.

*　　　*　　　*

ரகுபதி ஆங்கிலத்தில் எழுதியிருந்த சில சிறு கதைகளை வியந்த கல்விக் கமிட்டியார் அவனை ஒரு கல்லூரிக்கு ஆங்கில ஆசிரியராக நியமித்தார்கள். ஜம்புலிங்க அய்யரும், ரகுபதியிடம் வந்துசேர்ந்துவிட்டார். இப்போது அவர்கள் வாழ்க்கை ஆநந்தமாய் நடந்துவருகிறது. எல்லாம் விமலாவின் அதிர்ஷ்டம்.

# தமிழின் பெருமை

(கு. ஜயராமன், நேமலி.)

எவர்க்கும் அவரவர் தாய்மொழிக் கல்விதான் அவசியமாகும். ஒவ்வொரு நாட்டின் அமைப்புக்குத் தக்கவாறு மொழிகள் அமைந்துள்ளன. நமதுநாட்டின் இயல்புக்கேற்ற மொழி தமிழ் மொழியே யாகும். ஆதலால் மாணவர் தமிழ் மொழிமீது கவலை செலுத்தாது வாழ்வது இயற்கை அன்னையை மறந்து வாழ்வதாகும். தாய்மொழிமீது பற்றில்லாத எந்நாட்டாரும் முன்னேற்றமுற முடியாது. அடிமைச் சங்கிலியில் கட்டுண்டிருந்த அயர்லாந்து, பின் விடுதலை அடைந்ததற்குக் காரணம் மறந்திருந்த நாட்டுமொழியை வளர்த்த தன்றோ!

மாணவர் மனதில் முதலில் அமைய வேண்டுவது தாய் நாட்டின் பால் அன்பு. நாட்டுப்பற்று உண்டாக வேண்டுமானால் தாய் மொழிப்பற்று இன்றியமையாது வேண்டற்பாலது.

மகாத்மா காந்தி அடிகள், 'தாய் மொழியின்வழி பிள்ளைகளுக்குக் கல்வி பயில்வித்தல் மிக முக்கியம். தாய் மொழியை அலட்சியம் செய்வது தேசியத் தற்கொலையாகும்,' என்று கூறுகிறார். ஆனால், இந் நாளில் நம் நாட்டிற்குரிய இயற்கைக் கல்வி மாணவரிடையே சிதைக்கப்பட் டிருக்கிறது. ஆங்கிலம் பயில்வதுதான் அறிவுடைமை என்று மாணவர் கருதுகின்றனர். இது அறியாமையாகும். ஆங்கிலம் கற்க லாகாதென்று கூறவில்லை. ஆங்கிலம் உலக மொழியாகப் பரவி வருவதாலும், அரசாங்க பாஷையாக இருப்பதாலும் அதனைப் பயில்வதும் அவசியமேயாகும். ஆனால், ஆங்கிலக் கல்வியில்தான் அறிவுண்டு என்பதையும், தாய் மொழியை அசட்டைசெய்து ஆங்கிலம் கற்பதுதான் கௌரவமும், நாகரிகமுமாகு மென்பதையும் ஏற்றுக்கொள்ள இய-

லாது. தாய்மொழியை விடுத்து பிறமொழி படிப்பது 'மாதா வயிறெரிய மகேஸ்வரபூஜை செய்வதை ஒக்கும்' என்பதை மாணவர் உணரவேண்டும். தாய்மொழியை அலட்சியம்செய்து அன்னிய மொழியையே சிறந்ததாக எண்ணும் எவரையும் உலகம் கௌரவமாகக் கருதாதென்பதைக் கவனிக்க வேண்டும். ஆங்கிலர் முதலிய அன்னிய நாட்டினர் எத்தேயத்தி லிருந்தாலும், பல மொழிகளைப் படித்திருந்தாலும் தங்கள் தாய் மொழியையே பேசும்போதும் எழுதுங்காலும் உபயோகித்து அதனிடத்துத் தனிப்பற்று காட்டுகிறார்களே யன்றி அசட்டை செய்கிறார்களில்லை. மேல் நாட்டாரைச் சாயல் பிடிக்கும் நம்மவர் அவர்பால் காணப்படும் இத்தகைய நற்குணங்களை ஏனோ நோக்குவதில்லை?

நிற்க, நம் தாய் மொழியாகிய தமிழ் மொழி, இதர மொழிகளைப் போன்றதன்று; பெயரளவிலேயே இனிமை என்னும் பெயரையுடையது; முற்றுப்பெற்றது; சிறுவர் முதலியோர்க்கும் உச்சரித்தற்கு எளிதானது; கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய பல மொழிகளுக்கு முதலானது; சுருங்கக்கூறல் என்னும் அழகில் விரிந்த பொருட் பொலிவுடையது; உள்ளத்தின் தோற்றங்களை வெளியிடுவதற்கு நுணுக்கமாகவும், தத்துவ வகையாகவும் அமைந்த சொற்பொலி வுடையது; பிறமொழிச் சொற்களை வேண்டாது நடைபெறும் பெருமையுடையது; ஆரியம், கிரீக் முதலிய மொழிகளினும் கலந்துள்ளது; வடமொழிக்கு முற்பட்டது. மற்றும் இதன் பெருமைகள் எண்ணற்றன. உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைகள் நிறைந்த நூல்கள் தமிழ் மொழியில் பல வுண்டு. திருக்குறள் ஒன்றே இதனை உண்மையென ஒப்பச் செய்யும். திருக்குறளில் அடங்கியுள்ள உண்மைகள் இவ்வுலக மழிந்து வேறு உலகம் ஏற்படினும், அவ்வுலகும் ஏற்றுக் கொள்ளும் சிறப்பினை யுடையவை.

மற்றும் தமிழன்னையின் அணிகளாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐம்பெரும் காப்பியங்களின் அருமைகளை என்னென்றுரைப்பது? தமிழ் மொழியைச் சிறிதுகாலம் வரையில் செவ்வையாகக்கற்று, சுவைத்து, அதன் அமுதினை ஒருதரம் பருகிவிட்டால், பின்னதன் தீஞ்சுவை கண்டு இறுகக் கட்டிக்கொள்வ ரென்பது நிச்சயம். தமிழ் இனிமையில் ஆழ்ந்திருந்த காலஞ்சென்ற தேசீயக்கவி சுப்பிரமணிய பாரதியார் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்' என இசைத்தார். நமது தாய் மொழியிடம் நிறைந்த பற்று வைத்து ஆர்வத்தோடும், ஊக்கத்தோடும் பயிலுவீரெனக் கோருகிறேன்.



நம் தமிழ் மொழி தோன்றிய காலம் இதுவென்று அறுதியிட்டு முடிவுகூற முடியாது. ஆயினும், மிகமிகப் பழமையான தென்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. இவ் வுண்மையை அறிய மேனாட்டுப் பேராசிரியர்கள் கூறியுள்ள ஆராய்ச்சி உரைகளைக் கீழே காணலாம்:

'தமிழ்மொழி பண்டையது; நலம் சிறந்தது; உயர் நிலையில் நிற்பது.'

—டாக்டர். கால்டு வெல்

ஆகிய இப்பேர்ப்பட்ட மாண்புடைய தமிழ்மொழியை மறந்து, வேற்று மொழிகளிலேயே முழுகிக் கிடப்பது மாண்பன்று.

மாணவர்களே! நமது தாய் மொழியாம் தமிழினிடத்துத் தனிப்பற்று கொண்டு ஆழ்ந்த கவனம் செலுத்திப் பயில்வீராக.

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.

## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினாங்கு, தென்னாப்பிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள். ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 10

அரைப்பக்கம் ரூ. 5 கால்பக்கம் ரூ. 3

# சமூக சீர்திருத்தமும் தொழில் தேர்ச்சியும்

(ஈ. வே. சோமசுந்தரம், கோவை)

(முன் இதழ் 264-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கையின் சித்தாந்தத்தைப் பற்றியும், பொதுஜனங்களின் மேன்மையான நடத்தையைப் பற்றியும், புதிய சமூக நோக்கங்களைப் பற்றியும் பிரசாரம் செய்வதோடு சமூக ஸ்தாபனங்களையும் சீர்திருத்த வேண்டுவது அவசியம். ஆண் பெண் என்ற பாகு பாட்டினாலும் ஜாதி மதம் கொள்கை முதலியவற்றினாலும் உண்டாகி யிருக்கும் செயற்கைப் பிரிவினைகளை சமூகத்திலிருந்து விலக்கிவிடவேண்டும். சமூகத்திலிருந்துவரும் ஒவ்வொருவரும் ஆணாயினும், பெண்ணாயினும் தம்தம் பூரண வளர்ச்சிக்கேற்ப அவரவரிடமுள்ள நல்லதும் உயர்ந்ததுமான சக்திகள் பெருகி உரம் அடையும் சந்தர்ப்பங்களைப் பெறும்படி சமூக நிலையை சீர்திருத்தவேண்டும். அதனால் சமூகத்தின் பொதுவான அனுபவமும், முன்னேற்றமும் அதன் ஜனத்தொகையைப் பொருத்ததாகிவிடும். ராஜீய, பொருளாதாரத் துறைகளிலே சம்பந்தப்பட்டு நிற்கும் சமூகப் பிளவுகளான இந்த செயற்கைப் பிரிவினைகளாலே, மிகப் பெரிய இந்திய ஜன சமுதாயத்தின் மிகவும் சொற்பமான தொகையினர் மட்டுந்தான் முன்னணியில் காணப்படுகின்றனர். ஆனால் இத் தேசத்தவரில் பெரும்பான்மையோர் அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் (Depressed and suppressed) மிகவும் பின்தங்கி க்ஷீணித்து நிற்கின்றனர். இத்தகைய சமூக அங்கத்தினர்களின் பூரணமான தேகம், மனம், அறிவு வளர்ச்சிகளுக்கு ஏற்ற சந்தர்ப்பங்கள் அளிக்கப் படாமைதான் இந்திய சமூகத்தின் பிற்போக்கிற்கும், வீழ்ச்சிக்கும், அரசியல் துறையின் அடிமைத்தனத்திற்கும், பொருளாதார நிலைமையின் தாழ்மையான க்ஷீணித்த கதிக்கும் அடிப்படையான காரணங்களில் ஒன்றாகும்.

சமூக சமத்துவத்தை நிலை நாட்டுதற்கு முதன்முதலாகச் செய்ய வேண்டியது, ஜாதி பேதக் கட்டுப்பாட்டை தேசத்தினின்றும் அறவே ஒழித்து விடுவதேயாகும். பிரம்ம சமாஜத்தாரும் ஆரிய சமாஜத்தாரும், ஜாதிக் கட்டுப்பாட்டை எதிர்த்து வெகு பலமாகச் சண்டையிட்ட போதிலும், அப்பெருங் காரியத்திற்கேற்ற அளவு தேசமுழுதும் பரவிய இயக்கம் ஒன்றும் இதுவரை உண்டாகவில்லை. பிராமணரல்லாதாருடையவும், தீண்டாதார் என்று சொல்லப்படுவோருடையவும் எழுச்சியானது இத்துறையில் மிகப்பெரிய நன்மையைத் தந்திருக்கிறது. இந்தக் கட்டுப்பாடுகளால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டத்தவர்களே ஒன்று சேர்ந்து தன் நம்பிக்கையோடும், தன்மதிப்போடும் (Self Respect) ஒற்றுமையோடும் முன்வந்து உழைத்தால்தான் பூரணமான சுதந்தரம் பெறுவதில் ஜயமடையக்கூடும்.

பெண்களை கோஷாக்கள் என்று திரையின்பின் சிறையில் வைப்பதை ஒழிக்க அநேக வருடகாலமாக முயற்சித்தபோதிலும் சமீப



காலம்வரையில் அக்கிளர்ச்சி தேச முழுதும் பரவினதாகவில்லை. இராஜீயக் கிளர்ச்சி, தொழில் துறையில் பரபரப்பு, சமூக சீர்திருத்தங்கள், கல்வி அபிவிருத்திக்கு ஏற்பட்ட சில அனுகூலங்கள், அரசியல் சுதந்தரங்கள் முதலியவற்றாலும், மற்றும் 1921ம் வருடமுதல் கொடுக்கப்பட்ட சில சட்ட நிர்மாண அதிகாரம் முதலியவற்றாலும் இந்திய மாதர்கள் தங்களிடமுள்ள சக்திகளையும், பலத்தையும், பிற்காலத்தில் தாங்கள் செய்யக்கூடிய விஷயங்களையும் உணரலாயினர். ஜனத்தொகையில் சரியாக ஒரு பகுதியினராயுள்ள இவர்கள், இனிமேலாவது பூரண வளர்ச்சியும், முற்போக்கும் அடையும்படிச் செய்து இந்திய சமுதாயத்தின் வாழ்வை பூரணமானதாயும், சந்தோஷகரமானதாயும் செய்ய வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

சமீபத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பாலிய விவாகத் தடை மசோதா இந்திய சமூக முன்னேற்றத்தின் ஒரு பெரிய படியைத் தாண்டியதாகும். பாலிய விவாகத்தைக் கண்டித்து இரண்டு தலைமுறைகளுக்குமுன் பிரம்ம சமாஜம் ஒரு இயக்கத்தை ஆரம்பித்ததன் பலனாக 1872-ம் வருஷத்திய மூன்றாவது (Act III of 1872) சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவும், அதில் வாலிபர், மங்கையர் விவாக வயதுகளை குறைந்த பக்ஷம் 18ம் 14மாக நிர்ணயிக்கவும் ஆயிற்று. ஆனால் இப்போதைய புதிய மசோதா தேசத்தில் உள்ள சகலவகுப்பினருக்கும் பொதுவாயும், யாவரையும் கட்டுப்படுத்துவதாயும் வரையறுக்கப்பட்டிருப்பதால் இது இலட்சியத்திற்கு மிகவும் ஏற்றதாயுள்ளது. சிறுவர் சிறுமியர் விவாக வயது 18ம் 14-மாக இருப்பினும் அது குறைந்த பக்ஷமாகவே இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. இவ்வயது உயர்த்தப்பட்டது, யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் அவர்கள் தத்தம் தேக மனோசக்திகளை பூரணமாக விருத்தி செய்து கொள்வதற்கும், அதனால் சமூகத்துறை அரசியல் துறை, தொழில்துறை முதலிய யாவற்றிலும் ஜன சமுதாயத்தில் தேர்ச்சி பெற்ற அங்கத்தினர்களாவதற்கும் பெருந்துணை புரியும் என்பது திண்ணம்.

பெண் சமூகத்தினர்—குழந்தைப் பருவத்தில் பாலிய விவாகம் என்னும் கட்டிலிருந்து நீங்கி, மங்கைப் பருவத்திலும் மணாட்டியாயிருக்கும் காலத்திலும் கோஷாத் திரையான சிறையிலிருந்து விடுபட்டு, கல்வி அபிவிருத்திக்கும் ஆராய்ச்சிக்கும் சௌகரியங்களும், பொருட்சிக்கனமுறை யுணரும் சந்தர்ப்பங்களும், அரசியல் சுதந்தரங்களும் இந்திய மாதர்கள் பெற்றுவிடும் காலத்தில், அவர்கள் இந்திய சமூக வாழ்க்கையில் மிகச் சக்திபெற்ற வகுப்பார்களாய் விளங்குவர் என்பது வெள்ளிடை மலை. வாழ்க்கையைப்பற்றிய புதியதொரு கொள்கை, இலட்சியம் ஆதியன உடைய சித்தாந்தமும், புத்துயிர் அடைந்த பொதுமக்களின் சீரிய நடைமுறையும், தொழில்முறையில் பரிபூரண நாணயமும், பொதுஜனங்களின் சௌகரியப்படி அவர்களுக்கு அடங்கிய சமூக ஸ்தாபனங்களும் அத்தியாவசியமாக வேண்டும். அவைகளில் வெவ்வேறு ஜாதி, பலதரப்பட்ட கொள்கை, ஆண்பெண் என்ற உயர்வு தாழ்வு வித்தியாசங்கள் எவையும் இன்றி பூரண வளர்ச்சி அபிவிருத்தி

# வைத்தியப் பகுதி

## கண் வியாதிகளும், இலகு வைத்தியமும்

(மிஸஸ் டாக்டர் கண்ணுசாமி, திருவாரூர்)

கண் வியாதிகளைப்பற்றி விவரித்தால் அதிக விரிவாகுமெனினும் இந்தியப் புராதன ஆயுள்வேத, சித்த வைத்திய முறைகளில் கண் வியாதிகளைப்பற்றி எவ்வளவு விரிவாகவும், தெளிவாகவும் கூறப்பெற்றிருக்கிறதென்பதையும், இந்திய வைத்திய சாஸ்திரங்களில் கண்ணோய்களுக்கு எவ்வளவு எளிதான முறைகளுண்டென்பதையும், இம் முறைகளாலின்றும் ஜனங்கள் அவரவர்களாகவே யாதொரு வைத்தியமும் யாதொரு பணச்செலவுமில்லாமல் சிகிச்சை செய்து கொண்டு தனக்குத்தானே குணமடைந்து வருகிறார்களென்பதையும், இவ்வளவு சலபமான பக்குவங்கள் நிறைந்த இந்தியப் புராதன ஆயுள்வேத சித்த வைத்தியங்களுக்கு ஆதரவில்லாதபடியால் பிற வைத்தியங்களின் ஆடம்பரங்களில் மயங்கி எண்ணற்ற பொருள் செலவழிக்கப்பெற்று வருகிறதென்பதையும் விளக்கவேண்டி இது எழுதப்படுகிறது.

கண்ணில் வியாதியுண்டாவதற்குரிய காரணங்கள் பல. அவைகளாவன:—தாய் தந்தையர்க்கு வெட்டைச் சூடென்னும் மேகவியாதியிருப்பதாலும், கடும் வெய்யிலில் திரிவதாலும், பசியோடிருத்தலாலும், மலமூத்திரங்களை அடக்குவதாலும், அதிகமாய் இந்திரிய சேதனம் செய்வதாலும், காலில் பாதரட்சையின்றி சுடுமணலிலும் அளர் பூமியிலும் நடத்தலாலும், மேகவியாதியிருப்பதாலும், எண்ணை முழுகிப் படுத்துறங்குவதாலும், குடலில் அதிகமான மந்தம் பித்தம் சேர்வதாலும், அதிக விசாரம் கொள்வதாலும், அகங்காரம் கோபம் அடைவதாலும், கூர்மையாய்ப் பார்ப்பதாலும், அதிகமாய்க் கவிழ்ந்து படிப்பதாலும், நகம் அதிகமாய் வளரவிடுவதாலும், பகல் நித்திரை செய்வதாலும், உடல் மந்தமாகும்படியான பெருந்திண்டித் தீனியுண்பதாலும், அபக்குவமான தைலம் முழுகுவதாலும், நேத்திர வியாதி வரக்கூடும். பல் துலக்குவதின் விகற்பங்களால் கண்ணோய்கள் பல சம்பவிக்கும். நமக்கு எவ்வகையாலும் பொருத்தமானதென்று கண்டுள்ள

---

களையடைய யாவருக்கும் சுலபமாக இருக்கவேண்டும். இவைகள்தான் கட்டுப்பாடும், முன்னேற்றமும், தேர்ச்சியும் அளிப்பதான ஒரு ஜன சமுதாயத் திட்டத்தின் ஒழுங்கான வாழ்விற்கு அடிப்படையாவன.

ஆதலால் மேற்கூறிய பல அபிப்பிராயங்களையும், அவசியமான மாறுதல்களையும், பல இலட்சியங்களையும், எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, சமூக சீர்திருத்தமும், தொழில் முன்னேற்றமும் நம் நாட்டவர் பெறுவதற்கான வழிகளை அவரவர் நிலைமைக் கேற்ப அனைவரும் அநுசரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:—இக் கட்டுரையின் மூன்றுபாகத்தையும் சேர்த்துப் படித்தால் கோர்வையாக விளங்கும்.



பல் துலக்கும் பதார்த்தங்கள் ஆலம்விழுது, பூலாங்குச்சி, கருவேல், நாயுருவி, கையாந்தகரை ஆகியவைகளே. இவைகளால் முன்னம் இடது பக்கமாய் விளக்கிப் பின் வலதுபக்கம் விளக்கவேண்டும். இப்படி விளக்கி வந்தால் நேத்திரநோய் வராமல் காக்கும். நாள்தோறும் கை விரல்களை இடைவெளியிருக்கும்படி கோத்துக்கொண்டு சந்திரனைச் சற்றுநேரம் பார்த்துவிட்டு, சுத்தமான தண்ணீரால் கண்களைக் கழுவித் துடைத்துவந்தால் கண்ணோய் குணமாகும், நோயுண்டாகாமலும் காக்கும். இரவில் காலில் சந்தணம் பூசித் தேய்ப்பதாலும், ஆமணக்கெண்ணை தேய்ப்பதாலும் எண்ணை முழுகுவதாலும் கண்ணோய் நிவர்த்தியாகும்.

எண்ணை தேய்த்துக் கொள்வோர் இக்காலத்தில் உடனே முழுகிவிடுகிறார்கள். அது பயனுடையதன்று. எண்ணைதேய்த்து ஒரு கடிகையாவது சிரசிலும் தேகத்திலும் ஊறிய பின் தலைமுழுகுவது நல்லது. தற்காலத்தில் இதை அநுசரிப்பவர்கள் ஆயிரத்திற் கொருவர்கூட இலரென்பது நிச்சயம். எண்ணை முழுகுவதற்குரிய காலம் காலை நேரம் மட்டுமேயாம். எண்ணை முழுக்குச் சரீரத்துக்குப் பிரதானமாகிய 'கபோலம்-கண்-செவி மூக்கு-தொண்டை முதலிய உருப்புகளின் போஷணார்த்த மாகையால் மிக மிக சாக்ரதையாயும் கவனமாயும் நடந்துகொள்ள வேண்டும்.

---

### கண்ணோய்களின் நிதானம்

கண்ணின்மேல் இமை கனத்துப் புண்போல் வலித்து நீர்வடிதலும் பீளை சார்தலுமிருந்தால் அக்கி நோயாம்

செவி, கண், மூக்கு தினவுடன் கண் அடிக்கடி திறந்துமூடும்; கண் கனக்கும்; நடுவிழியில் குத்தலுண்டாகும்; தூக்கம்பிடியாது. இது அகாகாய நோயாம்.

கண் தடித்து, கண் மூட முடியாத வலி எரிவுண்டாகும். எதையாவது பார்த்தால் புகைச்சலா யிருக்கும். இது உக்கிர நோயாம்

கண் சிவந்து பீளை சாரும்; ஜலம் வடியும்; துரப்பணம் துளைப்பது போல குத்தல் வலியுண்டாகும். இதை உடைந்தெழுகாச மென்பதாம்.

வாய் கண் மூக்கு முதலியதை ஒருபுறம் இழுத்து, கண் சிவந்து எரிச்சலெடுக்கும். இதைச் சாய்க்கண் குருடென்பதாம்.

கண் கூசல், குத்தலுடன் நீர்வடிந்து புருவம் வீங்கிச் சிவத்தலும் பார்வை புகைபோல் மங்குதலு முண்டாம். இதை இமை தடிப்பென்பதாம்.

கண் சிவந்துருகி தினவுடன் இருந்தால் கண் தினவு நோயாம்.

நடுவிழியில் குத்தலுண்டாகி சுயநிற மாறி வெளிர்தோணும். இதை துய்யக் குருடென்பதாம்.

கண் வீங்கியும் சிவந்தும் சிலசமயம் வெளுத்தும் குத்தல் வலியுண்டாகி சதை வளர்வதை சுக்கிரநோ யென்னலாம்

கண்கள் நொந்து சிறுத்து கருவிழி கலங்கி மாலை நேரத்தில் புகைச்சலதிகமாயும் வெய்யிலில் உருத்தலும் எரிச்சலுமாயுமிருந்தால் மாலைக்காச மென்னலாம்.

---

காஞ்சீபுரம் காலஞ்சென்ற

# வித்வான். முத்துசாமி முதலியார்

காலஞ் சென்ற தமிழ்ப் பண்டிதர் முத்துசாமி முதலியார் அவர்கள் காஞ்சீபுரம், பிள்ளையார் பாளையத்தில் செங்குந்த மரபினுக்கோர் விளக்கம்போல் சித்திரபானுவூ ஆனிமீ (ஜூலை 1882) வேலாயுத முதலியாரின் தவப்புதல்வராகத் தோன்றினர். இவரது தாயாரின் பெயர் உண்ணாமுலை யம்மாள். குமாரசாமி முதலியார், ஆறுமுக முதலியார், அருணகிரி முதலியார், ஏகாம்பர முதலியார் ஆகிய நால்வர் இவரது உடன்பிறந்தோ ராவர். முத்துசாமி முதலியார் அவர்கள் இளமையில் பல அரிய தமிழிலக்கியங்களில் பயின்றதன்றிக் காஞ்சீபுரம் மிஷன் ஸ்கூல் (U F. C. M. High School) பண்டிதரா யிருந்த கனகசபை நாயகரிடத்தில் தமிழிலக்கணமும் கற்றார். 1918ம் ஆண்டு செங்கற்பட்டு செண்ட் கொலம்பஸ் ஹைஸ்கூலில் (St. Columbas High School) தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பெற்று மாணவர்களாலும், அதிகாரிகளாலும் நன்கு மதிக்கப்பெற்று வந்தார்.

முதலியார் அவர்களிடத்தில் தமிழிலக்கண இலக்கியங்கள் கற்றுத் தேர்ச்சி பெற்றவர்கள் பலராவர். இவரிடம் இலக்கணம் படித்தவர்களுள் காஞ்சீபுரம் ஸ்ரீலஸ்ரீ சிவசுவாமி தேசிகர் அவர்களும், காஞ்சீபுரம் திரு. K. வஜ்ஜிரவேலு முதலியார் பி.ஏ.,எல்.டி., அவர்களும் குறிப்பிடத் தக்கவர்க ளாவர். பல நூற்றாண்டுகளாக மாணவர்கள்—ஆறுமுக நாவலர் உட்பட—தமிழ்நாட்டின் பல பாகங்களிலு மிருந்து வந்து தமிழ்க் கலைகள் பயில்வதற் கிடமாயிருந்த காஞ்சி—பிள்ளையார் பாளையத்தில் தற்போது தமிழிலக்கணம் விருத்தியானதற்கு நமது முத்துசாமி முதலியார் அவர்கள் உழைப்பே முக்கிய காரணமாகும்.

முதலியார் அவர்கள் தமது 52வது வயது முடிவெய்து முன்னரே (51வ. 7மீ) சென்ற தைமாதம் 21உ (3-2-34) இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறைவன் இணையடி மலர்களை எய்தினர். இவரது அகாலமுடிவைக் குறித்து வருந்துவோர் அளவிறந்தவ ராவர்.

முதலியார் அவர்கள் சாதாரண தமிழ்ப் பண்டிதர்களைப்போலல்லாது மாணவர்களால் மிகவும் நன்கு மதிக்கப் பெற்றவரா யிருந்ததன்றி ஒவ்வொரு விஷயத்தையும் ஆழ்ந்து நோக்கி ஆராய்ந்து உண்மையினை யறியும் ஆற்றலுடையவராயு மிருந்தார். "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் உயரியதோர் கொள்கை யுடையவ ராகையால் மூடநம்பிக்கை என்பது அவரிடம் கிடையாது. இயற்கையாகவே இவர் புன்னகையும், இன்சொல்லும், மேலான எண்ணமும் வாய்க்கப் பெற்றவர். இத்தகைய பெரியார் நம் குலத்திற்கோர் விளக்கமாக விளங்கினர் என்பது மிகையாகாது. அன்னார் பிரிவு பொதுவாகத் தமிழகத்திற்கும் சிறப்பாகச் செங்குந்தர்களுக்கும் ஒரு பெரிய நஷ்டமேயாகும்.

---

# அதிசயம் அற்புதம் ஆச்சரியம்

## 18 மைல் நீளமுள்ள தொங்கு பாலம்

நேபாளத்தில் மத்த தீர்த்தத்திற்கும், தீன் சிங்கிற்கு மிடையே 18 மைல் நீளமுள்ள மிகப்பெரிய தொங்கு பாலமொன்று அமைக்கப்படுகிறது. அங்கு பெரிய மலைகளுக் கிடையே யுள்ள பள்ளத் தாக்குகளை தற்போது கடக்க 3 நாளாகிறது. தொங்கு பால வேலை முடிந்தவுடன் நேராகச் செல்ல முடியுமாதலின் இந்த இடத்தை மூன்றே மணி நேரத்தில் கடந்து செல்ல முடியுமாம்.

## ஆஞ்சநேயர் அவதாரம்

வேலூரில் உள்ள கவர்ன்மெண்ட் பெண்ட்லண்டு ஆஸ்பத்திரியில் 20-4-34ல் அலமேலு என்றவள் பெற்ற குழந்தையின் முகம் ஆஞ்சநேயர் முகம் போலவும், தலையில் கிரீடம்போல் முடியுடனும் இருந்ததுடன் கைகால்கள் எல்லாம் ஆஞ்சநேயருக்கு இருப்பதுபோல் காணப்பட்டனவாம். கண்கள் பெரிதாகவும், செய்கைகள் குரங்கு செய்கைகளாகவும் இருந்ததாம்.

## ஜப்பான் பக்காசூரன்

நடுத்தர வயதுள்ள ஒரு ஜப்பானியன் டோக்கியோ ஹோட்டலொன்றில் புகுந்து 7 புட்டி பீர், 16 புட்டி மது, 3 டம்ளர் சோடா, 9 தட்டு வேகவைத்த மாமிசம், 4 தட்டு பச்சை மாமிசம், 3 தட்டு ஊறுகாய், வேகவைத்த மொச்சை, 17முட்டைகள், தயிர் முதலியவைகளைத் தின்றுவிட்டு கடைசியில் ஓட்டலுக்குச் சொந்தக்காரனிடம் சென்று தன்னிடம் பணம் இல்லை எனக்கூறி ஏப்பம் விட்டானாம்.

## பாங்கிகளில் குரங்குகள் நியமனம்

சையாம் தேசத்தில் பாங்கி கஜானாக்களுக்கு உதவியாகக் குரங்குகளை நியமிக்கின்றனர். நாணயங்கள் வரவு வந்ததும் பாங்கி குமஸ்தா அவற்றைக் குரங்கினிடம் கொடுத்தால் அவை உண்மை வெள்ளி நாணயங்களா, அல்லது பொய் நாணயங்களா எனக் கண்டு பிடித்துச் சொல்லுகின்றனவாம்.

## சுண்டெலியைக் கண்டு யானை அஞ்சுகிறது

லண்டன் மிருகக் காட்சிச் சாலையில் ஒரு சுண்டெலியை ஒரு யானைமுன் விட்டதும் யானை கட்டுக்கடங்காமல் துள்ளியது. எல்லா யானைகளையும் பரீட்சை செய்ததில் ஒவ்வொரு யானையும் சுண்டெலியைக் கண்டதும் வெருண்டு துள்ளியதாம். நன்கு ஆராய்ந்தபின் சுண்டெலிகள் துதிக்கையினுள் ஏறிவிடுமென்று யானைகள் பயப்படுவதாகக் காரணம் கூறப்படுகிறது. மிகப்பெரிய யானைகளை மிகச்சிறிய சுண்டெலிகள் வெருட்டுவதும் உலக விசித்திரங்களில் ஒன்றே.

## படிக்கும் யந்திரம்

அச்சடித்த புத்தகங்களை சப்தம் போட்டு உரக்கப் படிக்கும் யந்திரம் ஒன்றை லீப்ஷிக் பண்டிதர் ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார்.

## அரிசியிலிருந்து மோட்டார் எண்ணை

ஜப்பானில் அரிசி உற்பத்தியும் அதிகரிக்கிறது. எனவே அரிசியை உணவு தவிர வேறு வகையில் உபயோகப்படுத்த ஆராய்ச்சி செய்து அதிலிருந்து மோட்டார்களுக்கு உபயோகப் படுத்தும் ஒரு வித எண்ணெயை தற்போது எடுத்து வருகிறார்கள்.

## நாகரீகமா? அநாகரீகமா?

நாகரீகம் மிகுந்த நாடெனக் கூறும் அமெரிக்காவில் ஒரு சினிமாக் கம்பெனியில் பல நிர்வாணப் படங்கள் காட்டியதோடு 5 நிர்வாணப் பெண்கள் நடனமாடினராம். ஏராளமான ஜனங்கள் வேடிக்கை பார்த்தனராம். இதை கம்பெனியார் எவ்வளவோ ரகசியமாக நடத்தியும் போலீசாருக்கு எப்படியோ தகவல் கிடைத்துவிட்டதால் போலீசார் சென்று நிர்வாண நடனப் பெண்களையும், வேடிக்கை பார்த்தவர்களில் முக்கியமான 700 பேர்களையும் கைதி செய்துள்ளனராம். என்னே! அநாகரீகம்.

## விமான சிகிச்சை

அமெரிக்காவில் ஸ்ரீமதி வீராஹாப்கின்ஸ் என்பவருக்கு திடீரென ஏற்பட்ட வலிப்பால் கண் குருடாய் விட்டது. காது செவிடு பட்டது. பல டாக்டர்கள் அவளைக் குணப்படுத்த முடியாதெனக் கைவிட்டனர். கடைசியில் ஒரு டாக்டர் தான் குணப்படுத்துவதாகக் கூறி ஒரு விமானத்தில் அவளை ஏற்றிக்கொண்டு சிறிது உயரம் சென்று திடீரென விமானத்தைத் தலைகீழாய்த் திருப்பவே பெண் அலறிக் கத்தினளாம். உடனே அவள் கண்களும் திறந்தது. காதும் நன்றாகக் கேட்டதாம்.

## 116 வருஷத்தில் கடனைச் செலுத்தத் தீர்ப்பு

இங்கிலாந்தில் லாம்பெத் என்னுமிடத்தில் ஹைகோர்ட் நீதிபதி பிரதிவாதியின் விருப்பப்படி 280 பவுன் கடனை மாதம் 4 ஷில்லிங் வீதம் கொடுத்து வரலாமெனத் தீர்ப்பளித்துள்ளார். இந்தப்படி கடன் கொடுத்துவந்தால் கடன் தீர்வதற்கு 116 வருடங்கள் பிடிக்கிறது. இதுவரை உயிருடன் வாழ வாதிப் பிரதிவாதிகள் வரம் வாங்கி வந்தனரோ?

## உடையாத கண்ணாடி

அமெரிக்காவில் ஒருவித கண்ணாடி கண்டு பிடித்திருக்கிறார்கள். துப்பாக்கியால் சுட்டாலும் குண்டு கண்ணாடியை ஊடுருவிப் பாய்வதில்லை. கண்ணாடியும் உடையாது. குண்டுதான் தூளாகி விழுகிறதாம்.

# கதம்ப விநியோகம்

உலக முழுவதும் 5 கோடி 90 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் மட்டும் 3 கோடி 30 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறதாம். சென்னை மாகாணத்தில் 50 லட்சம் டன் உற்பத்தியாகிறதாம்.

---

கோயம்புத்தூரில் மட்டில் வெவ்வேறு வகையான ஆயிரம் வகை அரிசி உற்பத்தி செய்யப்படுகிறதாம்.

---

நவக்கிரகங்களில் மிகப்பெரிதான வியாழனின் குறுக்களவு 86,500 மைல்.

---

வானம்பாடி, கழுகு, காக்கை ஆகிய பறவைகள் வானத்தில் 6000 அடி உயரம் பறந்து செல்லக் கூடுமாம்.

---

சென்ற வருஷத்தில் மட்டும் 1,09,33,203 பைபில்கள் செலவாகியிருக்கின்றனவாம்.

---

பைபில் இதுவரை 678 பாஷைகளில் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது.

---

உலகத்தில் மொத்தம் 6,72,486 சாரணப் பெண்கள் இருக்கின்றனர்.

---

வருமானம் மாத்திரம் கிடைப்பதாயின் ஐரோப்பியர் எங்கும் செல்லத் தயங்கமாட்டார்கள். சாலமன் தீவு ஒன்றில் ஒரு வெள்ளையர் தென்னை மரங்களை உண்டாக்கி வருகிறார். அவருக்குத் தன் சொந்த வீட்டிலிருந்து கடிதம் எழுதினால் 10 மாதங்கள் கழிந்த பின்பே அவருக்குக் கிடைக்குமாம்.

---

மூளை அதிகமாக வேலை செய்வதால் சீக்கிரத்தில் மரணம் ஏற்படும் என்பது பொதுவான அபிப்பிராயம். ஆனால் அதிக மூளை வேலையுள்ளவர்கள் சீக்கிரம் இறப்பதில்லை என்பதற்குத் தற்கால முள்ள பெரியார் பலர் சரிதம் சான்றுகின்றது. தற்போது உயிருடன் உள்ள மூளை வேலை அதிகமுடைய பெர்னார்டு ஷாவுக்கு 78 வயது. ஸர். ஆலிவர் லாட்ஜுக்கு 82 ஹென்ரி போர்டுக்கு 71, ஜான்ராக் பெல்லருக்கு 95.

இளமை மரணம் அதிகமுடைய இந்தியாவிலும் பண்டித மாளவியா, ரவீந்திரநாத் தாகூர், ஆச்சார்யா ரே, ஸர். ஜே. ஸி. போஸ், மகாத்மா காந்தி, ஸி. விஜயராகவாச்சாரியார் முதலிய மூளை வேலை மிகுந்த வயது நிறைந்த அறிஞர்கள் பலர் இருக்கிறார்கள்.

---

காலஞ் சென்ற சங்கீத சாகரம்,

## ஸ்ரீ நாயனப் பிள்ளையின் வாழ்க்கைக் குறிப்பு

நாயனப் பிள்ளையின் இயற்பெயர் சுப்பிரமணியம் பிள்ளை என்பது. மிகச் சிறு வயதிலேயே சங்கீதத்தின் எல்லையை ஒருவாறு எட்டிப் பார்த்தவர். அக்காலத்தில் இவரது சங்கீதத் திறமை, பக்க வாத்தியக்காரர்களைத் திணற வைக்கும் புதிய சுரங்களைப்பாடுந் தன்மை, இளம் வயது எல்லாம் சேர்ந்து சங்கீத வித்வான்களுக்கே இவர்மீது ஓர் பொறாமையை எழுப்பி விட்டது. அதனால், இவர் கச்சேரிகளுக்குப் பக்கவாத்தியக்காரர்களில் அநேகர் வாசிக்க மறுத்து விடுவதுண்டு. தோடி பைரவி போன்ற சாதாரண ராகங்கள் பாடுவதை விட அபூர்வ ராகங்களைப் பாடுவதில்தான் நாயனப் பிள்ளைக்கு விருப்பம் அதிகம். இந்த அபூர்வ ராகங்களில் மயங்கியே பழனி முத்தையாப் பிள்ளை, கோவிந்தசாமிப் பிள்ளை, தட்சிணாமூர்த்திப் பிள்ளை ஆகிய சிறந்த பக்கவாத்தியக்காரர்கள் நாயனப் பிள்ளையின் கச்சேரிக்குத் தாமே வலிய சென்று பக்கவாத்தியம் வாசிப்பார்கள். எந்த வித்வானுக்குப் பக்க வாத்தியம் வாசித்தாலும் மிகுந்த அலட்சியத்துடன் வாசிக்கும் தட்சிணாமூர்த்திப் பிள்ளைக்கு ஸ்ரீ நாயனப் பிள்ளையின் கச்சேரி என்றால் கொஞ்சம் பயந்தான். அலட்சிய புத்தி அடியோடு பறந்துவிடும்; மிக நிதானமாகவும், அதிக சிரமத்துடனும் அவர் வாசிப்பதைப் பார்த்து சபையோர்களே ஆச்சரியப்படுவர்.

ஸ்ரீ நாயனப் பிள்ளை சங்கீதத்திற்கே ஓர் அதாரிடி. அவர் சங்கீத உணர்ச்சியே அற்றுக்கிடந்த —தமது சொந்த ஊராகிய காஞ்சீபுரத்தில் அவ்வுணர்ச்சியை மிகுதியும் பரப்பினர். பல ஆண்டுகளாக அவரால் நடத்தப்பட்டுவரும் தியாகராஜர் உற்சவத்தில், ஆரம்ப வருடங்களில், அவருக்கு வேண்டியவர்களாக இருந்தவர்கள் மட்டும் அவர் தாட்சணியத்திற்காகச் செல்வதுண்டு. ஆனால், சமீபத்தில் நடந்த ஏழெட்டு ஆண்டு உற்சவங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள், பல மைல்களுக் கப்புறமிருந்தும் திரண்டு வருவது வழக்கமென்றால் எவ்வளவு சங்கீத ஞானம் இந்த சில ஆண்டுகளுக்குள் பரவி யிருக்கிறதென யூகித்துப் பார்க்க வேண்டியதே.

ஸ்ரீ நாயனப் பிள்ளையின் பிரிவு சங்கீத உலகத்திற்கோர் பெரிய நஷ்டம் என்பதில் ஐயமில்லை. 1877-ம் ஆண்டு தோன்றிய அவர் 1934-ம் ஆண்டு மேமீ 3உ தமது 56-ம் வயதில் காஞ்சீபுரத்தில் இவ்வுலக வாழ்க்கை நீத்தார்.

—

# வர்த்தமானம்

## தமிழ் நாட்டு நடப்பு

### காஞ்சீபுரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை

காஞ்சீபுரம் விளக்கொளிப் பெருமாள் தோப்புத் தெருவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் பக்தஜன சபையினுதாவில் ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை 18-6-34 திங்கட்கிழமை நடைபெறுமென்றும், அன்று காலை பாராயண வீதிவல உற்சவமும் பகல் மகேஸ்வர பூஜையும், இரவு வித்வ சிரோமணிகளால் உபந்யாசங்களும் நடைபெறுமென காரியதரிசிகளாகிய தி. மு. அருணசல முதலியார், ற. சிவந்தபாத முதலியார், அ. செ. கச்சபாலய முதலியார் அறிவித்திருர்கள்.

### சைதாப்பேட்டையில் ஸ்ரீ அருணகிரியார் மஹோற்சவம்

சைதாப்பேட்டை செங்குந்த கோட்டம் என வழங்கும் முருகப் பெருமான் ஆலயத்தில் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் திருநட்சத்திர மஹோற்சவம் 26-6-34 செவ்வாய்க்கிழமை நடைபெறும். அன்று காலை சகல மூர்த்திகட்கும் அபிஷேகமும், இரவு மகேஸ்வரபூஜையும், ஸ்ரீ அருணகிரிநாதர் திருவிழாக் காட்சியும் நடைபெறும்.

அதே தினத்தில் மேற்படி ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ சண்முக சுப்பிரமண்ய திருப்புகழ் சபையின் 16-வது வருட விழா மிக விமரிசையாக நடைபெறும்.

### மதுரையில் புத்தக, வாசகசாலைத் திறப்பு

மதுரை தல்லா குளத்தில் செங்குந்த சமூக முன்னேற்றத்திற்காக மிக உழைத்த மாணவர்கள் S. M. அங்குசாமி, C. ராமலிங்கம் இவர்களின் ஞாபகார்த்தமாக 'அங்குராம்' புத்தக வாசகசாலை யொன்று 1-6-34ந்தேதி மதுரை ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ. R. M. சேவுர். பி. ஏ., அவர்கள் திறந்துவைத்தார்கள். அதுசமயம் ஸ்ரீ ஆதிமுத்து பி. ஏ. அவர்கள் புத்தக வாசகசாலைகளின் அவசியத்தைப்பற்றிப் பேசினரென செங்குந்தத் தொழிலாளர் அபிவிருத்திக் கழகக் காரியதரிசி ஸ்ரீ S. M. T. ராஜன் அறிவிக்கிறார்.

### திருச்செந்தூரில் மின்சார விளக்கு

திருச்செந்தூர் கோவிலிலும் அதை யடுத்துள்ள பல விடங்களிலும் மின்சார விளக்குகள் அமைக்க வேலை நடந்துவருகிறது.

### சென்னையில் புதிய கவர்னர்

சென்னை கவர்னரான சர். ஸ்டான்லி பதவியிலிருந்து விலகியதும்

அந்த ஸ்தானத்திற்கு பார்லிமெண்டு அங்கத்தினரான லார்டு எர்ஸ்கைன் நியமிக்கப் பெற்றிருப்பதை மன்னர் அங்கீகாரம் செய்துவிட்டார்.

### ஜமீன்தார் மரணம்

எட்டயாபுரம் ஜமீன்தாரரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீ ஜெயவீர ராமகுமார வெங்கடேஸ்வர எட்டப்ப நாய்க்க அய்யன் 28-5-34ல் சென்னையில் மரணமடைந்தார்.

### சேலத்தில் நெசவு மில் ஸ்தாபனம்

டாக்டர் பி. வரதராஜலு நாயுடு முயற்சியால் சேலத்தில் ஒரு நெசவு மில் 10 லட்சம் ரூபா மூலதனத்தில் ஸ்தாபிக்க ஏற்பாடு நடந்துவருகிறது.

### சென்னை ஹைகோர்ட்டு புதிய நீதிபதிகள்

ஹைகோர்ட் நீதிபதிகள் ஸ்ரீ ரெயிலியும், ராவ்பகதூர். டாக்டர் கிருஷ்ண பாண்டலேயும் தமது பதவிகளி லிருந்து விலகுவதால் அவர்களுக்குப் பதிலாக ஸ்ரீ. வி. பாண்டுரங்க ராவ் அவர்களும், ஸ்ரீ வீர். மாக்கெட் அவர்களும் நியமிக்கப்பட்டிருப்பதை மன்னர் அங்கீகரித்துள்ளார்.

### யானையின் அட்டகாசம்

பாலக்காட்டில், சாத்தாபுரம் என்ற அக்கிரகாரத்தில் நடந்த உற்சவமொன்றில் கொண்டுவரப்பட்ட யானைகளில் ஒன்று மதங்கொண்டு தன் பாகனையும் மற்றொருவரையுங் கொன்றுவிட்டதோடு சில வீடுகளையும் தந்தத்தால் இடித்து நாசம் செய்துவிட்டது.

### திருநெல்வேலி முனிசிபாலிடிக்கு நோட்டீஸ்

திருநெல்வேலி முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ சி. கிருஷ்ணசுவாமி அய்யங்கார் வேலையில் சேர்ந்த ஒரு மாத காலத்திற்குள் அவரை விலக்க வேண்டுமென்று முனிசிபல் சபையார் தீர்மானித்திருப்பது சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதாக இருப்பதால் திருநெல்வேலி முனிசிபல் சபையை இரண்டு வருஷங்களுக்கு ஏன் கலைத்துவிடக் கூடாதென்பதற்குக் காரணம் தெரிவிக்குமாறு சேர்மனுக்கு சென்னை சர்க்கார் உத்தரவு ஒன்று அனுப்பியிருக்கிறார்.

### காஞ்சீபுரம் உற்சவத்தில் விபத்து

காஞ்சீபுரம் ரதோற்சவத்தில் தேர் ராஜ வீதிக்கு வந்த பின்னர் ஒரு கூலி தலையில் தூக்கிச் சென்ற வாண மருந்து அகஸ்மாத்தாய் தீப்பிடித்துக்கொண்டதால் அநேகருக்குக் காயம் ஏற்பட்டது. ஒரு பெண்ணுக்கும் குழந்தைக்கும் அதிக காயம் ஏற்பட்டுள்ளது.

### திருச்செந்தூரில் புதிய ஹைஸ்கூல்

திருச்செந்தூரில் ஒரு ஹைஸ்கூல் ஆரம்பிப்பதென திருநெல்வேலி ஜில்லாபோர்டார் முடிவு செய்துள்ளனர்.



### சென்னை சர்க்கார் ஆலோசனை

சேர்மன் பதவியிலிருந்து சர்க்காரால் நீக்கப்பட்டவர்கள் மீண்டும் சேர்மன் பதவிக்கு அபேட்சகராக நிற்பதைத் தடுக்க சட்டம் செய்ய சென்னை சர்க்கார் ஆலோசித்து வருகிறார்கள்.

### திருச்சி முனிசிபல் சபைக்கு நோட்டீஸ்

திருச்சி முனிசிபல் சேர்மனை சென்னை சர்க்கார் சேர்மன் பதவியிலிருந்து விலக்கிய பின்பு மீண்டும் அவரையே சேர்மனாகத் தேர்ந்தெடுத்திருப்பதால் அந்த முனிசிபல் சபையை ஏன் கலைத்துவிடக் கூடாதெனக் காரணம் காட்டும்படி சென்னை சர்க்கார் நோட்டீஸ் பிறப்பித்துள்ளனர்.

### உதகமண்டலம் சேர்மன் நீக்கம்

உதகமண்டலம் சேர்மனை சென்னை சர்க்கார் சேர்மன் பதவியிலிருந்து விலக்கியதாக ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

### டாக்டர் நாயுடு ஓர் அபேட்சகர்

வரப்போகும் இந்தியா சட்டசபைத் தேர்தலில் சேலம், கோயமுத்தூர், வடாற்காடு ஜில்லாக்களின் தொகுதிக்குத் தாம் ஒரு அபேட்சகராக நிற்கப்போவதாக டாக்டர் பி. வரதராஜலு நாயுடு அறிவித்திருக்கிறார்.

---

## இந்தியச் செய்திகள்

### பாம்பு ஆட்டுக் குட்டியை விழுங்கியது

செகந்தராபாத் பீகம்பேட்டை ரஸ்தாவில் ஒரு பெரிய பாம்பு இரண்டு வருட ஆட்டுக்குட்டி யொன்றை முக்கால் பாகத்துக்குமேல் விழுங்கிவிட்டது. ஆட்டுக்குட்டியின் தலைமட்டும் விழுங்கப்படவில்லை. வழிப்போக்கர்கள் பாம்பை அடிக்கவே ஆட்டுக்குட்டியை உயிருடன் வெளியில் கக்கிவிட்டதாம்.

### மோட்டார் ஓட்டிக்கு அபராதம்

ஒரு குஷ்ட ரோகியை மோட்டாரில் ஏற்றிச் சென்றதற்காக முன்சர்சிங் என்ற மோட்டார் ஓட்டிக்கு கல்கத்தா மாஜிஸ்டிரேட் 10 ரூபாய் அபராதம் விதித்தார்.

### ஒரே காஷ்டத்தில் மனைவியும் புருடனும்

வங்காள போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வியாதியால் கஷ்டப்பட்டு வைத்தியர்களும் கைவிட்டதைக் கேட்ட அவரது மனைவி தன்னையும் தனது கணவனோடு ஒன்றாக தகனம் செய்யும்படிக் கூறிவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் தன் உடம்பில் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு நெருப்பு வைத்துக்கொண்டு மாண்டுபோனாள். சிறிது நேரத்தில் புருடனும் இறந்துவிட்டான். இருவரையும் ஒன்றாகவே தகனம் செய்தனர்.

### பம்பாயில் உலக ரேடியோ

30-5-34ந் தேதி பம்பாயில் உலகம் பூராவும் கேட்கும் ரேடியோ ஸ்தாபனம் ஒன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதனால் இந்தியா பூராவுக்கும் ஒரு பொது ரேடியோ ஏற்படுவது சுலபமென நம்பப்படுகிறது.

### அதிக உஷ்ணத்தால் விபத்து

மே மாதம் 25ந் தேதி முதல் 31ந் தேதி வரை இந்தியாவின் பல இடங்களில் 100 டிகிரிக்குமேல் 120 வரையில் உஷ்ணம் இருந்தது. இந்த உஷ்ணம் தாங்க முடியாமல் அநேக ஊர்களில் பலர் இறந்துவிட்டார்கள். மசூலிப் பட்டணத்தில் மட்டும் நூற்றுக்கணக்கான கால் நடைகள் பாதைகளில் செத்துக் கிடந்தன.

### மீண்டும் பூகம்பம்

முசாபர்பூரில் 2-6-34ந் தேதி உதயத்தில் மீண்டும் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது. அதனால் பல வீடுகள் சேதமடைந்தன. ஆனால் உயிர்ச் சேதம் எதுவுமில்லை.

### காங்கிரஸ் அபேட்சகர்கள்

காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டார் வரப்போகும் இந்தியா சட்ட சபைத் தேர்தலில் 81 அபேட்சகர்களை நிறுத்துவார்களெனத் தெரிகிறது. இதில் 67 பேர்கள் வெற்றிபெறக் கூடுமென எதிர்பார்க்கின்றனர்.

### சர்க்கார் கடன் பத்திரங்கள்

இந்திய சர்க்கார் 32 கோடி ரூபாய்க்கு 1947–50-ம் வருஷ கடன் பத்திரங்கள் வெளியிட்டுள்ளார்கள். 100 ரூபாய் கடன் பத்திரத்தின் இவ் வருஷ விலை ரூபா 98-8-0 இதற்கு சர்க்கார் 6 மாதத்திற்கொரு முறை 100க்கு 3½ வீதம் வட்டியைக் கொடுத்துவிடுவார்கள்.

### வைசராய் பூகம்ப நிதி

வைசராயின் பூகம்ப நிதிக்கு இதுவரை 53,82,608-5-9 ரூபாயும் 1 பவுனும் வசூலாகி இருக்கிறது,

---

## வெளியுலகப் போக்கு

### ஜப்பானில் இந்திய ஆசிரியர்

பஞ்சாபிலுள்ள பிரபல வியாபாரியான மதன்லால் ஜெயின், ஜப்பானிலுள்ள அன்னிய பாஷைக் கல்லூரியில் பெர்ஷியன் இந்துஸ்தானி புரொபஸராக நியமிக்கப் பெற்றுள்ளார். ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு வரும் வியாபாரக் கம்பெனிகளின் பிரதிநிதிகளும் மற்றவர்களும் சுலபமாகத் தங்கள் தொழிலை இந்தியாவில் நடத்த உதவியாக இருக்கவே பெர்ஷியன் முதலிய பாஷைகள் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### இத்தாலி சீர்திருத்தம்

ஜுலை மாத முதல் தேதியிலிருந்து இதாலியில் புதிய சீர்திருத்தம் அமுலுக்கு வரும். அதன்படி 22 கார்பொரேஷன்கள் நியமிக்கப்படும். இந்த கார்பொரேஷன்களுக்கு ஒரு சட்டசபைக்குள்ள அதிகாரம் இருக்



கும். இப்போதுள்ள பார்லிமெண்டு முறை ஒழிக்கப்படும். இந்த கார்பொரேஷன்கள் யாவும் முசோலினியின் அதிகாரத்திலிருக்கும். கார்பொரேஷன் தீர்மானங்களை அமுலுக்குக்கொண்டு வருவதோ அல்லது நிராகரிப்பதோ முசோலினியின் கையிலே இருப்பதால் அவருக்கு முழு அதிகாரம் ஜுலையிலிருந்து ஏற்படுகிறது.

### ஜப்பான் மந்திரிமீது நடவடிக்கை

1933 ஜுன் மாதத்தில் ஜப்பான்பட்டுக் கம்பெனியின் விலை 40 லிருந்து 150க்கு உயர்ந்தபோது மிகவும் குறைந்தவிலைக்கு பங்கு வாங்கிக் கொடுக்க உதவி பொக்கிஷ மந்திரி குரோடா பேரம் பேசியதாக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### ஸ்ரீராமன் பிள்ளை மரணம்

ஜெர்மனியில் இந்திய வர்த்தக சங்கப் பிரதிநிதியாக இருந்துவந்த ஸ்ரீ. ச. ராமன் பிள்ளை கடுமையான நோயினால் கஷ்டப்பட்டு 29-5-34ல் ஜெர்மனியில் இறந்துவிட்டார்.

### யானையின் சாட்சியம்

ஒரு பெண் யானையின் சொந்தக்காரர் வாதியா, பிரதிவாதியா என்று சிலோன் குருநேகல ஜில்லா கோர்ட்டில் கண்டு பிடிக்க முடியவில்லை. அச் சமயம் வாதி, யானை தன்னுடையதென்றும் அதன் பெயர் லட்சுமி என்றும் சொன்னார். பிரதிவாதி, அதன் பெயர் சீதேவி என்றும் அது தன்னுடையதென்றும் வாதித்தார். யானை கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. வாதி, லட்சுமி என்று கூப்பிட்டபோது யானை சும்மா இருந்தது. பிரதிவாதி, சீதேவி என்றழைத்ததும் யானையானது பிரதிவாதியை நோக்கி ஆவலுடன் ஓடிப்போய் தன் துதிக்கையால் அவனைக் கட்டித் தழுவிக் கொள்ளவே யானை பிரதிவாதிக் குரியதெனப்பட்டதாம்.

### அமெரிக்க அசகாய சூரன்

அமெரிக்காவில் ஜான் டிலிஞ்சர் என்ற கொள்ளைக்காரனை எத்தனை முறை ஜெயிலில் வைத்தாலும் தப்பித்துக்கொள்கிறான். அவன் 'என்னை அடைக்க இங்கு ஜெயில் கிடையாது' எனக் கூறித் திரிகிறான். எத்தனையோ முறை அதிகாரிகளோடு தானும் ஒரு அதிகாரியாய் நின்று புகைப்படம் பிடித்துக்கொண்டிருக்கிறான். போலீஸ் ஸ்டேஷன்களில் சென்று அதிகாரம் செலுத்தியிருக்கிறான். எத்தனையோ பாங்கிகளில் பெரிய கொள்ளைகள் நடத்தியிருக்கிறான். இந்த அசகாய சூரனை என்ன செய்வதென அமெரிக்க சர்க்காருக்குத் தெரியவில்லை.

### தண்ணீர்ப் பஞ்சம்

உலகத்தின் பல பாகங்களிலும் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் கஷ்டத்தை உத்தேசித்தும், போதுமான புல் உணவு இல்லாததாலும் ஆயிரக்கணக்கான கால் நடைகளை அமெரிக்க சர்க்கார் அழித்துவிட்டார்களாம்.

தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்காக தென் ஐரோப்பாவிலுள்ள பிரதேசங்களில் வருண பூஜை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். சில கிராமங்களில் பெண்கள் இலைகளைமட்டும் உடுத்திக்கொண்டு தெருக்களில் பிரார்த்தனை நடத்தி, அந்த இலைகளை நதியில் எறிந்தனர். டிராகொவாட்ஸ் என்ற இடத்தில் ஒரு பாதிரியை சிலர் சேர்ந்து நதியில் தள்ளிவிட்டனர். நதி தேவதைக்குத் திருப்தி ஏற்படுவதற்கே இவ்வாறு செய்தார்களாம்.

---

# நன்கொடை வரவு

### கூறைநாடு

| | |
|---|---|
| ஸ்ரீமுகஞூ ஆவணிமீ 30உ நா. சுப்பிரமணிய முதலியார் பரிசத்திற்கு | 0-8-0 |
| கோயில் தெரு மாரிமுத்து முதலியார் கலியாணத்திற்கு | 0-8-0 |
| பட்டமங்கலத் தெரு தருமலிங்க முதலியார் பரிசத்திற்கு | 0-8-0 |
| பட்டமங்கலத் தெரு நடராஜ முதலியார் கல்யாணத்திற்கு | 0-8-0 |
| மார்கழிமீ 20உ குமரகட்டளைத் தெரு பக்கிரி முதலியார் வளையற் காப்புக்கு நன்கொடை | 0-8-0 |
| பவ வருஷம் வைகாசிமீ 3உ பட்டமங்கலத் தெரு, தருமலிங்க முதலியார் வளையற் காப்புக்கு நன்கொடை | 0-4-0 |
| கோயில் தெரு முருக முதலியார் பரிசத்திற்கு | 0-8-0 |
| 5உ கொமரகட்டளை தெரு ப. பா. ராமசாமி முதலியார் கல்யாணத்திற்கு | 0-8-0 |
| சுந்தர பெருமாள் கோயில் பக்கிரி முதலியார் குமாரத்திக்கு கூறைநாட்டில் நடந்த கல்யாணத்திற்கு நன்கொடை கொடுத்தது | 0-8-0 |
| ஆக கூடுதல் | 4-4-0 |

திருநெல்வேலி ஜில்லா, வீரவநல்லூரில் ஆ.மு. ஆறுமுக முதலியார் குமாரர் முத்தையாவுக்கும் சு. ஆவுடைநாயக முதலியார் குமாரி முத்தம்மாளுக்கும் 25-3-34ல் நடந்த திருமணத்தில் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 2-0-0

[மணமக்கள் நீடு வாழ்வார்களாக]

| | |
|---|---|
| புதுவை கதிர்காமம் ஏ.பு. தா. தங்கவேலு முதலியார் சிவபத மடைந்ததின் ஞாபகமாக அவரது புதல்வர் ஸ்ரீ த. பூங்காவன முதலியார் சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை | 0-4-0 |
| கதிர்காமத்தில் வதியும் கண்டாச்சிபுரம் க. சி. முத்துசாமி முதலியார் செங்குந்த மித்திரனுக்கு அளித்த நன்கொடை | 0-4-0 |
| வடாற்காடு ஜில்லா பூண்டி சோ. வெ. மகாலிங்க முதலியார் நமது சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை | 0-4-0 |
| கொடவாசல் ஜவுளி வர்த்தகர் சு. ஷ. கு. சண்முக முதலியார் வழங்கிய நன்கொடை | 0-8-0 |

---

# கிளர்ச்சி

### தேவிகாபுரம்

4-4-34 இரவு 7-மணிக்கு ஸ்ரீமான்கள் M. P. லிங்கப்ப முதலியார், வெ. அருணசல முதலியார் இவர்கள் முயற்சியால் ஸ்ரீ சு. முருகப்ப முதலியார், அ. குழந்தைவேலு முதலியார் இவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் M. சீனிவாச முதலியார் அவர்கள் 'சங்கத்தின் அவசியம்' என்பது பற்றியும், தலைச்சங்கப் பிரசாரகர் ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் 'வள்ளியம்மை திருமணம்' என்பது பற்றியும் உபந்யசித்தனர். இரவு 11-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது.

### சித்தருகாவூர்—புதூர்

13-4-34 இரவு 8-மணிக்கு சித்தருகாவூர் மதுரா புதூர் விநாயகர் கோவிலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் நமது பிரசாரகர் 'செங்குந்த சமூக முன்னேற்றம்' என்பது பற்றிப் பேசினார். சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 11-மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

### நெட்டப்பாக்கம்

27-4-34 இரவு 7-மணிக்கு ஸ்ரீ வ. சுப்புரத்தின முதலியார் ஆதரவினாலும் ஸ்ரீ புது. சதா. பொன்னுசாமி முதலியார் முயற்சியினாலும் கூடிய கூட்டத்தில் சங்கப் பிரசாரகர் ஸ்ரீ. ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் 'பக்தி' என்பதைப்பற்றி உபந்யசித்தனர். அவ்வூர் சமரச பஜனை கோஷ்டியாரின் பாராயணத்திற்குப் பின் இரவு 11½-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கரநயினார் கோவில்

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

பங்குனிமீ 18-19 தேதிகளில் தேனப்புரம் 2 வெ. தெருவிலும் 26 தேதி மாதாவின் கோவில் தெருவிலும், 27-28 தேதிகளில் பாலத்து தெருவிலும் முறையே ஒவ்வொரு தினத்திலும்இரவு 8-மணி முதல் 12-மணி வரை பாலக்காடு வித்வான் ஸ்ரீமான் கிருஷ்ண பிள்ளை அவர்கள் கந்தபுராணம் பிரசங்கித்தார்கள். கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த பொது ஜனங்களுக்கும் பொருள் உதவிசெய்த அன்பர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

S. பிச்சாண்டி முதலியார்.

# தென்னிந்திய மகாஜனபுத்தக சாலை

## புராணங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராணம் மூலம் 2பாகம் | 6 | 8 |
| ஷை வசனம் | 4 | 0 |
| ஷை வசனம் வேறு | 2 | 8 |
| உபதேச காண்டம் மூலம் | 2 | 8 |
| ஷை உரை | 5 | 8 |
| கந்த புராணச் சுருக்கம் | 0 | 10 |
| ஷை பொழிப்புரை | 3 | 0 |
| பெரியபுராணம்சூசனத்துடன் | 4 | 10 |
| ஷை வசனம் | 1 | 4 |
| திருவிளையாடல் புராணம் | 3 | 8 |
| ஷை வசனம் | 1 | 4 |
| வேம்பத்தூரார் திருவிளையாடல் குறிப்புடன் | 2 | 8 |
| தணிகைப்புராணம் குறிப்புடன் | 5 | 4 |
| விநாயக புராணம் | 5 | 0 |
| ஷை வசனம் | 4 | 0 |
| அருணசல புராணம் உரை | 2 | 8 |
| ஷை வசனம் | 1 | 0 |
| சீகாளத்தி புராணம் உரை | 3 | 8 |
| திருக்காளத்தி புராணம் | 3 | 0 |
| பேரூர்ப் புராணம் வசனத்துடன் | 2 | 8 |
| காஞ்சி புராண மூலம் | 2 | 8 |
| திருக்கழுக்குன்றப் புராணம் | 2 | 0 |
| கருட புராண வசனம் | 1 | 0 |
| வசவ புராண மூலம் | 1 | 8 |
| ஷை உரை | 8 | 0 |

## இதிகாசங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| வியாச பாரதம் ஆதி பர்வம் | 5 | 8 |
| சபா பர்வம் | 2 | 4 |
| விராட பர்வம் | 2 | 4 |
| உத்தியோக பர்வம் | 4 | 0 |
| வில்லி பாரதம் மூலம் | 3 | 8 |
| ஷை அரும்பதவுரையுடன் | 5 | 0 |
| ஷை வசனம் | 3 | 0 |
| மகாபாரதம் அரும்பதவுரையுடன் | 4 | 12 |
| பாரத வசனச் சுருக்கம் | 0 | 12 |
| சபா பர்வம் உரை | 3 | 0 |
| இராசசூயச் சருக்கம் உரை | 1 | 4 |
| வாரணவதச் சருக்கம் உரை | 1 | 0 |
| சூதுச் சருக்கம் உரை | 1 | 8 |
| நிரை மீட்சிச் சருக்கம் உரை | 1 | 4 |
| சல்ய, சௌத்தி பருவங்கள் | 1 | 8 |
| பெருந்தேவனார் பாரத மூலம் | 3 | 2 |
| நல்லாப் பிள்ளை பாரதம் 2 பாகம் | 10 | 0 |
| கம்ப ராமாயணம் 2 பாகம் | 1 | 0 |
| ஷை வேறு பதிப்பு | 8 | 0 |
| பால காண்டம் உரை | 3 | 8 |
| ஷை வேறு | 5 | 0 |
| சுந்தர காண்டம் உரை | 4 | 0 |
| ஷை வேறு | 5 | 0 |
| கிஷ்கிந்தா காண்டம் உரை | 4 | 8 |
| ஆரணிய காண்டம் உரை | 4 | 0 |
| யுத்த காண்டம் உரை | 10 | 0 |
| கம்ப ராமாயண வசனம் | 10 | 0 |
| ஷை ரப் | 7 | 0 |
| பாகவத வசனம் | 9 | 0 |

## அகராதிகளும்; நிகண்டுகளும்

| | ரூ. | அ. |
|---|---|---|
| தமிழ்ச் சொல் லகராதி (உதாரணங்களுடன்) | 18 | 8 |
| தமிழ் மொழி யகராதி (காரனேஷன்) | 10 | 0 |
| வீரமா முனிவர் சதுரகராதி | 3 | 0 |
| இங்லீஷ்—தமிழ் அகராதி | 3 | 0 |
| இங்கிலீஷ்—இங்லீஷ் டிக்ஷனரி | 5 | 8 |
| தமிழ்—இங்லீஷ் அகராதி | 6 | 0 |
| சூடாமணி நிகண்டு 12 தொகுதி | 1 | 8 |
| பிங்கல நிகண்டு உரை | 2 | 8 |
| உரிச்சொல் நிகண்டு உரை | 0 | 8 |
| பழமொழி அகராதி | 1 | 8 |

## சங்க நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சீவக சிந்தாமணி உரை | 10 | 0 |
| சிலப்பதிகாரம் உரை | 6 | 4 |
| மணிமேகலை அரும்பத உரை | 6 | 4 |



| | ரூ. | அ. |
|---|---|---|
| பத்துப்பாட்டு உரை | 5 | 0 |
| ஷை மூலம் | 1 | 0 |
| பெருங்கதை | 4 | 0 |
| அகநானூறு உரை | 4 | 8 |
| ஐங்குறு நூறு உரை | 2 | 0 |
| பதிற்றுப்பத்து உரை | 1 | 14 |
| பரிபாடல் உரை | 2 | 8 |
| புறநானூறு உரை | 5 | 10 |
| புறப்பொருள் வெண்பாமாலை உரை | 1 | 14 |
| கலித்தொகை மூலமும் உரையும் 3 பாகம் | 16 | 4 |
| நற்றிணை உரை | 5 | 0 |
| நாலடியார் உரை | 1 | 8 |
| பழமொழி உரை | 2 | 0 |
| திருக்குறள் (பரிமேலழகர் உரை) | 4 | 0 |
| ஷை பாக்கட் சைஸ் | 2 | 0 |
| ஷை மணக்குடவர் உரை | 2 | 0 |
| நான்மணிக் கடிகை யுரை | 0 | 8 |
| ஏலாதி உரை | 0 | 6 |
| இன்னா நாற்பது | 0 | 5 |
| இனிது நாற்பது | 0 | 5 |
| கார் நாற்பது | 0 | 5 |
| களவழி நாற்பது | 0 | 5 |
| முதுமொழிக் காஞ்சி | 0 | 5 |
| சிறுபஞ்ச மூலம் உரை | 0 | 12 |
| ஆசாரக் கோவை உரை | 0 | 8 |
| திரிகடுகம் உரை | 0 | 4 |
| திணைமொழி ஐம்பது உரை | 0 | 8 |
| திணைமாலை 150 உரை | 0 | 10 |
| ஐந்திணை 50 உரை | 0 | 4 |
| ஐந்திணை 70 உரை | 0 | 5 |
| இன்னிலை உரை | 1 | 0 |
| கல்லாடம் உரை | 3 | 0 |

## திருமுறைகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| மூவர் தேவாரம் அடங்கன்முறை | 15 | 0 |
| ஷை பண்முறை (அட்டவணையுடன்) | 2 | 8 |
| ஷை அடக்க விலைப் பதிப்பு | 2 | 8 |
| சுந்தரர் தேவார உரை | 8 | 8 |
| திருவாசக மூலம் | 1 | 8 |
| ஷை குறிப்புரையுடன் | 1 | 8 |
| திருவிசைப்பா திருப்பல்லாண்டு உரை | 1 | 0 |
| திருமுறை 8—11 | 4 | 8 |
| திருவருட்பா | 6 | 0 |
| திருப்புகழ் 3 பாகம் | 10 | 0 |
| ஷை படைவீடு | 8 | 0 |
| அருணகிரிநாதர் திருமுறைத் திரட்டு | 1 | 8 |

## இலக்கணம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| தொல்காப்பியம் மூலம் | 1 | 8 |
| எழுத்து—இளம்பூரணம் | 1 | 8 |
| சொல்—சேனாவரையம் | 3 | 8 |
| சொல்—இளம்பூரணம் | 3 | 0 |
| சொல்—தெய்வச்சிலையார் | 2 | 8 |
| பொருள்—நச்சினார்க்கினியம் 4 பாகம் | 20 | 0 |
| பொருள்—அகம், புறம் (இளம்பூரணம்) | 2 | 0 |
| புறப்பொருள் வெண்பாமாலை உரை | 1 | 4 |
| இறையனார் அகப்பொருள் உரை | 4 | 8 |
| யாப்பருங்கல விருத்தியுரை | 10 | 0 |
| யாப்பருங்கல காரிகை | 1 | 8 |
| ஷை வேறு | 1 | 2 |
| தண்டியலங்காரம் உரை | 1 | 14 |
| மாறனலங்காரம் உரை | 5 | 0 |
| இலக்கண விளக்கம் உரை | 5 | 8 |
| பஞ்ச இலக்கணம் மூலம் | 1 | 0 |
| நன்னூல் காண்டிகை உரை (காவலர்) | 1 | 12 |
| ஷை (கிருஷ்ணமாச்சாரியார்) | 1 | 8 |
| ஷை விருத்தியுரை | 1 | 12 |
| ஷை சங்கரநமச்சிவாயர் உரை | 2 | 0 |
| ஷை மயிலைநாதர் உரை | 3 | 2 |
| வெண்பாப் பாட்டியல் | 0 | 4 |

## வேதாந்த, சித்தாந்த நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| வேதாந்தசாரம் | 0 | 10 |
| ஆத்ம புராண வசனம் | 8 | 0 |
| விசார சாகரம் | 3 | 4 |
| நியாயப்பிரகாசம் தருக்கநூல் | 4 | 0 |

| | | |
|---|---|---|
| கைவல்யம் உரையுடன் | 3 | 0 |
| கைவல்ய நவநீத வசனம் | 1 | 8 |
| வேதாந்த சூடாமணி | 1 | 8 |
| சசிவர்ண போதம் உரை | 1 | 0 |
| வேதாந்த பரிபாஷை | 0 | 10 |
| சித்தாந்த பரிபாஷை | 0 | 8 |
| சிவஞான போதமாபாடியம் | 7 | 0 |
| ஷை சிற்றுரை | 1 | 0 |
| ஷை வசனாலங்கார தீபம் | 3 | 8 |
| சிவஞானசித்தியார் சுபக்கம் | 4 | 8 |
| ஷை பரபக்கம் | 2 | 8 |
| சித்தாந்த சாத்திரம் 14 மூலம் | 2 | 8 |
| சித்தாந்த சிகாமணி | 2 | 8 |

## வைஷ்ணவ நூல்கள்

| | | |
|---|---|---|
| நாலாயிரப் பிரபந்தம் | 3 | 8 |
| திருவாய்மொழி | 1 | 0 |
| அஷ்டப் பிரபந்தம் விருத்தியுரை | 8 | 8 |

## பிரபந்தங்கள்

| | | |
|---|---|---|
| பட்டணத்தார் பிரபந்தம் உரை | 3 | 8 |
| ஷை பொழிப்புரை | 1 | 8 |
| தாயுமானவர் விருத்தியுரை | 4 | 0 |
| குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம் உரை | 3 | 8 |
| தக்கயாகப்பரணி | 4 | 0 |
| நைடதம் - விருத்தியுரை | 4 | 0 |
| ஷை வேறு பதிப்பு | 2 | 8 |
| ஷை மூலம் | 1 | 8 |
| நளவெண்பா உரை | 1 | 8 |
| செங்குந்தர் பிரபந்தத் திரட்டு | 2 | 0 |
| ஷை ராப்பர் பைண்டு | 1 | 0 |

## கட்டுரை நூல்கள்

| | | |
|---|---|---|
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | 2 | 8 |
| பெண்ணின் பெருமை | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு | 1 | 0 |
| இராமலிங்கர் திருவுள்ளம் | 1 | 0 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் | 0 | 8 |
| சைவத் திறவு | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் | 0 | 4 |
| சீர்திருத்தம் | 0 | 8 |
| இமயமலை அல்லது தியானம் | 0 | 6 |
| நாயன்மார் | 0 | 8 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் | 0 | 4 |
| மரணத்தின்பின் மனிதர் நிலை | 2 | 4 |
| அறிவுரைக் கொத்து | 2 | 4 |
| மூப் பெண்மணிகள் வரலாறு | 1 | 0 |
| தனித் தமிழ்க் கட்டுரைகள் | 1 | 4 |
| பன்னிரு கட்டுரை | 0 | 12 |
| கட்டுரைக் களஞ்சியம் | 0 | 12 |
| தமிழ்ப் புலவர் வரலாறு 3 பாகம் | 1 | 10 |
| திராவிடப் பிரகாசிகை | 4 | 0 |
| பாண்டிய மன்னர் சரித்திரம் | 1 | 2 |
| சோழ மன்னர் சரித்திரம் 3 பாகம் | 1 | 14 |
| புத்த சாத்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் | 0 | 12 |
| விவேகாநந்தர் சரித்திரம் 3 பாகம் | 7 | 0 |
| ராமகிருஷ்ண பரமஹம்சர் சரித்திரம் | 3 | 0 |
| ஷை யார் உபதேசம் | 2 | 0 |

இவையன்றி அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை, மாலை, சதகம் முதலியவைகளும் சங்கீதம், வைத்தியம், சோதிடம், சம்பந்தமான நூல்களும், பலவகை நாவல்களும் கிடைக்கும்.

தென்னிந்திய மகாஜன புத்தகசாலை,
151, பவழக்காரத் தெரு, சென்னை.

208447

# மே மாதத்து சந்தா வசூல்

**கீழப்பெரும்பள்ளம்**

| | | | |
|---|---|---|---|
| S. V. முத்துசாமி௸ | 3 | 0 | 0 |

**மேலப்பெரும்பள்ளம்**

| | | | |
|---|---|---|---|
| வ. பொன்னுசாமி௸ | 3 | 0 | 0 |
| கொ. ஐயாசாமி௸ | 3 | 0 | 0 |

**ஆக்கூர்**

| | | | |
|---|---|---|---|
| சு. சுப்பு௸ | 1 | 8 | 0 |
| ச. கோவிந்தசாமி௸ | 1 | 8 | 0 |
| சு. இராமலிங்க௸ | 3 | 0 | 0 |
| S. மாணிக்க௸ | 1 | 8 | 0 |

**காட்டுச்சேரி**

| | | | |
|---|---|---|---|
| அ. சோமசுந்தர௸ | 1 | 8 | 0 |
| S. முத்துக்குமரு௸ | 1 | 8 | 0 |
| சு. த. அருணசல௸ | 6 | 0 | 0 |

**காரைக்கால்**

| | | | |
|---|---|---|---|
| மு. ரு ச. ராஜகோபால்௸ | 4 | 8 | 0 |
| வீ. சு. க. சோமசுந்தர௸ | 4 | 8 | 0 |
| உ. துரைசாமி௸ | 3 | 0 | 0 |
| மு. ரு ம. மு. மலைப்பெருமாள்௸ | 4 | 8 | 0 |
| மா. பொ. சொக்கலிங்க௸ | 4 | 8 | 0 |
| சொ. முருகையா௸ | 4 | 8 | 0 |
| அ. சபாபதி௸ | 4 | 8 | 0 |
| A. சுப்பைய பண்டாரம் | 2 | 0 | 0 |
| மா. மு. கந்தசாமி௸ | 2 | 0 | 0 |
| அ. சபாபதி௸ | 1 | 14 | 0 |
| ச. கோவிந்தசாமி௸ | 1 | 8 | 0 |

**திருநள்ளாறு**

| | | | |
|---|---|---|---|
| A. ஆறுமுக௸ | 1 | 8 | 0 |

**திருமலைராயன் பட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| வ. ஆ. ரங்கநாத௸ | 4 | 14 | 0 |
| வீ. குரு. சு சுப்பராய௸ | 4 | 8 | 0 |
| வ. முத்துப்பெருமா௸ | 4 | 14 | 0 |
| வீ. குரு. மு. முத்தைய௸ | 4 | 8 | 0 |
| வ. சு. சோமசுந்தர௸ | 3 | 0 | 0 |
| வீ. குரு. வீ. கோவிந்தசாமி௸ | 1 | 8 | 0 |
| சா. ருத்திராபதி௸ | 4 | 8 | 0 |
| கோ. சவுரிராஜ௸ | 3 | 0 | 0 |
| க. மு சு. சுப்பராய௸ | 4 | 8 | 0 |

**வாழுமங்கலம்**

| | | | |
|---|---|---|---|
| த. க. பழநியாண்டி௸ | 1 | 0 | 0 |
| T. S. சாமிக்கண்ணு௸ | 1 | 8 | 0 |
| கு. ப. குழந்தைவேல்௸ | 6 | 0 | 0 |
| கொ. வ. வீரப்ப௸ | 9 | 0 | 0 |

**நாகப்பட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| அ. ப முத்துக்குமாரசாமி௸ | 1 | 8 | 0 |
| மு. முனியாண்டி௸ | 3 | 0 | 0 |
| M. கோவிந்தசாமி௸ | 3 | 0 | 0 |
| ப. ராக்கப்ப௸ | 4 | 8 | 0 |

**பொருள்வைத்தசேரி**

| | | | |
|---|---|---|---|
| K. M. அண்ணாமலை௸ | 1 | 8 | 0 |

**திருப்பூண்டி**

| | | | |
|---|---|---|---|
| மா. இராமு௸ | 4 | 8 | 0 |
| சி. த. இராமசாமி௸ | 4 | 0 | 0 |
| வெ. முருக௸ | 4 | 14 | 0 |

**மணக்குடி**

| | | | |
|---|---|---|---|
| வெ. ச. இரங்கசாமி௸ | 8 | 0 | 0 |
| V. R. கணபதி௸ | 8 | 0 | 0 |

**திருவிடமருதூர்**

| | | | |
|---|---|---|---|
| K. கிருஷ்ணசாமி௸ | 1 | 8 | 0 |
| K. S. ரங்கசாமி௸ | 1 | 8 | 0 |
| P. இராமசாமி௸ | 1 | 8 | 0 |
| S. முருகைய௸ | 1 | 8 | 0 |
| S. நாகப்ப௸ | 1 | 8 | 0 |

**பாமணி**

| | | | |
|---|---|---|---|
| அ. முருகைய௸ | 1 | 8 | 0 |
| அ. கோவிந்தசாமி௸ | 1 | 8 | 0 |

**தோப்புத்துறை**

| | | | |
|---|---|---|---|
| பா. முத்து௸ | 1 | 8 | 0 |
| ச. கோவிந்தசாமி௸ | 6 | 0 | 0 |

**திருவாரூர்**

| | | |
|---|---|---|
| P. முத்துக்குமாரசாமி௸ | 4 | 8 |
| தி. சு. அரு. குமாரசாமி௸ | 4 | 8 |
| தி. கு. ந. நடேச௸ | 4 | 8 |
| S. முருகைய௸ | 1 | 8 |
| தி. க. ச. வே. மு. முருகைய௸ | 4 | 8 |
| P. பக்கிரி௸ | 3 | 0 |
| கோ. கந்தசாமி௸ | 4 | 8 |
| தி. சுப்பிரமணிய௸ | 4 | 8 |
| V. M. மொட்டையப்ப௸ | 4 | 8 |
| விரு. சுப்பு௸ | 4 | 8 |
| ராம. ச. ராமலிங்க௸ | 4 | 8 |
| தி. மு. ந. நடேச௸ | 1 | 8 |
| சொ. கா. மு. காயாரோகண௸ | 3 | 0 |

SENGUNTHA MITRAN Regd. No. M. 15

# மே மாதத்து சந்தா வருல்

| | | |
|---|---|---|
| **மன்னார்குடி** | | |
| ரா. ப. இராமலிங்க௸ | 3 | 0 |
| சு. குஞ்சு௸ | 3 | 0 |
| ச. க. சட்டையப்ப௸ | 4 | 8 |
| **கோடவாசல்** | | |
| நெ. சா. தம்புசாமி௸ | 3 | 0 |
| ஆ. தி. நடேச௸ | 3 | 0 |
| ந. க. ரத்தினவேல்௸ | 3 | 0 |
| ப. தி. சி. கந்தசாமி௸ | 1 | 8 |
| R. நாராயணசாமி௸ | 3 | 0 |
| ஆ. தி. சி. ஆறுமுக௸ | 4 | 8 |
| பா. கிருஷ்ண௸ | 1 | 8 |
| **வலங்கைமான்** | | |
| ஆ. அ. ஒ. குப்புசாமி௸ | 4 | 8 |
| சொ. ச. கலியபெருமாள்௸ | 3 | 0 |
| க. செ. பாலகிருஷ்ண௸ | 3 | 0 |
| சி. சு. முருகைய௸ | 1 | 8 |
| **அய்மாபேட்டை** | | |
| க. சி. ரத்தினசாமி௸ | 1 | 8 |
| **மாரியம்மன் கோவில்** | | |
| கு. ஏ. ப. உத்திராபதி௸ | 1 | 8 |
| கு. மா. ஆறுமுக௸ | 1 | 8 |
| **திருவையாறு** | | |
| சி. நா. பழனியப்ப௸ | 6 | 0 |
| **தஞ்சாவூர்** | | |
| சு. ஆறுமுக௸ | 1 | 0 |
| சு. கோவிந்தசாமி௸ | 1 | 0 |
| T. சிவப்பிரகாச௸ | 3 | 0 |
| **வெங்காரம்பேட்டை** | | |
| A. இராமசாமி௸ | 4 | 8 |
| **பண்டாரவாடை நெடுந்தெரு** | | |
| செ. வெங்கடாசல௸ | 1 | 8 |
| சா. சந்நியாசி௸ | 1 | 0 |
| **உள்ளிக்கடை** | | |
| நா. வாசுதேவ௸ | 3 | 0 |
| ம. சோமசுந்தர௸ | 2 | 0 |
| ம. கந்தசாமி௸ | 4 | 8 |
| **பாபநாசம்** | | |
| த. பழனியாண்டி௸ | 1 | 8 |
| **சுந்தரப்பெருமாள் கோவில்** | | |
| க. சபாபதி௸ | 3 | 0 |
| சொ. கோவிந்தசாமி௸ | 3 | 0 |
| ச. ஆறுமுக௸ | 3 | 0 |
| **திருபுவனம்** | | |
| மா. குமாரசாமி௸ | 3 | 10 |
| சி. வையாபுரி௸ | 3 | 0 |
| ப. கைலாச௸ | 3 | 10 |
| **அம்மாசத்திரம்** | | |
| ரா. சிங்காரவேலு௸ | 1 | 0 |
| **திருநாகேஸ்வரம்** | | |
| சொ. தெ. சொக்கலிங்க௸ | 3 | 0 |
| அ. சுப்பிரமணிய௸ | 3 | 0 |
| ஆ. ரா. கோவிந்த௸ | 3 | 0 |
| T. ஆறுமுக௸ | 1 | 8 |
| செ. சோமசுந்தர௸ | 5 | 2 |
| ப. சா. வீரப்ப௸ | 3 | 10 |
| கு. மு. சு. கோவிந்தசாமி௸ | 1 | 8 |
| சி. பரிமேலழக௸ | 1 | 8 |
| ந. வீரப்ப௸ | 3 | 0 |
| வ. ந. உத்திராபதி௸ | 3 | 0 |
| S. பொன்னம்பல௸ | 1 | 8 |
| **குற்றாலம்** | | |
| K. L. ராமலிங்க௸ | 4 | 8 |
| V. முருகேச௸ | 3 | 0 |
| **கோரநாடு** | | |
| ஆ. சே. ஆ. அப்புலிங்க௸ | 5 | 0 |
| ச. கு. பாவாடை௸ | 3 | 0 |
| **திருமருகல்** | | |
| சா. ரா. சிங்கார௸ | 5 | 2 |
| S. முருகைய௸ | 4 | 8 |
| தொ. ரா. நடராஜ௸ | 2 | 8 |
| சு. ரா. ம. முத்தைய௸ | 2 | 0 |
| நா. சபாபதி௸ | 5 | 0 |
| சீ. செ. துரைசாமி௸ | 2 | 0 |
| பி. அ. விருத்தாசல௸ | 3 | 0 |
| சி. தி. சோமசுந்தர௸ | 2 | 0 |
| **புத்தகரம்** | | |
| S. பக்கிரி௸ | 1 | 8 |
| A. முத்துக்குமர௸ | 1 | 8 |

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31 Armenian Street, Madras, and is printed by A. Rangaswamy at The Progressive Printers, 2/17, Coral Merchant Street, Madras.